உ

காமாக்ஷியை நம:

मूककवि प्रणीत

# आर्या शतकम्।

மஹாஞான மூக கவி

இயற்றிய

# ஆர்யா சதகம்.

(மூக பஞ்சசதீயின் முதல் பாகம்.)

மூலம் நாகரத்திலும் தமிழிலும்

'ஸௌந்தர்ய லஹரீ' 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்'

இவற்றை மொழிபெயர்த்த

G. V. கணேச அய்யர் B. A., B. L.,

எழுதிய

பதவுரை, விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

கும்பகோணம்

ஸ்ரீ ஜநார்த்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸில்

அச்சி... ...டு, பிரசுரிக்கப்பட்டது.

1937

All Rights Reserved] [விலை அணா எட்டு.

28 JUL 1937 MADRAS

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# அவதாரிகை.

அம்பிகையைப்பற்றிய ஸ்தோத்திரங்களைச் செய்தவர்களில் ஸ்ரீ மதாசார்யாள் முதன்மையானவர்களென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபமுமிருக்காது. அவருக்கு அடுத்த படியிலிருப்பவராக மூக கவியைச் சொல்லவேண்டும். அதாவது, மூக கவியை விடச் சிறந்த வாக் விசேஷத்தையுடைய கவி யாரென்று கேட்டால் நமது ஆசார்யாளைச் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒருவரையும் சொல்லமுடியாது.

மூகருடைய ஜீவிய சரித்ரத்தைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்வதற்கு நமக்கு ஆதாரங்கள் யாதொன்றுமில்லை. ஊமையொருவர் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷியின் ஸன்னிதியிலிருந்து கொண்டு அம்பிகையை உபாஸித்துவந்தாரென்றும் அப்போது ப்ரஸன்னமான அம்பிகையின் உச்சிஷ்டம் தெறித்து அந்த உச்சிஷ்டமே அம்ருதரூபமாக ஏற்பட்டு அவருக்கு உயர்ந்த வாக்கை உண்டாக்கவும் அவர் மஹா கவியாக ஆனாரென்றும் தற்காலம் காமகோடி பீடத்தில் விளங்கிவரும் ஸ்ரீ சங்கராசார்யாள் சொல்லியிருக்கிறார்கள். (நன்மொழிகள்—பக்கம் 103.)

தவிர, காஞ்சீ ஸ்ரீ காமகோடிபீடத்திய குரு பரம்பரையில் (இரண்டாவது) வித்யாகனர் என்பவருக்கு அடுத்தாற்போல் வந்த (நான்காவது) சங்கரர் என்பவர்தான் மூக கவியென்பதாக ஒரு அபிப்ராயமும் உண்டு. இவர் ஆதியில் ஊமையாக இருந்ததாகவும் ஸ்ரீவித்யாகனேந்த்ர ஸரஸ்வதியவர்களுடைய அனுக்ரஹத்தினால் அவ்விதக் குறை நீங்கப் பெற்று மஹா கவியாக மாறி அவருக்கு அடுத்தாற்போல் காமகோடி பீடத்திலும் இருந்து விளங்கினாரென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவருடையபெயர்மூகசங்கரரென்றும் சொல்லப்படும். இவர் . D. 398ல் பீடாரோஹணம்

செய்து A. D. 437ல் ஸித்தியடைந்ததாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மூகரால் இயற்றப்பட்ட ஐந்நூறு (ச்லோகங்கள்) என்பதாக இவருடைய ஸ்தோத்ரத்தை 'மூகபஞ்சசதீ' என்று ஆதிகாலம் முதல் நாளது வரையில் சொல்வது வழக்கமே தவிர இந்த ஸ்தோத்ரத்திற்கு வேறு பெயர் கிடையாது. இது நூறு, நூறு ச்லோகங்கள் கொண்டதாக ஐந்து சதகங்கள் அடங்கியது. அவற்றின் பெயர்கள் ஆர்யா சதகம். பாதாரவிந்த சதகம், மந்தஸ்மித சதகம், கடாக்ஷ சதகம், ஸ்துதி சதகம் என்பவை. முதலாவதும் கடைசியதும் ஸ்ரீ காமாக்ஷியைப் பொதுவாக ஸ்தோத்ரம் செய்கையில், பாக்கி மூன்றும் முறையே ஸ்ரீ காமாக்ஷியினுடைய பாதாரவிந்தத்தையும், புன் சிரிப்பையும், கடாக்ஷத்தையும் வர்ணிக்கின்றன. ச்லோகங்களின் வ்ருத்தங்களும் ஒவ்வொரு சதகத்திற்கும் வெவ்வேறாக அமைந்திருக்கின்றன.

மூக கவியினுடைய வாக்கின் மாதுர்யமானது ச்லோகங்களின் மூலத்தை வாசித்து அறிகின்றவர்களுக்குத்தான் தெரிய வரும். பதங்களெல்லாம் ஜிலுஜிலென்றும் மிகவும் லலிதமாயும் காதுக்கு இனிமையாயும்அமைந்திருப்பதுடன் அர்த்த பாவமானது பக்தியைப் பெருகச்செய்து அம்பிகையின் மனதிலுள்ள கருணைக் கடலை கொந்தளிக்கும்படியாகச் செய்யக்கூடியவிதமாயிருக்கிறது. ஒவ்வொரு ச்லோகத்திலும் ஸ்ரீகாமாக்ஷி, காமகோடிபீடம், ஏகாம்ரநாதர், காஞ்சீ, கம்பாநதீ, இம்மாதிரியான காஞ்சீபுரத்தைப்பற்றிய அம்சங்கள் ஒன்றுவது சொல்லப்பட்டிருப்பது இந்த ஸ்தோத்ரத்தின் அழகுகளில் ஒன்றாகும்.

இந்த ஸ்தோத்ரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டஸ்ரீ காமாக்ஷிதேவியானவள் ஸ்ரீ லலிதாம்பிகையே.

'பச்சாத் சதுர்புஜா ஜாதா ஸா பரா த்ரிபுராருணா
பாசாங்குசேக்ஷு கோதண்ட பஞ்சபாண லஸத்கரா |
லலிதா ஸைவ காமாக்ஷீ காஞ்ச்யாம் வ்யாவிர்பபூவ ஹ ||'

பக்தர்களுடைய காமங்களையெல்லாம் தன் த்ருஷ்டி பட்ட மாத்திரத்திலேயே பூர்த்தி செய்விப்பதால் அம்பிகைக்கு காமாக்ஷீ என்ற பெயர் ஏற்பட்டது.

'யத் யத் வாஞ்சந்தி தத்ரஸ்த்தா: மனஸைவ மஹாஜனா: |
ஸர்வஜ்ஞா ஸாக்ஷிபாவேன தத்தத் காமான் அபூரயத் ||
தத் த்ருஷ்ட்வா சரிதம் தேவ்யா: ப்ரம்ஹா லோகபிதாமஹ: |
காமாக்ஷீதி ததாபிக்யாம் ததௌ காமேச்வரீதி ச ||'

(லலிதோபாக்யானம்)

காஞ்சீக்ஷேத்ரத்தின் மஹிமையானது வர்ணனையிலடங்காதது.

'நேத்ரத்வயம் மஹேசஸ்ய காசீ காஞ்சீ புரீத்வயம் |'

ப்ரளயகாலத்திலும் அழிவில்லாதது. ஸ்ரீசக்ராகாரமாக அமைக்கப்பெற்றது. ஸ்ரீ காமாக்ஷியானவள் அங்கு காமகோடிபீடத்தில் வீற்றிருந்து பக்தானுக்ரஹம் செய்துகொண்டிருக்கிறாள். அம்பிகையின் பதியான காமேச்வரரானவர் அங்கு ஏகாம்ரநாதர் என்ற பெயருடன் விளங்கிக்கொண்டிருக்கிறார். ஈச்வரனுடைய பெயரில் குறிக்கப்பட்ட ஏகாம்ரமானது (ஒற்றை மாமரமானது) இன்னமிருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆம்ரத்தின் ஸ்வரூபமானது

'சிவபீஜ ஸமுத்பூதம் வேதசாகாபிருஜ்வலம் |
ம்ருகண்டுதனயாதாரம் ரஸாலம் தம் நமாம்யஹம் ||'

என்றபடி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய ஸ்ரீ க்ருஹத்தின் வாயுபாகத்தில் ருத்ரகோடியில் ஸ்ரீ ஏகாம்ரநாதருடைய ஆலயமும் ஏகாம்ரமும், ஆக்னேய பாகத்தில் ஸ்ரீ புண்யகோடியில் ஸ்ரீ வரதராஜருடைய ஆலயமும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

'ஆதி ஸ்ரீமந்திரஸ்யாஸ்ய வாயுபாகே மஹேசிது: |
விஸ்த்ருதம் புவனச்ரேஷ்டம் கல்பிதம் பரமேஷ்டினா |
ஸ்ரீக்ருஹஸ்யாக்னிபாகே து விசித்ரம் விஷ்ணுமந்திரம் ||'

பரப்ரம்ஹஸ்வரூபிணியான மஹா காமேச்வரியானவள் ஸ்ரீகாமாக்ஷியாகவும், (ஸ்ரீ ஏகாம்ரநாதரென்ற) ஸ்ரீமஹாகாமேசஸ்வரூபிணியாக

வும், (ஸ்ரீ வரதராஜரென்ற) ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயுமிருப்பதுடன் ஸ்ரீ காமகோடியில் ஸ்ரீகாமராஜபீடத்தில் பிலாகாச ரூபிணியாயும் விளங்கிக்கொண்டிருக்கிருள்.

இந்த மஹாபிலமானது நாதபிந்து யுக்தமான பரமாகாச ஸ்வரூபமென்றும், ப்ரம்ஹ சரீரமென்றும், ஜகத்காமகலாகாரமென்றும் பலவிதமான பெயர்களால் குறிக்கப்படும். அம்பாள் பிலாகாச ஸ்வரூபிணியாயிருக்கையில் லோககண்டகனுன பந்தகாஸுரன் என்பவனை ஸம்ஹரிப்பதற்காக கன்யகாரூபமாய் வெளியில் வந்ததும், அவனுடைய ஸம்ஹாரமானபிறகு அம்பிகையின் கட்டளையால் அந்த மஹாபிலத்தின் த்வாரத்தின் பேரில் காயத்ரீ ஸ்வரூபமான மண்டபமானது தேவதைகளால் கட்டப்பட்டு பிலத்திற்கு மறைவிடமாயிருப்பதும், மற்ற விஷயங்களும் 'ஸ்ரீ காமாக்ஷீவிலாஸ'த்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

'காயத்ரீ மண்டபாதாரம் நாபிஸ்தானம் புவ: பரம் |
புருஷார்த்தப்ரதம் சம்போ: பிலப்ராந்தம் நமாம்யஹம் ||'

இந்த பிலத்தில் ஆகாசரூபிணியாயிருந்த அம்பாளுடைய உக்ரஸ்வரூபத்தை சமனம் செய்வதற்காக ஸ்ரீ மதாசார்யாளால் ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டாபனம் செய்யப்பட்டு அம்பாள் அவ்விடத்தில் ஆகர்ஷணம் செய்யப்பட்டு அங்கு ஸான்னித்யத்தோடிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் கைலாஸத்தில் அம்பிகையானவள் லீலையாகத் தன் பதியின் நேத்திரங்களைத் தன் கைகளால் மறைக்கவும், அந்த ஒருக்ஷணத்தில் லோகங்களிலெல்லாம் அந்தகாரமேற்பட்டு தத்தளித்துக்கொண்டிருப்பதைப் பார்த்த பரமசிவன் அம்பிகையின் மீது கோபிக்கவும், அதற்கு விமோசனமாக காஞ்சீபுரியில் தன்னைக்குறித்துத்தவம்செய்து மீண்டும் தன்னை அடையுமாறு சொல்லப்பட்ட தேவியானவள் அவ்விதம் காஞ்சிக்குவந்து கடினமான நியமத்தோடு ஆம்ர மரத்தினடியில் மணலைக்கொண்டு லிங்க

மூர்த்தியைக் கல்பித்து கடுந்தவமியற்றுகையில், அம்பிகையின் ப்ரேமாதிசயத்தின் அளவைக்கண்டானந்திக்க எண்ணங்கொண்ட பரமேச்வரன் கங்கையையழைத்து ப்ரவாஹரூபமாய் அம்பிகையின் தவத்திற்கு இடையூறுசெய்யும்படிச்சொல்லவும், அப்படியே கங்கையானவள் பயங்கரமான ப்ரவாஹமாய்வந்து அம்பிகை தவம்செய்யுமிடத்தை நெருங்கவும் அம்பாள் லிங்கரூபமாயிருக்கும் தன்பதிக்கு ஆபத்து நேரிடுமோவென்று பயந்து கலங்கி வேறொன்றும் செய்வதற்குத் தோன்றாமல் தன் கைவளைகள் பதியவும் இருஸ்தனங்கள் குழையவும் தன்பதியைக் கட்டி ஆலிங்கனம் செய்தவுடன் அதினால் பரமானந்தமடைந்த பரமேச்வரன் ப்ரஸன்னனாகி ப்ரவாஹத்தைத்தடுத்து அம்பிகையின் அபீஷ்டத்தைக் கொடுத்ததாகவும் சொல்லப்படும். [இந்த நதியினால் அம்பிகைக்கு கம்பம் (நடுக்கம்) உண்டான காரணத்தைக்கொண்டு அதற்கு கம்பா என்று பெயர் ஏற்பட்டது.]

இங்குள்ள பரமசிவனுடைய லிங்கமூர்த்தியானது அம்பாளால் ஆலிங்கனம் செய்யப்பட்டபோது அம்பாளுடைய ஸ்தன, கங்கணங்கள் அழுந்தியதினால் ஏற்பட்ட அடையாளங்களோடிருப்பதாகச் சொல்லப்படும்.

'உமாலிங்கன ஸங்க்ராந்த குசகங்கணமுத்ரிதம் |
லிங்கம் ஏகாம்ரநாதஸ்ய ஸைகதம் ஸமுபாஸ்மஹே ||'

இவ்விதமான லீலைகள் நடந்த புண்யக்ஷேத்ரமாகிய காஞ்சியில், பக்தகோடிகளுக்கு ஸமஸ்தமான காமங்களையும் கொடுக்கும் கருணாரூபிணியான ஜகன்மாதாவானவள் ஸ்ரீ காமாக்ஷீ என்ற அஸாதாரணமான நாமத்துடன் பக்தானுக்ரஹார்த்தமாக விளங்கிக்கொண்டிருக்கிறாள். அப்பேர்ப்பட்ட பரதேவதையின் க்ருபையை அடைவதற்கு மூக கவியால் அருளிச்செய்யப்பட்ட இந்த 'பஞ்சசதீ' என்ற ஸ்தோத்ரமானது முக்யமான ஸாதனமாகும். வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் அம்பிகையினிடம் பக்தியையும் பெருகச்செய்யும் இந்த திவ்யமான ஸ்தோத்ரத்தை யாவரும் எளிதிலறியும் விதமாக தமிழில் மொழிபெயர்த்து இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. பக்தர்களனைவரும் இதை வாசித்து மூககவியினுடைய பேருபகாரத்

தினுல் ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரியாகிய ஸ்ரீ காமாக்ஷியின் ஸ்வரூப ஞானமடைந்து அவளுடைய க்ருபைக்குப் பாத்ரர்களாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இக்ஷு கோதண்ட புஷ்பேஷு பாசாங்குச லஸத்கராம் |
உத்யத்ஸூர்ய நிபாம் வந்தே மஹாத்ரிபுர ஸுந்தரீம் ||
விச்வகாரண நேத்ராட்யாம் மஹாத்ரிபுரஸுந்தரீம் |
பந்தகாஸுர ஸம்ஹர்த்ரீம் காமாக்ஷீம் தாமஹம் பஜே ||
ஸ்வர்ணாங்கீம் ரத்னபூஷாட்யாம் சுகஹஸ்தாம் சுஸ்மிதாம் |
காஞ்சீ நிவாஸினீம் வந்தே காமாக்ஷீம் காமிதார்த்ததாம் ||

ஸ்ரீ காமாக்ஷியை நம:

# 'மூகபஞ்சசதீ'

1. कारणपरचिद्रूपा काञ्चीपुरसीम्नि कामपीठगता ।
काचन विहरति करुणा काश्मीरस्तबककोमलाङ्गलता ॥

காரண பரசித்ரூபா
காஞ்சீபுரஸீம்னி காமபீடகதா ।
காசன விஹரதி கருணா
காச்மீர ஸ்தபக கோமளாங்கலதா ॥

காரண பரசித்ரூபா— காரணபரசித் ரூபிணியும், காஞ்சீபுர ஸீம்னி—காஞ்சீபுரத்தின் எல்லைக்குள் (காஞ்சீபுரத்தில் இருக்கும்), காமபீடகதா—காமகோடி பீடத்திலிருப்பவளும், காச்மீரஸ்தபக கோமளாங்கலதா—குங்குமப்பூவின் கொத்துப்போல் ம்ருதுவான சரீரத்தையுடையவளுமான, காசன—ஏதோ ஒரு (வர்ணனையிலடங்காத), கருணா—கருணா ரூபிணியானவள், விஹரதி—விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

1. சித் என்றால் ஞானம், உணர்ச்சி என்றர்த்தம்.

2. நிஷ்களமும் நிருபாதிகமுமான பரப்ரம்ஹமானது பரா ஸம்வித்ரூபமானது. இதையேதான் பர சித்ரூபமென்று சொல்லப்படும். இப்படியிருக்கும்போது அது யாதொருவிதமான உணர்ச்சியாவது நினைவாவது இல்லாத நிலையோடிருக்கும். அதற்கு அஹம் (நான்) என்றாவது, இதம் (இது, அதாவது தன்னைத் தவிர்த்ததான ஒன்று) என்றாவது பாவங்கள் தனியாக அப்போது கிடையாது. அதாவது, அவ்விரண்டு பாவங்களும் இரண்டறக் கலந்து அவற்றின் பாகுபாடில்லாமல் இருப்பது (நிர்குண) பரப்ரம்ஹத்தின் ஸ்வரூபம்.

3. இதையேதான் சிவசக்தி ஸாமரஸ்யமான ரூபமென்று

சொல்லப்படும். இவையிரண்டில் சிவனென்பது பரப்ரம்ஹத்தின் ப்ரகாசாம்சமென்றும் சக்தியென்பது விமர்சாம்சமென்றும் சொல்லப்படும். திரும்பவும் சித் என்பதே சிவனென்றும் ப்ரகாசாம்சமென்றும் சொல்லப்படும். விமர்சாம்சமான சக்தியானது இருவகைப்பட்டது. பரப்ரம்ஹத்தில் சிவனோடு ஆமர்சமாக (இறண்டற) கலந்திருக்கும்போது அது ஸூக்ஷ்மமான ரூபத்தோடிருக்கிறது. அப்போது அதை சித்ரூபிணீ, சைதன்யரூபா என்று சொல்லப்படும். [ரூபமென்ற பதத்தின் விசேஷ மென்னவென்றால் சித்தாக இருந்த போதிலும் (பிறகு ஜகத்தாகப் பரிணமிப்பதால்) அதினின்றும் வேறுபட்டது போன்றது என்பது தாத்பர்யம்.] ஆகவே சிவனை சித் என்றும் சக்தியை சித்ரூபிணியென்றும் சொல்லப்படும். இவ்விரண்டும் பரப்ரம்ஹத்தில் தனித்தனியாக இராமல் சேர்ந்திருப்பதால் பரப்ரம்ஹத்தை ப்ரகாச விமர்ச ஸாமரஸ்ய ரூபமென்று சொல்லப்படும்.

4. ப்ரளயகாலத்தில் ஸகல ஜகத்தும் நசித்துப்போய் ப்ரம்ஹம் மட்டும் எஞ்சியிருக்கும்போது அதற்கு வேறு வஸ்துக்கள் தேவையில்லாமல் தன்னை மறந்து ஸ்வாத்மாராமமாய் நிருபாதிக ஸம்வித் ரூபமாயிருக்கிறது. பிறகு ப்ராணிகளுடைய பூர்வ கர்மாக்களின் விசேஷத்தினால் ஸ்ருஷ்டி ஏற்படவேண்டிய ஸமயம் வரும்போது ப்ரம்ஹத்திற்கு ஒருவிதமான ஸ்ருஷ்ட்யோன்முகமான உணர்ச்சி உண்டாகி (முந்தி இரண்டறக்கலந்திருந்த) அதினுடைய ப்ரகாச, விமர்சாம்சங்கள் எழுச்சியடைகின்றன. அப்போது ப்ரகாசாம்சமானது அனன்யோன்முகமான அஹம் என்ற பாவத்தோடிருக்கையில் விமர்சாம்சமான சக்தியானது இதம் என்று சொல்லப்படுவதான ஜகத்திற்குக் காரணமாயிருந்து அவ்வித ஜகத்தாகவும் பரிணமிக்கிறது. அதாவது, சக்தியானவள் ஸூக்ஷ்ம ரூபத்தில் விச்வோத்தீர்ணையாக (ஜகத்தைக் கடந்தவளாக) பரப்ரம்ஹத்தில் சித்ரூபிணியாயிருந்தவள், ஸ்ருஷ்டிகாலத்தில் ஸ்தூல ரூபத்தில் விச்வாத்மிகையாக (ஜகத்தாக) தோன்றுகிறாள். இப்படி, ப்ரம்ஹமானது ஸ்ருஷ்ட்யோன்முகமாகி ப்ரவ்ருத்திப்பதும், அஹம், இதம் என்ற பாவங்கள் தனிப்பட்டு அதினால் இதம் என்று குறிப்பிடப்படும்

ஜகத்தானது உண்டாவதும், பரப்ரம்ஹத்தின் விமர்சாம்சத்தின் செயல்கள்.

5. இவ்விதம் ஜகத்திற்குக் காரணமும், பராஸம்வித் (பரசித்) ஸ்வரூபமான பரப்ரம்ஹத்தின் விமர்சாம்சமுமான சக்தியாக அம்பிகையிருப்பதை இங்கு காரண பரசித் ரூபா என்று சொல்லப்பட்டது. [இவ்வித விமர்சாம்சமானது ப்ரகாசாம்சமான பரமசிவனுடன் ஸாமரஸ்ய மடைவதின்பேரில் ஜகத்தானது உண்டாகிறதே தவிர கேவலம் சிவனுலாவது சக்தியினுலாவது ஜகத்ஸ்ருஷ்டி ஏற்படுவதில்லை என்பது ஸித்தாந்தம்.]

6. அம்பிகையின் பீடங்கள் ஐம்பத்தியொன்று என்று சொல்லப்படுகையில் அவற்றில் முக்கியமானவை ஓட்யாண, ஜாலந்தர, பூர்ணகிரி, காமராஜ பீடங்களென்றும், அவற்றிலும் காமராஜபீடமென்பது தான் முக்யமானதென்றும் சொல்லப்படும். அந்த பீடமானது காஞ்சியிலிருப்பதாகவும் அதின் மத்தியில் அம்பிகை இருப்பதாகவும் இங்கு சொல்லப்பட்டது. இதையே காமபீடமென்றும் காமகோடி பீடமென்றும் சொல்லப்படும்.

7. அம்பிகையானவள் தன் குழந்தைகளான நம்மிடம் பரம கருணையோடிருப்பது இந்த ஸ்தோத்ரத்திலும் இதர ஸ்தோத்ரங்களிலும் விசேஷமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

2 कंचन कांचीनिलयं करधृतकोदण्डबाणसृणिपाशम् ।
कठिनस्तनभरनम्रं कैवल्यानन्दकन्दमवलम्बे ॥

கஞ்சன காஞ்சீ நிலயம்
கரத்ருத கோதண்ட பாண ஸ்ருணி பாசம்—
கடினஸ்தனபர நம்ரம்
கைவல்யானந்த கந்தம் அவலம்பே ||

காஞ்சீ நிலயம்—காஞ்சியை வாஸஸ்தானமாயுடையதும், கரத்ருத கோதண்ட பாண ஸ்ருணி பாசம்—கைகளில் தரித்த (இக்ஷு) கோதண்ட, (புஷ்ப)பாண, அங்குச, பாசங்களோடு கூடியதும்,

கடினஸ்தனபா நம்ரம்—உறுதியான ஸ்தனபாரத்தினால் வளைந்திருப்பதும், கைவல்யானந்தகந்தம்—கைவல்யமென்ற மோக்ஷத்தின் ஆனந்தத்திற்கு வித்தாகியிருப்பதுமான, கஞ்சன—ஓரானொரு பரம் பொருளை, அவலம்பே—சரணமடைகிறேன்.

1. ஸ்ரீ லலிதாம்பிகையே ஸ்ரீ காமாக்ஷியாகையால் அதே ஆயுதங்களைக் கைகளில் வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டது.

3. 'காஞ்சீ திலகம்' என்ற பாடாந்தரத்தில் காஞ்சீபுரிக்குத் திலகம்போல் விளங்குகிறவள் என்றர்த்தம்.

3 चिंतितफलपरिपोषणचिन्तामणिरेव कांचिनिलया मे।
चिरतरसुचरितसुलभा चित्तं शिशिरयतु चित्सुधाधारा॥

சிந்தித பல பரிபோஷண
சிந்தாமணிரேவ காஞ்சிநிலயா மே!
சிரதரஸுசரித ஸுலபா
சித்தம் சிசிரயது சித் ஸுதாதாரா ||

காஞ்சிநிலயா—காஞ்சியிலிருப்பவளும், சிரதர ஸுசரித ஸுலபா—வெகு நீண்டகாலமாகச் செய்யப்பட்ட ஸத்கார்யங்களால் எளிதில் அடையக்கூடியவளும், சிந்தித பல பரிபோஷண—நினைத்த பலன்களைக் கிடைக்கச்செய்வதில், சிந்தாமணிரேவ—சிந்தாமணியைப்போலவே இருப்பவளுமான, சித்ஸுதாதாரா—சித்ரூபமான அம்ருத தாரையான (ஸ்ரீ காமாக்ஷியான)வள், மே—என்னுடைய, சித்தம்—மனதை, சிசிரயது—குளிரச்செய்யட்டும்.

4 कुटिलकचं कठिनकुचं कुन्दस्मितकान्ति कुङ्कुमच्छायम्
कुरुते विहृतिं काञ्च्यां कुलपर्वतसार्वभौमसर्वस्वम्॥

குடிலகசம் கடினகுசம்
குந்தஸ்மிதகாந்தி குங்குமச்சாயம் |
குருதே விஹ்ருதிம் காஞ்ச்யாம்
குலபர்வத ஸார்வபௌம ஸர்வஸ்வம் ||

குடிலகசம்—வளைந்த கூந்தல்களையுடையதும், கடினகுசம்—கெட்டியான ஸ்தனங்களையுடையதும், குந்த ஸ்மித காந்தி—குந்த புஷ்பம்போன்ற காந்தியுடைய புன்சிரிப்பையுடையதும், குங்குமச் சாயம்—குங்குமம் போன்ற நிறத்தையுடையதும், குலபர்வத ஸார்வபௌம—குலபர்வதங்களின் சக்ரவர்த்தியான ஹிமவானுடைய, ஸர்வஸ்வம்—ஸமஸ்த ஸௌபாக்ய ரூபமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியானது, காஞ்ச்யாம்—காஞ்சீபுரியில், விஹ்ருதிம் குருதே—விளையாடிக்கொண்டிருக்கிறது.

1. பூமியிலிருக்கும் பர்வதங்களில் முக்யமான ஏழு பர்வதங்களை குல பர்வதங்களென்று சொல்லப்படும்.
அவற்றின் பெயர்கள்—

'மஹேந்த்ரோ மலய: ஸஹ்ய: சுக்திமான் ருக்ஷபர்வத; |
விந்த்யச்ச பரியாத்ரச்ச ஸப்தைதே குலபர்வதா: ||'

அவற்றிற்கெல்லாம் சக்ரவர்த்தியாக ஹிமவானைச் சொல்லப்படும்.

'சைலானும் ஹிமவந்தம் ச நதீனும் சைவ ஸாகரம் |
கந்தர்வாணும் அதிபதிம் சக்ரே சித்ரரதம் விதி: ||

(ப்ரம்ஹாண்ட புராணம்)

5 पञ्चशरशास्त्रबोधनपरमाचार्येण दृष्टिपातेन ।
काञ्चीसीम्नि कुमारी काचन मोहयति कामजेतारम् ॥

பஞ்சசர சாஸ்த்ர போதன
பரமாசார்யேண த்ருஷ்டிபாதேன |
காஞ்சீ ஸீம்னி குமாரீ
காசன மோஹயதி காமஜேதாரம் ||

காஞ்சீ ஸீம்னி—காஞ்சீபுரியில், காசன குமாரீ—ஓரானொரு குமாரியானவள், பஞ்சசர சாஸ்த்ர—காம சாஸ்த்ரத்தை, போதன-போதிப்பதில், பரமாசார்யேண—ச்ரேஷ்டமான குருவாயிருக்கும்,

த்ருஷ்டிபாதேன—(தன்னுடைய) பார்வையினால், காமஜேதாரம்—பரமேச்வரனை, மோஹயதி—மோஹமடையச் செய்கிறாள்.

1. ‘ அரவிந்தம் அசோகஞ்ச சூதம் ச நவமல்லிகா |
நீலோத்பலம் ச பஞ்சைதே பஞ்சபாணஸ்ய ஸாயகா: || ’

என்று சொல்லப்பட்ட ஐந்து (புஷ்ப)பாணங்களையுடையவனாக இருப்பதால் மன்மதனுக்கு பஞ்சபாணனென்று பெயர்.

2. லலிதாம்பிகையானவள் ச்ருங்காரரஸ ப்ரதானையாதலால் அவளுடைய பார்வையானது காம சாஸ்த்ரத்தை போதிப்பதில் பரமாசார்ய ரூபமாயிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது. அதற்கு அத்தாக்ஷியாக அந்தப்பார்வையானது மன்மதனை ஜயித்தவரான பரமேச்வரனைக்கூட மோஹமடையும்படி செய்வதைச் சொல்லப்பட்டது.

6 परतन्त्रा वयमनया पङ्कजसब्रह्मचारिलोचनया ।
परया काञ्चीपुरया पर्वतपर्यायपीनकुचभरया ॥

பரதந்த்ரா வயமனயா
பங்கஜ ஸப்ரம்ஹசாரிலோசனயா |
பரயா காஞ்சீபுரயா
பர்வதபர்யாய பீனகுசபரயா ||

காஞ்சீபுரயா — காஞ்சிபுரியிலிருப்பவளும், பர்வதபர்யாய பீனகுசபரயா — பர்வதங்களின் உருவம்போல் பருத்ததான குசபாரங்களையுடையவளும், பங்கஜ ஸப்ரம்ஹசாரிலோசனயா — தாமரை புஷ்பங்களுக்கு ஸமமான கண்களையுடையவளுமான, அனயா பரயா— இந்த பரதேவதையினால், வயம் —நாம், பரதந்த்ரா: — பரவசமாகி விட்டோம்.

7 ऐश्वर्यमिन्दुमौलेः ऐकात्म्यप्रकृति काञ्चिमध्यगतम् ।
ऐन्दवकिशोरशेखरं ऐदंपर्यं चकास्ति निगमानाम् ॥

ஐச்வர்யம் இந்துமௌளேः
ஐகாத்ம்ய ப்ரக்ருதி காஞ்சிமத்யகதம் ।
ஐந்தவ கிசோர சேகரம்
ஐதம்பர்யம் சகாஸ்தி நிகமானும் ॥

ஐகாத்ம்ய ப்ரக்ருதி - பரப்ரம்ஹத்தோடு அபேதமாயிருக்கும் ப்ரக்ருதி ரூபமானதும், காஞ்சிமத்யகதம் - காஞ்சீபுரியின் மத்தியிலிருப்பதும், ஐந்தவகிசோரசேகரம் - பாலசந்திரனை சிரோபூஷணமாக உடையதுமான, இந்து மௌளேः ஐசுவர்யம் - சந்த்ர மௌளீச்வருடைய ஐச்வர்யமானது, நிகமானும் ஐதம்பர்யம் - வேதங்களுக்கெல்லாம் பரம தாத்பர்யமாக, சகாஸ்தி - விளங்குகிறது.

1. ஸகல ப்ரபஞ்சமும் உண்டாவதற்குக் காரணமாயிருக்கும் வஸ்துவுக்கு ப்ரக்ருதி என்று பெயர். இதையே மூலப்ரக்ருதி என்றும் சொல்லப்படும். இதுவேதான் அம்பிகையின் ஸ்வரூபம். இது புருஷனெனப்படும் பரமசிவனுடன் அபேதமாயிருக்கிறதென்பது சாக்தர்களுடைய ஸித்தாந்தம். (ப்ரக்ருதியானது ஜடவஸ்து என்றும் புருஷனின்று வேறு பட்டதென்றும் ஸாங்க்யர்கள் சொல்வதை சாக்தர்கள் ஒப்புக்கொள்வதில்லை.)

2. பரமசிவனுக்கு இருப்பதுபோல் அம்பிகைக்கும் சிரஸில் சந்த்ரகலை உண்டு.

3. வேதசிரோபாகங்களான உபநிஷத்துக்களில் அம்பிகை ப்ரதிபாதிக்கப்படுவது

"ச்ருதிஸீமந்தஸிந்தூரீக்ருத பாதாப்ஜ தூளிகா ।
ஸகலாகம ஸந்தோஹ சுக்தி ஸம்புட மௌக்திகா ॥"

என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்திலும்,

'ச்ருதீனும் மூர்த்தானோ தததி தவ யௌ சேகதயா
மமாப்யேதௌ மாதः சிரஸி தயயா தேஹி சரணௌ ।

என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

4. அம்பிகையினால்தான் பரமசிவனுக்கு ஸகல ஐச்வர்யமும் ஏற்பட்டிருக்கிறது என்பது 'சிவ: சக்த்யா யுக்தோ' என்ற ஸௌந்தர்யலஹரி ச்லோகத்தில் சொல்லப்பட்டிருப்பதுடன்

'அக்ஞாதஸம்பவம் அனாகலிதான்வவாயம்
பிக்ஷும் கபாலினம் அவாஸஸம் அத்விதீயம் ।
பூர்வம் கரக்ரஹண மங்களதோ பவத்யா:
சம்பும் க ஏவ புபுதே கிரிராஜகன்யே ॥'

என்பதாக 'அம்பாஸ்துதி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

8 श्रितकम्पासीमानं शिथिलितपरमशिवधैर्यमहिमानम् ।
कलये पाटलिमानं कंचन कञ्चुकितभुवनभूमानम् ॥

ச்ரிதகம்பா ஸீமானம்
சிதிலித பரமசிவ தைர்ய மஹிமானம் ।
கலயே பாடலிமானம்
கஞ்சன கஞ்சுகித புவன பூமானம் ॥

ச்ரிதகம்பாஸீமானம் - கம்பாநதியின் கரையிலிருப்பதும், பரமசிவ தைர்ய - பரமசிவனுடைய தைர்யத்தை (மன உறுதியை), சிதிலித - நழுவச் செய்ததான (கைவிடும்படிச் செய்ததான) மஹிமானம் - மஹிமையோடுகூடியதும், கஞ்சுகிதபுவனபூமானம்-ஸகல புவனங்களையும் கஞ்சுகம்போல் தரித்திருப்பதும், பாடலிமானம் - வெண்சிவப்பு நிறத்தோடு கூடியதுமான, கஞ்சன - ஒரு வஸ்துவை (மூர்த்தியை) கலயே - த்யானிக்கிறேன்.

1. முன்பு மன்மதன் தன் மீது புஷ்பபாணத்தை ப்ரயோகம் செய்ய எத்தனித்தபோது அதற்கு இடங்கொடாமல் தன் நேத்திராக்னியினால் அவனை எரித்த பரமசிவனானவர் அம்பிகையின் ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு மனத்தளர்ச்சியடைந்து மோஹமடைந்ததை 'சிதிலித பரமசிவ தைர்ய மஹிமானம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

9 आदृतकाञ्चीनिलयां आद्यामारूढयौवनाटोपाम्।
आगमवतंसकलिकां आनन्दाद्वैतकन्दलीं वन्दे ॥

ஆத்ருத காஞ்சீ நிலயாம்
ஆத்யாம் ஆரூட யௌவனாடோபாம் ।
ஆகமவதம்ஸ கலிகாம்
ஆனந்தாத்வைதகந்தலீம் வந்தே ॥

ஆத்ருத காஞ்சீ நிலயாம் - காஞ்சீபுரியை வாஸஸ்தானமாகக் கொண்டிருப்பவளும், ஆத்யாம் - ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஆதியாய் இருப்பவளும், ஆரூட யௌவனாடோபாம்-யௌவனத்தின் ஆடம்பரத்தோடு நிறைந்தவளும், ஆகமவதம்ஸகலிகாம் - வேதங்களின் சிரோபாகத்திற்கு பூஷணமான மொக்குப்போலிருப்பவளும், ஆனந்தாத்வைதகந்தலீம் - ஆனந்தத்திற்கு ஒரே துளிர்போலிருப்பவளுமான (ஸ்ரீ காமாக்ஷியை). வந்தே - நமஸ்கரிக்கிறேன்.

1. அவதம்ஸமென்றால் சிரோபூஷணமென்று அர்த்தம். கலிகா என்றால் மொக்கு (மொட்டு) என்று அர்த்தம். கிரீடத்தில் மொக்கை அலங்காரமாக தரிப்பது வழக்கம். உதாஹரணமாக 'முகுளித கரோத்தம்ஸ மகுடா:' என்றும் 'கோத்ராதரபதி குலோத்தம்ஸகலிகே' என்றும் 'ஸௌந்தர்யலஹரி' யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு அம்பிகையை 'ஆகமவதம்ஸகலிகா' என்பதினால் வேதங்களின் சிரோபாகமான உபநிஷத்துக்களுக்கு முடிவான தாத்பர்யமாக இருப்பது சொல்லப்பட்டது.

2. 'அத்வைதானந்தகலீம்' என்றும் சொல்லலாம். அத்வைதானந்தம் என்றால் ஜகத்தும் ப்ரம்ஹமும் ஒன்று என்பதான அறிவு ஏற்படும்போது உண்டாகும் ஆனந்தம் என்று அர்த்தம்.

10. तुङ्गाभिरामकुचभरशृङ्गारितमाश्रयामि काञ्चिगतम्।
गङ्गाधरपरतन्त्रं शृङ्गाराद्वैततन्त्रसिद्धान्तम् ॥

துங்காபிராம குசபார
ச்ருங்காரிதம் ஆச்ரயாமி காஞ்சிகதம் |
கங்காதர பரதந்த்ராம்
ச்ருங்காராத்வைத தந்த்ர ஸித்தாந்தம் ||

துங்காபிராமகுசபார ச்ருங்காரிதம் - உன்னதமும் அழகுள்ளதுமான குசபாரத்தால் அலங்கரிக்கப்பட்டதும், காஞ்சிகதம்-காஞ்சீபுரியிலிருப்பதும், ச்ருங்காராத்வைத தந்த்ர ஸித்தாந்தம் - ச்ருங்காரமாகிற அத்வைத தந்த்ரத்தின் முடிவாயுமிருக்கும், கங்காதர பரதந்த்ரம் - சிவனுடைய பத்னியை, ஆச்ரயாமி — சரணமடைகிறேன்.

1. பாதந்த்ரமென்றால் பிறருக்கு வசப்பட்டிருப்பது என்று அர்த்தமாகையால் இங்கு (புருஷனுக்கு வசப்பட்டிருப்பதால்) பதிவ்ரதையைக் குறிக்கும். அம்பிகையினுடைய பாதிவ்ரத்யத்தைப் பற்றி மிகவும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'களத்ரம் வைதாத்ரம் கதி கதி பஜந்தே ந கவய:
ச்ரியோ தேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை: |
மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸதீனாமசாமே
குசாப்யாம் ஆஸங்க: குரவகதரோரப்யஸுலப: ||
(ஸௌந்தர்யலஹரி)

2. இந்த ஸ்தோத்ரத்தில் எல்லா சதகங்களிலும் ச்ருங்கார சாஸ்த்ரத்தின் ஸித்தாந்தமாக அம்பிகை இருப்பதாக இங்கும் பிறஇடங்களிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ச்ருங்கார சாஸ்த்திரத்திற்கும் அம்பிகையின் உபாஸனைக்கும் என்ன ஸம்பந்தம் இருக்கிறதென்பதாக ஸந்தேஹம் தோன்றக்கூடும். ச்ருங்கார ரஸமென்பது ஸ்த்ரீ புமான்களுக்குள் பரஸ்பாமிருக்கும் ஆசைக்கும் செய்கைகளுக்கும் காரணமானது. அதையே ரஸங்களுக்குள் முதன்மையானது (ஆதிரஸம்) என்று சொல்லப்படும். இதைப்பற்றி வெட்கப்படவேண்டியாவது வெறுக்க வேண்டியாவது யாதொரு அம்சமும் ஸரியாக யோசிப்பவர்கள் மனதில் தோன்றுவதற்கு ந்யாயமில்லை. இது ஸத்வ குணத்திலிருந்து ஏற்படுகிறதென்றும், அகண்டமும்

ஸ்வப்ரகாசபூமான ஆனந்தரூபமென்றும், சின்மயமானதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ரஸத்திலிருந்து ஏற்படும் ஆனந்தத்தினால் மற்றவஸ்துக்களெல்லாம் மறக்கப்பட்டு அனன்யமான தீவ்ர மனோபாவமானது ஏற்படுவதால், அவ்வித ஆனந்தத்தை ப்ரம்ஹானந்தத்திற்கு உடன் பிறந்ததாக (ப்ரம்ஹாஸ்வாத ஸஹோதரமென்று) சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குமேலாக ஸ்தூல சரீரத்திற்கு ஏற்படக்கூடிய ஆனந்தம் வேறு யாதொன்றும் கிடையாதாகையால் சிவசக்திகளுடைய ஸாமரஸ்ய ரூபமான ப்ரம்ஹானந்தத்தை இதற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

'ஸ்வஸம்வேத்யம் இதம் ப்ரம்ஹ குமாரீ ஸ்த்ரீஸுகம் யதா |'
(தக்ஷ தர்மசாஸ்த்ரம்)

ஸாமரஸ்யமென்பதே

'ஸ்த்ரீபும்யோகே து யத் ஸௌக்யம் ஸாமரஸ்யம் ப்ரகீர்த்திதம் |'

என்றபடி ஸ்த்ரீபுமான்களுடைய சேர்க்கையிலேற்படும் ஸுகத்தைக்குறிக்கும். லயஸித்தியோகத்தை அப்யஸிக்கும் ஸாதகனும் தன்னை சக்தியாக பாவித்து பரமாத்மாவான புருஷனுடன் ஸங்கமமடைவதாகவும் அவ்வித ஸங்கமத்தால் ஏற்படும் ஆனந்தத்தில் தன்னையும் ஜகத்தையும் மறந்துவிடுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஷட்சக்ரபேதனம் செய்து குண்டலினியை ஸஹஸ்ராரத்திற்குக் கொண்டுபோவதின் உத்தேசம் அவ்விடமிருக்கும் பரமசிவனுடன் குண்டலினீ சக்திக்கு ஸாமரஸ்யமேற்படுத்துவது என்பதுதான். இவ்விதமான சேர்க்கையை ஸ்ரீபகவத்பாதாசார்யாளும்

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசமுபரி |
மனோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

குண்டலினியின் ஸஞ்சாரத்தைப்பற்றியே பின்வருமாறும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'குலாங்கனேஷாப்யத ராஜவீதீ:
ப்ரவிச்ய ஸங்கேத க்ருஹாந்தரேஷு |
விச்ரம்ய விச்ரம்ய வரேண பும்ஸா
ஸங்கம்ய ஸங்கம்ய ரஸம் ப்ரஸூதே ||'

இவ்விதமான சேர்க்கையினால் அம்ருதப்ரவாஹம் உண்டாகிறதென்றும் அதினால் தேஹத்திலுள்ள ஸகல நாடிகளும் நனையப்பெற்று முடிவாக நித்யமான சரீரமேற்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'வ்யோமனி சித்சசி மண்டல மத்யேத்வகுலேன ஸங்கம்ய |
உபயாங்க ஸங்கஜன்யம் ப்ரவாஹயந்தீ ஸுதாபூரம் ||''

(வரிவஸ்யா ரஹஸ்யம்)

'ஸுதா தாரா ஸாரை: சரணயுகளாந்தர்விகளிதை: |
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ .... .... .... .... ||

(ஸௌந்தர்யலஹரீ)

3. பக்தியென்பதே ஈச்வரனிடத்தில் பரானுராக ஸ்வரூபமென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உத்தமமான பக்தர்கள் ஈச்வரனுக்கும் தங்களுக்கும் நாயக, நாயகீ பாவத்தைக் கல்பித்துக் கொண்டு அந்த மனோபாவத்துடனேயே உபாஸிப்பதை ஆதிகாலம் முதல் நாம் பார்க்கிறோம்.

4. ஆகவே, சிவசக்திகளுடைய ஸமாயோகமே யோகமென்பதாகவும் அவ்வித ஸம்யோகத்தினால் உண்டாகும் ஸுகமே பரமானந்தத்தின் லக்ஷணமென்பதாகவும் ஏற்படுகிறது, இவ்விதமான ஸம்யோகமானது ஸூக்ஷ்ம ஸாமரஸ்யமெனப்படும். ஸ்தூல ஸாமரஸ்யமானது ஸூக்ஷ்ம ஸாமரஸ்யமான சிவசக்தி ஸம்யோகத்திற்கு அறிகுறியாகவும் அதைப் போன்றதான ப்ரதிபிம்பமாகவுமிருக்கிறபடியால் அவ்வித ஸ்தூல ஸாமரஸ்யத்தை போதிக்கும் ச்ருங்கார சாஸ்த்ரமானது (ஸ்திரீபுமான்கள் இறண்டறக் கலப்பதைப்பற்றிய

தால்) அத்வைத தந்த்ரமென்றும் அதற்கு அதிஷ்டான தேவதை யாக அம்பிகை இருக்கிருள் என்றும் சொல்வதில் யாதொரு பிசகும் இல்லை. (ச்ருங்கார சாஸ்த்ரமானது பிறருடைய ஸ்திரீகளை அடைவதற்காக ஏற்பட்டதல்லவென்பதை ஞாபகப்படுத்திக்கொண்டால் மேலே சொல்லியதற்கு யாதொரு ஆக்ஷேபமும் தோன்றுவதற்கு இடமில்லை. இந்த விஷயத்தைப் பற்றி அறிய விரும்புவோர்கள் பாஸ்கரராயருடைய க்ரந்தங்களையும் ஆர்தர் ஏவலனுடைய புஸ்தகங்களையும் பார்க்கலாம்.)

11 काञ्चीरत्नविभूषां कामपि कंदर्पसूतिकापाङ्गीम् ।
परमां कलामुपासे परशिववामाङ्कपीठिकासीनाम् ॥

காஞ்சீரத்னவிபூஷாம்
காமபி கந்தர்ப்ப ஸூதிகாபாங்கீம் |
பரமாம் கலாமுபாஸே
பரசிவ வாமாங்க பீடிகாஸீனாம் ||

காஞ்சீரத்னவிபூஷாம் - காஞ்சியாகிற ரத்னத்தை அலங்காரமாயுடையவளும், கந்தர்ப்பஸூதிகாபாங்கீம்-மன்மதனுக்குப் பிறப்பிடமாக இருக்கும் கடாக்ஷத்தையுடையவளும், பரசிவ வாமாங்க பீடிகாஸீனாம் - பரமசிவனுடைய இடது துடையில் வீற்றிருப்பவளுமான, காமபி-ஒரானொரு, பரமாம் கலாம்-பரம்பொருளை, உபாஸே-உபாஸிக்கிறேன்.

1. காஞ்சியென்றால் ஸ்திரீகள் இடுப்பில் தரிக்கும் மேகலை (ஒட்டியாணம்) என்று அர்த்தம். அதிலிழைக்கப்பட்ட ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டவள், 'காஞ்சீரத்னவிபூஷா' என்றும்சொல்லலாம்.

2. பரமசிவனுடைய நேத்ராக்னியினல் மன்மதன் எரிக்கப்பட்ட பிறகு லலிதாம்பிகையும் காமேச்வரரும் தோன்றியதைப் பற்றியும் பண்டாஸுர ஸம்ஹாரமானபிறகு தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அம்பிகையானவள் மன்மதனைத்தன் கடைக்

கண்பார்வையினால் பிழைப்பூட்டியதைப் பற்றியும், லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தன் புருஷன் இறந்ததினால் மிகவும் துக்கித்திருக்கும் ரதீதேவியை அம்பிகை பார்த்தவுடன், மன்மதன் உண்டானது பின்வருமாறு. |

'அத தத் தர்சனோத்பன்ன காருண்யா பரமேச்வரீ |
காந்தம் கடாக்ஷயாமாஸ காமேச்வரம் அனிந்திதா ||
தத: கடாக்ஷாத் உத்பன்ன: ஸ்மயமான முகாம்புஜ: |
பூர்வதேஹாதிகருசி: மன்மதோ மதமேதுர: ||
த்விபுஜ: ஸர்வபூஷாட்ய: புஷ்பேஷு: புண்ட்ரகார்முக: |
ஆனந்தயன் கடாக்ஷேண பூர்வஜன்மப்ரியாம் ரதிம் ||'

இவ்விதம் மன்மதனுடைய (மறு) பிறப்பானது அம்பிகையின் கடாக்ஷத்தினால் ஏற்பட்டதால் அந்த கடாக்ஷத்தை அவன் பிறந்த இடமாக (ஸூதிகாக்ருஹமாக) வர்ணிக்கப்பட்டது.

12 कंपातीरचराणां करुणाकोरकितदृष्टिपातानाम् ।
केलीवनं मनो मे केषांचिद्भवतु चिद्विलासानाम् ॥

கம்பாதீர சராணம்
கருணாகோரகித த்ருஷ்டிபாதாணம் |
கேளீவனம் மனோ மே
கேஷாம்சித் பவது சித்விலாஸாணம் ||

கம்பாதீரசாரணம் - கம்பா நதியின் தீரத்தில் ஸஞ்சரிப்பவைகளும், கருணாகோரகித - கருணை பூத்த, த்ருஷ்டிபாதாணம் - பார்வையோடு கூடியவைகளுமான, கேஷாம் சித்-சில, சித்விலாஸாணம்-சின்மயமான விலாஸங்களுக்கு, மே மன: - என்னுடைய மனதானது, கேளீவனம் பவது - க்ரீடிக்கும் உத்யானவனமாக ஆகட்டும்.

1. கோரகமென்றால் மொக்கு என்று அர்த்தம். அம்பாளுடைய பார்வைகள் கருணையால் நிறைந்தவைகளென்பது இங்கு வர்ணிக்கப்பட்டிருப்பதின் தாத்பர்யம்.

13 आम्रतरुमूलवसतेरादिमपुरुषस्य नयनपीयूषम् ।
आरब्धयौवनोत्सवमाम्नायरहस्यमन्तरवलम्बे ॥

ஆம்ரதருமூல வஸதே:
ஆதிம புருஷஸ்ய நயன பீயூஷம் |
ஆரப்த யௌவனோத்ஸவம்
ஆம்னாயரஹஸ்யம் அந்தரவலம்பே ||

ஆம்ரதருமூலவஸதே: - ஏகாம்ர மரத்தின் அடியை வாஸஸ்தானமாகவுடைய, ஆதிமபுருஷஸ்ய - (ஆதி புருஷனான) பரமசிவனுடைய, நயனபீயூஷம் - கண்களுக்கு அம்ருதமாயிருப்பதும், ஆரப்த யௌவனோத்ஸவம் - யௌவனத்தின் ஸந்தோஷத்தினுடைய ஆரம்பத்தையுடையதும், ஆம்னாயரஹஸ்யம் - வேதங்களின்ஸாரமாயிருப்பதுமான பரம்பொருளை, அந்த: அவலம்பே - என் மனதிற்குள் கடைப்பிடித்திருக்கிறேன் (த்ருடமாக த்யானித்திருக்கிறேன்.)

1. காமேச்வரரானவர் பஞ்சப்ரம்ஹமயமான மஞ்சத்தில் காமேச்வரியை (ஸ்ரீலலிதாம்பிகையை) தன் இடது துடையின் மீது வைத்துக்கொண்டு ஸதாகாலமும் அம்பிகையின் அழகில் ஈடுபட்டு ஆனந்தத்தில் மூழ்கி அம்பிகையையே பார்த்தவண்ணமாய் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இருவரும் ஒரே விதமான வயது, ஸௌந்தர்யம், ஆயுதங்கள் முதலியவைகளுடன் பொருந்தியிருப்பவர்களாகச் சொல்லப்படும். அவரும் ஸதாஷோடசவார்ஷிக:, அம்பிகையும் ஸதா ஷோடசவர்ஷீயா. (அதினால் தான் இங்கு, ஆரப்தயௌவனோத்ஸவமென்று சொல்லப்பட்டது.)

2. ஸ்த்ரீகளை வயதின் க்ரமமாக வர்ணிக்கையில் பதினாறு வயது வரையில் பாலை என்றும், அதற்குமேல் இருபது வரையில் தருணீ (யௌவனை) என்றும் அதற்குமேல் ஐம்பதுவரையில் ப்ரௌடை என்றும் அதற்குமேல் வ்ருத்தையென்றும் சொல்லப்படும்.

'பாலா ஸ்யாத் ஷோடசாப்தா ததுபரி தருணீ
விம்சதேர் யாவதூர்த்வம்
ப்ரௌடாஸ்யாத் பஞ்ச பஞ்சா—
சதவதி பரதோ வ்ருத்ததாமேதி நாரீ |'

அம்பிகை ஸதாஷோடசவர்ஷீயாகச் சொல்லப்படுவதால் இங்கு 'ஆரப்தயௌவனோத்ஸவம்' என்றும் இதற்கு முன் வந்த 9-வது ச்லோகத்தில் 'ஆரூடயௌவனாடோபாம்'என்றும்சொல்லப்பட்டது

3. ஆம்னாயமென்பது வேதங்களைக் குறிப்பதுடன் தந்த்ர சாஸ்த்ரங்களையும் குறிக்கும்.

4. காஞ்சிபுரியிலிருக்கும் பரமசிவனுடைய மூர்த்திக்கு ஏகாம்ரநாதர் என்று பெயர். அவரே காமேச்வர ஸ்வரூபமென்று சொல்லப்படும். கைலாஸத்தில் ஒரு ஸமயம் பரமசிவனானவர் அந்தப்புரத்தில் பார்வதி தேவிக்கு அர்த்தாஸனம் கொடுத்து ஆனந்தமாக இருக்கும்போது அறுபத்திநாலு கலைகளின் ரூபிணிகளும் அவருக்கு மிகவும் ப்ரியைகளாயுமுள்ள சக்திகள் சற்று அஹங்காரம் கொண்டவர்களாய் பரமசிவனை நோக்கித் தங்களுக்கும் பார்வதீதேவி மாதிரி அர்த்தாஸனம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது பரமசிவன் அவர்களை நோக்கி, கைலாஸத்திலிருக்கும் ஸகல புருஷர்களும் தன்னுடைய அம்சங்களென்றும் கைலாஸத்திய ஸ்த்ரீகளெல்லோரும் கௌரியினுடைய அம்சங்களென்றும், அப்படியிருந்தும் புருஷர்களுக்குள் தான் ச்ரேஷ்டமாயிருப்பது மாதிரி ஸ்திரீகளுக்குள் கௌரியே ச்ரேஷ்டமானவளென்றும், ஆகவே கௌரீ தான் தன்னுடைய அர்த்தாஸனத்தில் வீற்றிருக்கத் தகுதியானவள் என்பதாக

'மமாம்ச ஜாதா: கைலாஸே பும் ரூபேண ஸமன்விதா: |
ததா கௌர்யாம்ச ஸம்பூதா: மம காந்தா ஹி ஸர்வச: |
பும் ரூபாணாம்ஸ்து ஸர்வேஷாம் வரோஹம் புருஷேச்வர: |
ததா ஸ்த்ரீணாம் வரா கௌரீ மம காந்தாஸ் ஸசக்தய: ||
தஸ்மாத் யூயம் மஹாகௌர்யா: கிஞ்சின் ந்யூனதயான்விதா:

ஸர்வாஸாம் சைவ சக்தீனும் ஏஷோத்க்ருஷ்டா ஹி பார்வதி ||
ஸமாஸனே ஸமாஸீனு வஸத்யந்த: புரே ஸதா |
ததாஸனம் ந தாதவ்யம் யுஷ்மப்யம் உமயா ஸஹ ||'

என்று பதில் சொன்னர்.

அப்போது, தாங்கள் கௌரியின் அம்சங்கள் தானென்றும் ஆகவே அவளுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும் அதினுல் பரம சிவனுடன் ஸமமான ஆஸனத்திற்குத் தகுதியற்றவர்களென்றும் சொல்லப்பட்ட அந்த சக்திகள் மிகவும் கோபங்கொண்டு தாங்கள் கௌரிக்குத் தாழ்ந்தவர்களல்லவென்றும் தங்களுடைய அம்சமாகத் தான் கௌரியானவள் தோன்றினுளென்றும் அதற்கு மாறுக பரமசிவன் அவளிடத்திலுள்ளபக்ஷபாதத்தினுல் சொன்னுரென்றும்

'கிம் ப்ரவீஷி மஹாதேவ பக்ஷபாதம் ஸமாச்ரித: |
கௌர்யாம்சஜாதா ந வயம் ஸாஸ்மதம்சஸமுத்பவா ||

என்று சொல்லி, கௌரியானவள் தங்களைவிட எந்த குணத்தில் உயர்ந்தவளென்று கேட்கவும் பரமசிவன் நகைத்து அவர்களுடைய கர்வத்தைப் போக்க உத்தேசித்து ஸமகாலத்தில் அவர்களெல்லா ருடைய வஸ்த்ரங்களும் நழுவும்படிச் செய்தார். உடனே அவர் கள் லஜ்ஜை அடைந்து தங்கள் மர்மப்ரதேசங்களை மறைப்பதற்காக பூமியில் விழுந்துவிட்டார்கள். அப்போது அவர்களுடைய மானத் தைக் காப்பாற்றுவதற்காக அம்பிகையானவள் அவர்கள் வஸ்த்ரங் களைத் திரும்பவும் உடுத்திக்கொள்ளும் வரையில் பரமசிவனுடைய நேத்ரங்களைத் தன் கைகளால் மறைத்தாள். அப்படி மறைத்தது முகூர்த்தகாலமாய் இருந்தபோதிலும் (தேவலோகத்திய காலமாத லால்) லோகங்களிலெல்லாம் இருள் சூழ்ந்து ஸூர்யசந்த்ரர்கள் ஒளி இழந்து படவா முகாக்னியானது அணைந்து ஸமுத்திரங்கள் கரை புறண்டன. அந்த ஸமயம்—

'ததஸ் ஸமஸ்தலோகேஷு தேவயான முஹூர்த்தத: |
ஸூர்யசந்த்ரமஸௌ நஷ்டௌ நஷ்டோக்னிர்பாடவஸ்ததா ||
பாச்சன்ன நேத்ர மாஹாத்ம்யாத் சந்த்ரஸூர்யாக்ன்யதர்சனுத் |

காடாந்தகார ஸம்வீதே ஜகத்யேகார்ணவீக்ருதே |
ஸம்பூதே ப்ரளயே கோரே .... .... ....'

என்றபடி கோரமான ப்ரளயமேற்பட்டு விட்டது. அவ்வித ஸமயங்களிலும் அழியாத வரம் பெற்றிருக்கும் மார்க்கண்டேயரானவர் ஜலத்தில் மிதந்துகொண்டு தங்குவதற்கு இடமொன்றும் தோன்றாமல் பரமசிவனை ப்ரார்த்திக்க, பரமக்ருபாநிதியாகிய பரமசிவன் காஞ்சியில் ருத்ரசாலையில் அவ்யக்தமான தேஜஸுடன் சித்ரூபியாய் சூதபீஜாக்ருதியோடு விளங்கினார். அப்போது அந்த பீஜத்திலிருந்து ஒரு மா மரமானது கிளம்பி நான்கு வேதங்களாகிற நான்கு கிளைகளுடன் ப்ரளய ஜலத்திற்கு மேல்பட்டதாக வளர்ந்தது. அதைக்கண்ட மார்க்கண்டேயரானவர் அதின் கிளைகளில் ஏறிக்கொண்டார். அதற்குமேல் அவர் தைர்யமடைந்து அந்த சூத வ்ருக்ஷத்தின் மூலத்தில் ப்ரவேசிக்கவும் அங்கு தேஜோமயமான ஒரு பெரிய நகரத்தைப்பார்த்தார். அதைக்கண்டு ஆச்சர்யமடைந்து மார்க்கண்டேயர் அங்கு அந்த மரத்தின் பழங்களைத் தின்றுகொண்டிருந்த ஸுப்ரஹ்மண்யரைப் பார்த்து அந்த அதிசயங்களைப் பற்றிக் கேட்டார். அப்போது ஸுப்ரஹ்மண்யரானவர் அந்த நகரம் காஞ்சீ க்ஷேத்திரமென்றும், அதை அம்பிகையானவள் ப்ரளயகாலத்திலும் நாசமடையாத வண்ணம் தன்னுடைய தேஜஸ்ஸினால் காப்பாற்றி வருகிறாளென்றும், அதினாலேயே அந்த நகரத்திற்கு ப்ரளயஜித் என்று பெயரென்றும், அந்த சூதவ்ருக்ஷமானது ஸாக்ஷாத் சங்கரருடைய ஸ்வரூபமென்றும், அம்பிகையின் பதியான காமேச்வரரே அந்த வ்ருக்ஷத்தின் பீஜரூபமாயிருக்கிறாரென்றும், அதனால் தான் அவருக்கு ஏகாம்ரநாதர் என்ற பெயர் என்றும் சொன்னார்.

'காஞ்சி நாமான்விதம் க்ஷேத்ரம் மஹாப்ரளயஜித் புரம் |
யதா யதா ஸமாயாந்தி ப்ரளயாச்ச முஹுர்முஹு: ||
ததா ததா மஹாதேவீதேஜஸா ரக்ஷிதா புரீ |
தஸ்மான் நாம்னா ப்ரளயஜித் காஞ்சி க்ஷேத்ரமிதம் முனே ||
ஏதத் ரஸால வ்ருக்ஷம் ச வித்தி த்வம் சங்கராத்மகம் |
மஹாத்ரிபுரஸுந்தர்யா: நாத: காமேச்வராஹ்வய: |
ஸ்வயம் பீஜாக்ருதிர் பூத்வா சூதரூபேண சோபதே ||'

5. மா மரத்திற்கு ஆம்ரமென்றும் சூதமென்றும் ரஸாலமென்றும் பெயர்களாகையால் காஞ்சியிலிருக்கும் காமேச்வரருக்கு ஏகாம்ர நாதரென்றும் ஏகசூதபதியென்றும் ரஸாலேச்வரரென்றும் பெயர்கள் சொல்லப்படும்.

14 अधिकाञ्चि परमयोगिभिरादिमपरपीठसीम्नि दृश्येन ।
अनुबद्धं मम मानसमरुणिमसर्वस्वसंप्रदायेन ॥

அதிகாஞ்சி பரமயோகிபி-
ராதிம பர பீடஸீம்னி த்ருச்யேன |
அனுபத்தம் மம மானஸம்
அருணிம ஸர்வஸ்வ ஸம்ப்ரதாயேன ||

பரமயோகிபி: - யோகிச்ரேஷ்டர்களால், அதிகாஞ்சி - காஞ்சி புரியில், ஆதிம பர பீடஸீம்னி - எல்லா பீடங்களுக்கும் ஆதியாயும் ச்ரேஷ்டமுமான காமகோடிபீடத்தில், த்ருச்யேன - பார்க்கப்படுவதும், அருணிம ஸர்வஸ்வ ஸம்ப்ரதாயேன - சிகப்பு என்பதையே முக்யமாக (ஸாரமாக) உடைய ஸம்ப்ரதாய ரூபமாயிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியால், மம மானஸம் - என்னுடைய மனதானது, அனுபத்தம் - சேர்க்கப்பட்டு (ஈடுபட்டு) இருக்கிறது.

1. பஞ்சாசத் (ஐம்பது) கோடி விஸ்தீர்ணமான பூமண்டலத்தில் இருக்கும் தேவீ பீடங்களில் 64,000-பீடங்கள் முக்யமானவை என்றும், அவற்றிலும் (மாத்ருகைகளின் கணக்கையனுஸரித்து) ஐம்பத்தொரு பீடங்கள் முக்யமானவை என்றும், அவற்றிற்குள் (தத்வங்களின் கணக்கை அனுஸரித்து) 36-பீடங்கள் சிறந்தவையென்றும், அவற்றிற்குள்ளும் 18-பீடங்கள் முக்யமானவை என்றும், அவற்றிலும் காமராஜ, ஜாலந்தர, ஒட்யாண பீடங்கள் என்ற மூன்றுதான் ச்ரேஷ்டமென்றும், அவைகளுக்குள்ளும் காமராஜபீடமென்பது தான் உத்தமோத்தமமானதென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. (தத்வங்களின் கணக்கானது 94, 36. 24 என்று

பலவிதமாகச் சொல்லப்படும். மாத்ருகைகளின் கணக்கும் 50–என்றும் 51-என்றும் சொல்லப்படும்.)

'பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணே வர்தந்தே ப்ருதிவீதலே |
காமகோடி மஹாபீடான் யுக்தமாஜ்ஞி ஹி தேஷ்வபி ||
சதுஷ் ஷஷ்டி ஸஹஸ்ராணி தேஷு சாஷ்டாஷ்டகானி ஹி |
மாத்ருகா ஸங்க்யயா தேஷு தேஷு தத்வானுஸங்க்யயா ||
தேஷு சாஷ்டாதச ச்ரேஷ்டான் யேஷு பீடத்ரயம் பரம் |
தத் த்ரயே காமராஜாக்யம் ப்ரதமம் ஹி ப்ரசஸ்யதே ||

ஆகையினுல் தான் அதை இங்கு 'ஆதிம பர பீட' மென்று சொல்லப்பட்டது.

2. லலிதாம்பிகையானவள் அருண வர்ணமாயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக, த்யான ச்லோகத்தில் 'அருணும் கருணுதரங்கிதாக்ஷீம்' என்றும், 'லௌஹித்யமேவ தஸ்ய ஸர்வஸ்ய விமர்ச:' என்பதாக பாவனேபனிஷத்திலும் 'லௌஹித்யம் தத் விமர்ச: ஸ்யாத்' என்பதாக தந்த்ர ராஜத்திலும் வசனங்களிருக்கின்றன. அம்பிகையானவள் ப்ரகாசரூபமாயிருக்கும்போது சுக்ல வர்ணமாயிருக்கையில் இச்சாரூபிணியாயிருக்கும்போது விமர்சரூபமாய் அருண வர்ணமாயிருக்கிருள். ஆகையால் ராக (இச்சா) ஸ்வரூபமான அம்பாளுடைய பாசத்தை சிகப்புவர்ணமாக பாவனை செய்வது வழக்கம்.

3. ச்ருங்கார ரஸத்திற்கு இச்சை காரணமானதால் அதையும் சிகப்பு வர்ணமாக வர்ணிப்பது வழக்கம். லலிதாம்பிகையானவள் ச்ருங்கார ரஸ ப்ரதானையாகையால் அந்தக் காரணத்தைக்கொண்டும் அருணவர்ணமாயிருப்பதாகச் சொல்வது ந்யாயமாக இருக்கிறது.

'கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வரா ப்ருத:
சிவ: ஸ்வச்சச்சாயா கடித கபடப்ரச்சதபட: |
த்வதீயானும் பாஸாம் ப்ரதிபலன ராகாருணதயா
சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம் ||

(ஸௌந்தர்யலஹரீ)

15 अङ्कितशंकरदेहां अङ्कुरितोरोजकङ्कणाश्लेषैः ।
अधिकाञ्चि नित्यतरुणीं अद्राक्षं काञ्चिदद्भुतां बालाम् ॥

அங்கித சங்கர தேஹாம்
அங்குரிதோரோஜ கங்கணச்லேஷை: |
அதிகாஞ்சி நித்யதருணீம்
அத்ராக்ஷம் காஞ்சித் அத்புதாம் பாலாம் ||

அங்குரிதோரோஜ கங்கணச்லேஷை: — அங்குரிதமான ஸ்தனங்கள், வளையல்கள் இவைகளோடு பொருந்திய ஆலிங்கனங்களால், அங்கித சங்கரதேஹாம் - தன் பதியான பரமசிவனுடைய சரீரத்தை அடையாளங்களோடு இருக்கச்செய்தவளும், நித்யதருணீம் - நித்யமான யௌவனத்தோடு கூடியவளுமான, காஞ்சித் அத்புதாம் பாலாம் - ஏதோ ஒரு அத்புதமான பாலையை, அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், அத்ராக்ஷம் - பார்த்தேன்.

1. அம்பிகையானவள் தன் பதியைத் திரும்பவும் அடைவதற்காக காஞ்சீபுரிக்கு வந்தபோது அங்குவந்த நாரதமஹர்ஷியானவர் அம்பிகைக்கு பஞ்சபாண மந்த்ரத்தை உபதேசித்து அதை ஜபித்து தபஸ் செய்யும்படி சொல்லிப்போனார்.

'சந்த்ரசூடஸ்ய பார்யாத்வம் இச்சந்தீ கிரிநந்தினீ |
உபாயம் முனிசார்தூலம் அப்ருச்சத் வினயான்விதா ||
அத தத்ர முனிச்ரேஷ்ட: ஸந்துஷ்ட: கன்யகார்ச்சனை: |
சிவ ப்ராப்த்யை ஸ்வகோபாயம் பஞ்சபாண மனும் முனி: |
உபதிச்ய ததா கௌர்யை கதவான் தக்ஷிணாம் திசம் ||'

அதின்பேரில் ஸைகதத்தால் (மணலால்) லிங்கத்தை ஸ்தாபித்து தன் பதியைத் தியானித்து அம்பிகையானவள் உக்ரமான தபஸ் செய்யும்போது பஞ்சபாணமந்த்ர ஜபத்தினாலுண்டான காமாக்னியினால் பீடிக்கப்பட்ட பரமசிவன் அம்பிகையின் ப்ரேமாதிசயத்

தை அறியவிரும்பி, கங்கையை அழைத்து ப்ரவாஹ ரூபமாய் அம்பிகையின் பூஜைக்கு இடையூறு செய்யும்படி ஆக்ஞாபித்தார்.

அப்போது வந்த கோரமான ப்ரளயத்தைக் கண்டு கம்பத்தை (நடுக்கத்தை) அடைந்த அம்பிகையானவள்.

'ததைவாத மஹா கௌரீ ப்ரளயோதே ஸமாகதே |
சிவ ஏவ கதிர் மேऽத்ய தஸ்மின்னேகாக்ர மானஸா |
ப்ரளயாம்பு விசோஷாய லிங்கமாலிங்க்ய ஸம்ஸ்திதா ||'

என்றபடி லிங்கமூர்த்தியை இறுகத் தழுவவும், பகவான் ப்ரஸன்னமாகி அம்பிகையைத் தன்னிருகைகளாலும் எடுத்துத் தன்னுடைய இடது பக்கத்தில் வீற்றிருக்கச்செய்தார்.

'தத: ஸ பகவான் ஈச: ஸ்வகீயார்த்தாஸனே சுபே |
கௌரீமுத்த்ருத்ய ஹஸ்தாப்யாம் ஸ்தாபயாமாஸ வாமத: ||
ததோ விமுக்த பாபா ச தப்த காஞ்சன ஸன்னிபா |
ப்ரணம்ய சிரஸா நாதம் ஸுப்ரஸன்னம் மஹேச்வரம் |
சிவார்த்தாஸனமாருஹ்ய பபௌ ச்ருங்காரவேஷத: ||'

2. இப்படி ஆலிங்கனம் செய்யப்பட்டபோது அம்பிகையின் ஸ்தனங்கள் அங்குரித்து அவற்றின் தழும்பும் கைவளையல்களின் தழும்பும் லிங்கமூர்த்தியில் ஏற்பட்டதை இங்கு

'அங்கித சங்கரதேஹாம் அங்குரிதோராஜகங்கணச்லேஷை:।
என்று சொல்லப்பட்டது.

3. பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பிகையானவள் 'அஜரோऽம்ருத:' என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி நித்ய யௌவனத்தோடு கூடியவளாகையால் தருணீயென்று இங்கு சொல்லப்பட்டது.

16 **मधुरधनुषा महीधरजनुषा नन्दामि सुरभिबाणजुषा ।**
**चिद्वपुषा काञ्चिपुरे केलिजुषा बन्धुजीवकान्तिमुषा ॥**

மதுரதனுஷா மஹீதராஜனுஷா
நந்தாமி ஸ்ுரபி பாணஜுஷா |
சித்வபுஷா காஞ்சிபுரே
கேளிஜுஷா பந்துஜீவ காந்திமுஷா ||

மதுரதனுஷா - இனிப்போடுகூடிய வில்லையுடையதும், மஹீதராஜனுஷா - பர்வதராஜனிடமிருந்து பிறப்பையுடையதும், ஸுரபி பாணஜுஷா - மணமுள்ள பாணங்களையுடையதும், காஞ்சிபுரே - காஞ்சீபுரியில், கேளிஜுஷா - விளையாடிக்கொண்டிருக்கிறதும், பந்துஜீவ காந்திமுஷா - செம்பரத்தம்பூவின் காந்தியை அபஹரித்தது மான (தோற்கடித்த காந்தியோடுகூடிய), சித்வபுஷா - சித்ஸ்வரூபத்தோடு கூடிய ஒரு மூர்த்தியினால், நந்தாமி - ஆனந்தமடைகிறேன்.

1. அம்பாளுடைய வில்லானது கரும்பாகையால் மதுரதனுஸ் என்றும், பாணங்கள் ஐந்து புஷ்பங்களாகையால் ஸுரபிபாணங்களென்றும் அம்பாளுடைய நிறமானது அருணமாகையால் பந்துஜீவபுஷ்பத்தின் காந்தியை அதிசயித்ததென்றும் சொல்லப்பட்டது. அம்பிகையின் பாணங்கள்

'கமலம் கைரவம் ரக்தம் கல்ஹாரேந்திவரே ததா |
ஸஹகாரகமித்யுக்தம் புஷ்ப பஞ்சகமீச்வரி ||

என்று சொல்லப்படும்.

17 मधुरस्मितेन रमते मांसलकुचभारमन्दगमनेन ।
मध्येकाञ्चि मनो मे मनसिजसाम्राज्यगर्वबीजेन ॥

மதுர ஸ்மிதேன ரமதே
மாம்ஸல குசபார மந்தகமனேன |
மத்யே காஞ்சி மனோ மே
மனஸிஜ ஸாம்ராஜ்ய கர்வ பீஜேன ||

மதுரஸ்மிதேன - அழகான மந்தஹாஸத்தோடு கூடியதும், மாம்ஸலகுசபார - பருத்ததான ஸ்தனங்களின் பாரத்தால், மந்தகம

னேன - மெதுவான நடையோடு கூடியதும், மத்யேகாஞ்சி - காஞ்சீபுரியின் மத்தியிலிருக்கும், மனஸிஜஸாம்ராஜ்ய கர்வ - மன்மதன் ராஜ்யபாரம் நடத்துவதிலுள்ள கர்வத்திற்கு, பீஜேன - காரணமாயிருப்பதுமான, ஒரு பரம்பொருளால், மே மன: - என்னுடைய மனதானது, ரமதே - களித்துக்கொண்டிருக்கிறது.

1. பூர்வம் பரமசிவனுடைய நேத்ராக்னியினால் பஸ்மீகரிக்கப்பட்ட மன்மதனானவன் காமேச்வரியின் கடாக்ஷத்தினால் மீண்டும் உயிர் பெற்றவுடன் அவன் அம்பிகையை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தபோது, அம்பிகையானவள் அவனுக்கு ஸகல லோகங்களிலும் ஸாம்ராஜ்யத்தைக்கொடுத்து அவனுக்கு வசப்படாதவர்களும் அவனை நிந்திப்பவர்களும் பாபிகளாவார்களென்றும், தன் பக்தர்களுக்கு அவன் வசப்பட்டு அவர்களுடைய காமங்களைப் பூர்த்திசெய்யவேண்டுமென்றும் அனுக்ரஹித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'கச்ச வத்ஸ மனோஜன்மன் அபயம் தவ வித்யதே |
மத் ப்ரஸாதாத் ஜகத் ஸர்வம் மோஹய அவ்யாஹதாசுக: ||

.... .... .... .... ....

அத்ய ப்ரப்ருதி கந்தர்ப்ப மத் ப்ரஸாதாத் மஹீயஸ: |
அத்ருச்யமூர்த்தி: ஸர்வேஷாம் ப்ராணினாம் பவ மோஹக: ||

த்வன் நிந்தாம் யே கரிஷ்யந்தி த்வயி வா விமுகாசயா: |
அவச்யம் க்லீபதைவ ஸ்யாத் தேஷாம் ஜன்மனி ஜன்மனி ||

யே பாபிஷ்டா துராத்மானோ மத்பக்த த்ரோஹிணச்ச யே |
தான் அகம்யாஸு நாரீஷு பாதயித்வா வினாசய ||

யேஷாம் மதீயபூஜாஸு மத்பக்தேஷ்வா த்ருதம் மன: |
தேஷாம் காமஸுகம் ஸர்வம் ஸம்பாதய ஸமீப்ஸிதம் ||'

இவ்விதம் மன்மதனுக்குத் தடையில்லாத ஸாம்ராஜ்யமேற்பட்டதற்கு அம்பிகையின் அனுக்ரஹமானது காரணமாயிருப்பதால் அவனுடைய கர்வத்திற்கு பீஜமாயிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது

18 धरणिमयीं तरणिमयीं पवनमयीं गगनदहनहोतृमयीम्।
अम्बुमयीमिन्दुमयीमम्बामनुकम्पमादिमामीक्षे ॥

தரணிமயீம் தரணிமயீம்
பவனமயீம் ககன தஹன ஹோத்ருமயீம் |
அம்புமயீம் இந்துமயீம்
அம்பாம் அனுகம்பம் ஆதிமாம் ஈக்ஷே ||

தாணிமயீம் - பூமியின் ஸ்வரூபமாயும், தாணிமயீம் - ஸூர்ய ஸ்வரூபமாயும், பவனமயீம் - வாயுஸ்வரூபமாயும், ககன தஹன ஹோத்ருமயீம் - ஆகாசம், அக்னி, ஹோதா இவர்களின் ஸ்வரூபமாயும், இந்துமயீம் - சந்த்ர ஸ்வரூபமாயுமிருக்கிற, ஆதிமாம் அம்பாம் - ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஆதியான தாயாரை, அனுகம்பம் - கம்பாநதியின் கரையில், ஈக்ஷே - பார்க்கிறேன்.

1. பரமசிவனுக்குச் சொல்லப்படும் அஷ்டமூர்த்திகளும் அம்பிகைக்குமிருப்பதாகச் சொல்லப்படும். இந்த அஷ்டமூர்த்திகள் ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசங்களாகிய பஞ்ச பூதங்கள், ஸூர்யன், சந்திரன், யஜமானன் (ஹோதா) என்றவை. அவை இங்கு முறையே தாணி, அம்பு, தஹன, பவன, ககன, தாணி, இந்து, ஹோத்ரு என்று சொல்லப்பட்டன. பரமசிவனுக்கு இந்த எட்டு மூர்த்திகளிருப்பது.

ஜலம் வன்ஹிஸ் ததா யஷ்டா ஸூர்ய சந்த்ரமஸௌ ததா |
ஆகாசம் வாயுரவனீ மூர்த்தயோऽஷ்டௌ பிநாகின: ||

என்றும்

'யா ஸ்ருஷ்டி: ஸ்ரஷ்டுராத்யா வஹதி விதிஹுதம்
யாஹவிர் யா ச ஹோத்ரீ
யே த்வே காலம் விதத்த: ச்ருதி விஷயகுணா
யா ஸ்திதா வ்யாப்ய விச்வம் |
யாமாஹு: ஸர்வபூதப்ரக்ருதிரிதி சயயா
ப்ராணின: ப்ராண வந்த:

ப்ரத்யக்ஷாபி: ப்ரபன்னஸ்தனுபிரவது வஸ் -
தாபிரஷ்டாபிரீச: ||

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பிகைக்கு இவையிருப்பது

'புவி பயஸி க்ருசானௌ மாருதே கே சசாங்கே
ஸவிதரி யஜமானே ऽப்யஷ்டதா சக்திரேகா |
வஹஸி குசபாராப்யாம் யாऽவனம்ராபி விச்வம்
ஸகலஜனனி ஸா த்வம் பாஹிமாம் அத்யவச்யம் ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. இங்கு தாணி என்று இரண்டு இடங்களில் வருவதில் முதலி லுள்ள த என்பதை தனுஸ் என்பதிலிருப்பதுபோலும், இரண்டா வதிலுள்ள த என்பதை தமிழ் என்பதிலிருப்பதுபோலும் உச்சரிக் கவேண்டும்.

19 लीनस्थितिमुनिहृदये ध्यानस्तिमितं तपस्यदुपकम्पम् ।
पीनस्तनभरमीडे मीनध्वजतन्त्रपरमतात्पर्यम् ॥

லீன ஸ்திதி முனிஹ்ருதயே
த்யான ஸ்திமிதம் தபஸ்யத் உபகம்பம் |
பீனஸ்தனபரம் ஈடே
மீனத்வஜ தந்த்ர பரம தாத்பர்யம் ||

முனிஹ்ருதயே - முனீச்வரர்களுடைய ஹ்ருதயத்தில், லீன ஸ்திதி - லயத்தையடைந்திருப்பதும், உபகம்பம் - கம்பாநதிக்கரை யில், த்யானஸ்திமிதம் - த்யானத்தில் அசைவற்று, தபஸ்யத் - தபஸ் செய்கிறதும், பீனஸ்தனபரம் - பருத்த ஸ்தனபாரங்களுடை யதுமான, மீனத்வஜ தந்த்ர பரம தாத்பர்யம் - மன்மத சாஸ்த்ரத் தின் ஸாராம்சத்தை, ஈடே - ஸ்தோத்ரம் செய்கிறேன்.

1. காஞ்சீபுரியில் தன்னைக்குறித்து எப்படி தபஸ் செய்யவே ண்டுமென்பதை பரமசிவன் அம்பிகைக்குச் சொல்லும்போது, பஞ் சாக்னிமத்தியில் ஊசிமுனையில் நின்றுகொண்டு தன்னைத்யானித்துத்

தபஸ் செய்யவேண்டுமென்று சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'கரே த்ருத்வா சுகச்ரேஷ்டம் பஞ்சாக்னௌ ஸூசிகோபரி |
ஸ்தித்வா மாம் த்யாயதீ பக்த்யா தப: குரு ஸுதுச்சரம் ||

20 श्वेता मन्थरहसिते शाता मध्ये च वाङ्मनोतीता ।
शीता लोचनपाते स्फीता कुचसीम्नि शाश्वती माता ॥

ச்வேதா மந்தர ஹஸிதே
சாதா மத்யே ச வாங்மனோதீதா |
சீதா லோசனபாதே
ஸ்பீதா குசஸீம்னி சாச்வதீ மாதா ||

சாச்வதீ மாதா - அழிவில்லாத தாயாரான ஸ்ரீகாமாக்ஷியானவள், மந்தஹஸிதே - மந்தஹாஸத்தில், ச்வேதா - வெளுப்பான நிறத்தோடும், மத்யே - இடையில், சாதா - இளைத்தவளாயும். ச - இன்னும், வாங்மனோதீதா - வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவளாயும், லோசனபாதே - பார்வையில், சீதா - குளிர்ச்சியோடு கூடியவளும், குசஸீம்னி - ஸ்தனப்ரதேசத்தில், ஸ்பீதா - பருத்தும் (விளங்குகிறாள்).

1. புன்சிரிப்பை வெண்ணிலவுக்கு ஒப்பிடப்படுவது வழக்கமாகையால் அது வெளுப்பான நிறத்தோடிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அம்பிகையினுடைய முகமாகிய சந்த்ரனிடமிருக்கும் புன்சிரிப்பாகிற வெண்ணிலவானது ஸாமான்யமான சந்த்ரனின் நிலவைவிட எத்தனையோ மடங்கு ச்ரேஷ்டமானதென்பதாக 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்மித ஜ்யோத்ஸ்னா ஜாலம் தவ வதன சந்த்ரஸ்ய பிபதாம்
சகோராணாம் ஆஸீத் அதிரஸதயா சஞ்சுஜடிமா |
அதஸ்தே சீதாம்சோ: அம்ருத லஹரீம் ஆம்ல ருசய:
பிபந்தி ஸ்வச்சந்தம் நிசி நிசி ப்ருசம் காஞ்ஜிகதியா ||

2. இங்கு அம்பிகையைப் பலக்ஷிதமாக வர்ணித்திருப்பது போல் ஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'அராளா கேசேஷு ப்ரக்ருதிஸரளா மந்தஹஸிதே
  சிரீஷாபா சித்தே த்ருஷதுபல சோபா குசதடே |
ப்ருசம் தன்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹ விஷயே
  ஜகத்த்ராதும் சம்போர் ஜயதி கருணா காசித் அருணா ||'

21 पुरतः कदा नु करवै पुरवैरिविमर्दपुलकिताङ्गलताम् ।
पुनतीं काञ्चीदेशं पुष्पायुधवीर्यसरसपरिपाटीम् ॥

புரத: கதா நு கரவை
  புரவைரி விமர்த புளகிதாங்கலாதாம் |
புனதீம் காஞ்சீதேசம்
  புஷ்பாயுத வீர்ய ஸரஸ பரிபாடீம் ||

புரவைரி விமர்த்த-(புரங்களை யெரித்த) பரமசிவனுடைய காடாலிங்கனத்தினல், புளகிதாங்கலதாம்—புளகமடைந்த சரீரத்தையுடையவளும், காஞ்சீதேசம் புனதீம்—காஞ்சீபுரியை பாவனமாகச் செய்பவளும், புஷ்பாயுத வீர்ய—மன்மதனுடைய ப்ரபாவத்தின், ஸரஸ பரிபாடீம்—அழகான முறையின் ஸ்வரூபமாயிருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷியை, புரத:—என் முன்பாக, கதா கரவை நு—எப்போது தான் இருக்கச்செய்வேனே!

1. அதாவது, அவ்விதமாயிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியை தனக்கு எப்போது பார்க்கக்கிடைக்குமோ என்று சொல்லுகிறார்.

22 पुण्या कापि पुरंध्री पुङ्खितकंदर्पसंपदा वपुषा ।
पुलिनचरी कम्पायाः पुरमथनं पुलकनिचुलितं कुरुते ॥

புண்யா காபி புரந்த்ரீ
புங்கித கந்தர்ப்ப ஸம்பதா வபுஷா |
புளினசரீ கம்பாயா:
புரமதனம் புளக நிசுளிதம் குருதே||

கம்பாயா: புளினசரீ—கம்பாநதியின் மணல் திட்டுகளில் ஸஞ் சரிப்பவளும், புண்யா புரந்த்ரீ—புண்யம் நிறைந்த க்ருஹிணியாயு மிருக்கும், காபி—வர்ணிக்கமுடியாத ஒருவள், புங்கித கந்தர்ப்ப ஸம்பதா—மன்மதனுடைய ஸம்பத்து நிறைந்ததான, வபுஷா-தன் சரீ ரத்தினால், புரமதனம்—முப்புரங்களை யெரித்தவரான பரமசிவனை, புளக நிசுளிதம்—மயிர்க்கூச்சல் நிறைந்தவராக, குருதே—செய்கிறாள்.

1. புளினமென்பது நதிகளிலிருக்கும் மணல் திட்டைக் குறிப்பதுடன் அவற்றின் கரையையும் குறிக்கும்.

2. புரந்த்ரீ என்றால் வீட்டிலிருக்கும் ஜனங்களைத் தாங்கும் ஸௌமங்கலிஸ்த்ரீ அல்லது, உயிருடனிருக்கும் பதி புத்ரர்களையுடைய (ஸௌமங்கிலி) ஸ்த்ரீ என்று அர்த்தம்.

23 तनिमाद्वैतवलग्नं तरुणारुणसंप्रदायतनुलेखम् ।
तटसीमनि कंपायास्तरुणिमसर्वस्वमाद्यमद्राक्षम् ॥

தனிமாத்வைத வலக்னம்
தருணாருண ஸம்ப்ரதாய தனுலேகம் |
தடஸீமனி கம்பாயா:
தருணிம ஸர்வஸ்வம் ஆத்யம் அத்ராக்ஷம்||

தனிமாத்வைத வலக்னம்—மிகவும் மெல்லியதான இடுப்பை யுடையதும், தருணாருண ஸம்ப்ரதாய—ஸரியான சிகப்பு நிறத்தை வழக்கமாக உடைய, தனுலேகம்—மெல்லிய சரீரத்தோடு கூடிய தும், தருணிம ஸர்வஸ்வம்—யௌவனமே நிறம்பியுள்ளதுமான, ஆத்யம்—ஆதி பரம்பொருளை, கம்பாயா: தடஸீமனி—காம்பா நதியின் கரையில், அத்ராக்ஷம்—பார்த்தேன்.

24 पौष्टिककर्मविपाकं पौष्पशरं सविधसीम्नि कम्पायाः ।
अद्राक्षमात्तयौवनमभ्युदयं किञ्चिदर्धशशिमौलेः ॥

பௌஷ்டிக கர்ம விபாகம்
பௌஷ்பசரம் ஸவிதஸீம்னி கம்பாயா: |
அத்ராக்ஷம் ஆத்தயௌவனம்
அப்யுதயம் கிஞ்சித் அர்த்தசசிமௌளே:||

பௌஷ்பசரம்-(மன்மதனுடைய ஆட்சிக்குள்பட்டதான) காமத்தை, பௌஷ்டிககர்ம விபாகம்—புஷ்டியாக ஏற்படச்செய்வதும், ஆத்த யௌவனம்—யௌவனம் நிறைந்ததும், அர்த்தசசிமௌளே:—அர்த்த சந்த்ரனைசிரஸில் தரித்தவரான ஏகாம்ர நாதருடைய, கிஞ்சித் அப்யுதயம்—ஏதோ ஒரு (வர்ணனையிலடங்காத) மேன்மையாயிருப்பதுமானமூர்த்தியை, கம்பாயா:—கம்பாநதியுடைய, ஸவிதஸீம்னி—கரையின் ப்ரதேசத்தில், அத்ராக்ஷம்—பார்த்தேன்.

25 संश्रितकाञ्चीदेशे सरसिजदौर्भाग्यजाग्रदुत्तंसे ।
संविन्मये विलीये सारस्वतपुरुषकारसाम्राज्ये ॥

ஸம்ச்ரித காஞ்சீ தேசே
ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே |
ஸம்வின்மயே விலீயே
ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்யே||

ஸம்ச்ரித காஞ்சிதேசே—காஞ்சீபுரியை அடைந்ததும், ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே—சந்த்ரனை சிரோபூஷணமாயுடையதும், ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்யே—வாக்கினுடைய ஸாமர்த்தியத்தைப்பற்றிய ஸாம்ராஜ்யத்தோடு கூடியதும், ஸம்வின்மயே—ஞான ஸ்வரூபமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியிடத்தில், விலீயே—நான் லயித்திருக்கிறேன்.

1. தாமரை புஷ்பமானது பகலில் மலர்ந்து இரவில் மூடுவதினால் அதற்கு ஸூர்யன் மித்ரனாகவும் சந்த்ரன் சத்ருவாகவுமிருப்பதாகச் சொல்வது கவிகளின் ஸம்ப்ரதாயம். அதையொட்டி இங்கு சந்த்ரனை ஸரஸிஜ தௌர்பாக்யனென்றும், அவன் அம்பிகையினுடைய உத்தம்ஸமாக விளங்குவதால் 'ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரத் உத்தம்ஸே' என்று அம்பிகையை வர்ணிக்கப்பட்டது.

2. புருஷகாரமென்றால் வீர்யம், ஸாமர்த்யம், பௌருஷம் என்று அர்த்தம். அம்பிகை ஸர்வ வித்யா ரூபிணியாயும் வர்ணமயியாகவும் இருக்கிறபடியால் வாக்கின் ஸாமர்த்யத்தைப்பற்றிய ஸாம்ராஜ்யத்தோடிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அம்பிகையின் உபாஸகர்கள் புருஷரூபமடைந்த ஸரஸ்வதீ தேவிமாதிரி ஆகிவிடுவதாகச் சொல்லப்படும். அம்பிகையின் பாதோதகத்திற்கே இவ்விதமான வாக்விலாஸத்தைக்கொடுக்கும் மஹிமையுண்டென்பதாக

'கதா காலே மாத: கதய கலிதாலக்தகரஸம்
  பிபேயம் வித்யார்த்தீ தவ சரண நிர்ணேஜன ஜலம் |
ப்ரக்ருத்யா மூகானாமபி ச கவிதா காரணதயா
  கதா தத்தே வாணீ முக கமல தாம்பூல ரஸதாம் ||'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான பலனை யுத்தேசித்துச் செய்யப்படும் உபாஸனா க்ரமங்களுக்கு ஸாரஸ்வத ப்ரயோகங்களென்று பெயர்.

26 मोदितमधुकरविशिखं स्वादिमसमुदायसारकोदण्डम् ।
आदृतकाञ्चीखेलनमादिममारुण्यभेदमाकलये ॥

மோதித மதுகர விசிகம்
  ஸ்வாதிம ஸமுதாய ஸார கோதண்டம் |
ஆத்ருத காஞ்சீ கேலனம்
  ஆதிமம் ஆருண்யபேதம் ஆகலயே ||

மோதித மதுகர விசிகம்—வண்டுகளுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் (புஷ்ப) பாணங்களையுடையதும், ஸ்வாதிம ஸமுதாய—தித்திப்பெல்லாம் சேர்ந்து, ஸார கோதண்டம்—ஸாரமாயிருக்கும் (இக்ஷு) கோதண்டத்தையுடையதும், ஆத்ருத காஞ்சீ கேலனம்—காஞ்சீபுரியில் விளையாடுவதை ஆதரித்ததும், ஆதிமம்—எல்லாவற்றிற்கும் ஆதியாயிருப்பதுமான, ஆருண்யபேதம்—சிவந்ததொரு மூர்த்தியை, ஆகலயே—தியானிக்கிறேன்.

27 उररीकृतकाञ्चिपुरीमुपनिषदरविन्दकुहरमधुधाराम् ।
उन्नम्रस्तनकलशीमुत्सवलहरीमुपास्महे शम्भोः ॥

உரரீக்ருத காஞ்சி புரீம்
உபநிஷதரவிந்த குஹர மது தாராம் |
உன்னம்ர ஸ்தனகலசீம்
உத்ஸவலஹரீம் உபாஸ்மஹே சம்போ:||

உரரீக்ருத காஞ்சிபுரீம்—காஞ்சீபுரியை விளங்கச்செய்பவளும், உபநிஷதரவிந்த—உபநிஷத்துக்களாகிய தாமரஸ புஷ்பத்தின், குஹர மது தாராம்—நடுவிலிருந்து பெருகும் மகரந்தப் பெருக்குமாதிரி யிருப்பவளும், உன்னம்ர ஸ்தனகலசீம்—வளையாத (நிமிர்ந்திருக்கும்) ஸ்தன கலசங்களையுடையவளும், சம்போ:—பரமசிவனுடைய, உத்ஸவ லஹரீம்—பேரானந்தத்தின் அலைபோன்றவளுமான ஸ்ரீ காமாக்ஷியை, உபாஸ்மஹே—உபாஸிக்கிறோம்.

1. புஷ்பங்களிலிருந்து தேன் (பூத்தேன்) பெருகுவதுமாதிரி உபநிஷத்துக்களாகிய தாமரஸ புஷ்பங்களிலிருந்து பெருகும் தேனாக அம்பிகையைச் சொல்லப்பட்டது. ஸகல உபநிஷத்துக்களுக்கும் முடிவான தாத்பர்யமாக அம்பிகை இருப்பதால் இம்மாதிரி சொல்லப்பட்டது.

28 एणशिशुर्दीर्घलोचनमेनःपरिपन्थि संततं नमताम् ।
एकाम्रनाथजीवितमेवंपददूरमेकमवलम्बे ॥

ஏண சிசு தீர்கலோசனம்
ஏன: பரிபந்த்தி ஸந்ததம் நமதாம் |
ஏகாம்ரநாத ஜீவிதம்
ஏவம்பததூரம் ஏகம் அவலம்பே||

ஏணசிசு தீர்க்கலோசனம்— மான்குட்டியினுடையதைப்போன்ற நீண்ட கண்களையுடையதும், ஸந்ததம்—எப்போதும், நமதாம்—நமஸ்கரிக்கும் பக்தர்களுடைய, ஏன: பரிபந்த்தி—பாபத்தை தடுப்பதும் (போக்குவதும்), ஏகாம்ரநாத ஜீவிதம்—ஏகாம்ரநாதருடைய பிராணனுயிருப்பதும், ஏவம் பத தூரம்—இம்மாதிரி என்று சொல்வதற்கு எட்டாததுமான, ஏகம்—ஒரு பரம்பொருளை, அவலம்பே—சரணமடைகிறேன்.

1. அம்பிகையினுடைய ஸ்வரூபமானது இம்மாதிரிதானிருக்கிறதென்பதாக ஒருவராலும் சொல்லமுடியாது என்று இங்கு சொல்லப்பட்டது. இதேமாதிரி 'ஏவமித்யாகமாபோத்யா,' 'ஏதத் தத் இத்யனிர்தேச்யா' என்பதாக ஸ்ரீலலிதாத்ரிசதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

29 स्मयमानमुखं काञ्चीमयमानं कमपि देवताभेदम् ।
दयमानं वीक्ष्य मुहुर्वयमानन्दामृताम्बुधौ मग्नाः ॥

ஸ்மயமான முகம் காஞ்சீ—
மயமானம் கமபி தேவதாபேதம் |
தயமானம் வீக்ஷ்ய முஹுர்
வயம் ஆனந்தாம்ருதாம்புதௌ மக்நா: ||

ஸ்மயமானமுகம் - சிரித்த முகத்தையுடையதும், காஞ்சீமயமானம் - காஞ்சிபுரியை வியாபித்து விளங்குவதும், தயமானம்-கருணையோடுகூடியதுமான, கமபி தேவதாபேதம் - ஒரு தேவதையை, முஹுர் வீக்ஷ்ய - அடிக்கடி பார்த்து, வயம் - நாம், ஆனந்தாம்ருதாம்புதௌ - ஆனந்தமென்ற அம்ருத ஸமுத்ரத்தில், மக்நா: - மூழ்கியிருக்கிறோம்.

30. कुतुकजुषि काञ्चिदेशे कुमुदतपोराशिपाकशेखरिते ।
कुरुते जनो मनोऽयं कुलगिरिपरिवृढकुलैकमणिदीपे ॥

குதுகஜுஷி காஞ்சிதேசே
குமுத தபோராசி பாக சேகரிதே |
குருதே ஜனோ மனோऽயம்
குலகிரி பரிவ்ருட குலைக மணிதீபே ||

காஞ்சிதேசே - காஞ்சிபுரியில், குதுகஜுஷி - உத்ஸாஹத்தோடு வஸிப்பதும், குமுத - நீலோத்பலங்களின், தபோராசிபாக — தபஸ்ஸின் பரிபாகமான சந்த்ரனை, சேகரிதே - சிரோ பூஷணமாய் உடையதும், குலகிரி பரிவ்ருட - குலபர்வதங்களுக்குத் தலைவனை ஹிமவானுடைய, குலைகமணி தீபே - குலத்திற்கு ஒரே ஒரு (முக்யமான) ரத்ன தீபமாய் விளங்கும் ஒரு ரூபத்தில், அயம் ஜன: - இந்த ஜனமானவன், மன: குருதே - மனதைச் செலுத்துகிறான்.

1. அதாவது, தான் அவ்விதமாக த்யானம் செய்வதை 'அயம் ஜன: மன: குருதே' என்று சொல்லுகிறார்.

2. அம்பிகையானவள் தன் பிதாவான ஹிமவானுடைய குலத்திற்கு ரத்ன தீபமாய், குன்றுவிளக்காய், இருப்பதை நமது ஆசார்யாளும் 'ரூபாதிகா சிகரி பூபாலவம்சமணிதீபாயிதா பகவதீ' என்பதாக 'அம்பாஷ்டக'த்தில் வர்ணித்திருக்கிறார்கள்.

31. वीक्षेमहि काञ्चिपुरे विपुलस्तनकलशगरिमपरवशितम् ।
विद्रुमसहचरदेहं विभ्रमसमवायसारसंनाहम् ॥

வீக்ஷேமஹி காஞ்சிபுரே
விபுல ஸ்தனகலச கரிம பரவசிதம் |
வித்ரும ஸஹசர தேஹம்
விப்ரம ஸமவாய ஸார ஸன்னாஹம் ||

விபுல ஸ்தனபார கரிம - பருத்ததான ஸ்தனபாரங்களின் கனத்தினால், பரவசிதம் - மிகவும் குனிந்ததாயும், வித்ருமஸஹசரதேஹம்- பவழம் போன்றதான சரீரத்தையுடையதும், விப்ரம ஸமவாய ஸார ஸன்னாஹம் - காமகேளிகளுடைய சேர்க்கையின் ஸாரமாகிற (யுத்த) கோலத்தோடுகூடியதுமான ஒரு மூர்த்தியை, காஞ்சிபுரே - காஞ்சீபுரியில், வீக்ஷேமஹி - பார்க்கிறோம்.

32. कुरुविन्दगोत्रगात्रं कूलचरं कमपि नौमि कम्पायाः ।
कूलङ्कषकुचकुम्भं कुसुमायुधवीर्यसारसंरम्भम् ॥

குருவிந்த கோத்ர காத்ரம்
கூலசரம் கமபி நௌமி கம்பாயா: |
கூலங்கஷ குசகும்பம்
குஸுமாயுத வீர்ய ஸார ஸம்ரம்பம் ||

குருவிந்த கோத்ர காத்ரம் - சிகப்பு ரத்னத்திலுண்டானது போன்ற சரீரத்தையுடையதும், கம்பாயா: கூலசரம் - கம்பாநதியின் கரையில் ஸஞ்சரிப்பதும், கூலங்கஷ குசகும்பம் - (ரவிக்கையாகிற) கரையைக் கிழித்தான ஸ்தனங்களையுடையதும், குஸுமாயுத - மன்மதனுடைய, வீர்ய ஸார ஸம்ரம்பம் - வீர்யத்தின் ஸாரமாகிய வேகத்தோடு கூடியதுமான, கமபி - ஒரு (வர்ணிக்க முடியாத) மூர்த்தியை, நௌமி - நமஸ்கரிக்கிறேன்.

1. அம்பாளுடைய வக்ஷ: ப்ரதேசத்தை இதேமாதிரி ஆசார்யாளும்,

'குசௌ ஸத்ய: ஸ்வித்யத் தடகடித கூர்பாஸ பிதுரௌ
கஷந்தௌ தோர்மூலே கனக கலசாபௌ கலயதா |

என்பதாக 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

இவ்விதம் ஸ்தனங்களை வர்ணிப்பதானது அம்பாளுடைய ஸௌந்தர்யத்தைக்காட்டுவது தவிர, ஜகன்மாதாவான அம்பாளுடைய மஹோத்க்ருஷ்டமான மாத்ருவத்தைக் காட்டுவதற்காக இம்மாதிரி அடிக்கடி சொல்லப்படுகிறது.

33 कुड्मलितकुचाकिशोरैः कुर्वाणैः काञ्चिदेशसौहार्दम् ।
कुङ्कुमशोणैर्निचितं कुशलपथं शंभुसुकृतसंभारैः ॥

குட்மளித குச கிசோரை:
குர்வாணை: காஞ்சிதேச ஸௌஹார்தம் |
குங்கும சோணைர் நிசிதம்
குசல பதம் சம்புஸுக்ருத ஸம்பாரை: ||

குட்மளித குச கிசோரை: - கொஞ்சம் மலர்ந்ததுபோன்ற இளம் ஸ்தனங்களையுடையதும், காஞ்சிதேச - காஞ்சிதேசத்தில், ஸௌஹார்தம் குர்வாணை: - பற்றுதலை செய்வதும் (உடையதும்) குங்குமசோணை:- குங்குமப் பூவைப்போல் (அல்லது, குங்குமத்தைப் போல்) சிகப்புநிறமுடையதும், சம்பு ஸுக்ருத ஸம்பாரை: - பரம சிவனுடைய ஸுக்ருதங்களின் சேர்க்கையாயிருப்பதுமான ஒரு மூர்த்தியால், குசல பதம் - (பக்தர்களுடைய) க்ஷேமமார்க்கமானது, நிசிதம் - போடப்பட்டிருக்கிறது (ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.)

34. अङ्कितकचेन केनाचिदन्धंकरणौषधेन कमलानाम् ।
अन्तःपुरेण शम्भोरलंक्रिया कापि कल्प्यते काञ्च्याम् ॥

அங்கித கசேன கேனசித்
அந்தம்கரணௌஷதேன கமலாநாம் |
அந்த: புரேண சம்போ:
அலங்க்ரியா காபி கல்ப்யதே காஞ்ச்யாம் ||

கமலாநாம் - தாமரஸ புஷ்பங்களுக்கு, கேனசித் - ஏதோ ஒரு, அந்தம்கரணௌஷதேன - இருட்டைச் செய்யும் மருந்தினால் (அதாவது, அவற்றை மூடச்செய்யும் சந்த்ரனால்), அங்கித கசேன - அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடையவளான, சம்போ:- பரமசிவனுடைய, அந்த:புரேண - பத்னியால், காஞ்ச்யாம் - காஞ்சீபுரியில் (காஞ்சீபுரிக்கு), காபி அலங்க்ரியா - ஒரு (வர்ணனையிலடங்காத) அழகானது, கல்ப்யதே - ஏற்படுத்தப்படுகிறது.

35 उररीकरोमि संततमूष्मलफालेन लालितं पुंसा ।
उपकम्पमुचितखेलनमुर्वीधरवंशसंपदुन्मेषम् ॥

ஊரரீகரோமி ஸந்ததம்
ஊஷ்மல பாலேன லாலிதம் பும்ஸா |
உபகம்பம் உசிதகேலனம்
உர்வீதர வம்ச ஸம்பத் உன்மேஷம் ||

ஊஷ்மல பாலேன - சுடுகிற நெற்றியையுடைய (அதாவது அக்னியை நேத்ரமாக உடைய), பும்ஸா - புருஷனால் (அதாவது, பரமசிவனால்), லாலிதம் - சீராட்டப்படுகிறதும், உபகம்பம் - கம்பா நதியின் ஸமீபத்தில், உசிதகேலனம் - விளையாடுவதில் ப்ரியத்தோடு (அல்லது, பழக்கத்தோடு) கூடியதும், உர்வீதர வம்ச - ஹிமவானுடைய வம்சத்தின், ஸம்பத் உன்மேஷம் - ஸம்பத்தை விளங்கச் செய்வதுமான ஒரு மூர்த்தியை, ஸந்ததம் - எப்போதும், ஊரீகரோமி - த்யானித்துக்கொண்டிருக்கிறேன்.

36 अङ्कुरितस्तनकोरकमङ्कालङ्कारमेकचूतपतेः ।
आलोकेमहि कोमलमागमसंलापसारयाथार्थ्यम् ॥

அங்குரித ஸ்தனகோரகம்
அங்காலங்காரம் ஏக சூதபதே: |
ஆலோகேமஹி கோமளம்
ஆகம ஸம்லாப ஸார யாதார்த்யம் ||

அங்குரித ஸ்தனகோரகம் - மொட்டுக்கள் போன்ற ஸ்தனங்களையுடையதும், கோமளம் - ம்ருதுவானதும், ஆகம ஸம்லாப - வேதவாக்குகளின், ஸார யாதார்த்யம் - ஸாரமான தாத்பர்யமாய் இருப்பதும், ஏக சூதபதே: - ஏகாம்ரநாதருடைய, அங்காலங்காரம் - மடியின் அலங்காரமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியை, ஆலோகேமஹி - பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

37 पुञ्जितकरुणमुदञ्चितशिञ्जित मणिकाञ्चिकिमपि काञ्चिपुरे।
मञ्जरितमृदुलहासं पिञ्जरतनुरुचि पिनाकिमूलधनम् ॥

புஞ்ஜித கருணம் உதஞ்சித—
சிஞ்ஜித மணி காஞ்சி கிமபி காஞ்சிபுரே |
மஞ்ஜரித ம்ருதுள ஹாஸம்
பிஞ்ஜர தனுருசி பிநகி மூலதனம் ||

புஞ்ஜித கருணம் - கருணை நிறைந்ததும், உதஞ்சித சிஞ்ஜித மணிகாஞ்சி - ரத்னமயமான ஒட்டியாணத்தின் சலங்கைகளின் சப்தத்தை வெளிப்படுத்துவதும், மஞ்ஜரித ம்ருதுள ஹாஸம் - மந்த ஹாஸம் நிறைந்ததும், பிஞ்ஜாதனுருசி - பொன்போன்ற தேஹகாந்தியுடையதும், பிநகி மூலதனம் - பரமசிவனுக்கு மூலதனமாயிருப்பதுமான, கிமபி - ஏதோ ஒரு மூர்த்தியானது, காஞ்சிபுரே - காஞ்சீபுரியில் (விளங்குகிறது).

[குறிப்பு:—மூலத்திலிருக்கும் ஒவ்வொரு பதத்திற்கும் தனித் தனியாக அர்த்தம் சொல்லி அந்த பதத்தினால் ச்லோகத்தில் என்ன அர்த்தம் ஏற்படுகிறது என்று காட்டுவதாயிருந்தால் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் ஏராளமான இடம் வேண்டும். ஆகவே இந்த ஸ்தோத்ரத்தின் மொழி பெயர்ப்பில் பதங்களின் சேர்க்கைக்கு எது ஸாரமான பாவமோ அதுமட்டும் காட்டப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.]

38 लोलहृदयोऽस्मि शम्भोर्लोचनयुगलेन लेह्यमानायाम्।
लालितपरमशिवायां लावण्यामृततरङ्गमालायाम् ॥

லோல ஹ்ருதயோ஽ஸ்மி சம்போ:
லோசன யுகளேன லேஹ்யமானாயாம் |
லாலித பரமசிவாயாம்
லாவண்யாம்ருத தரங்க மாலாயாம் ||

சம்போ: - பரமசிவனுடைய, லோசனயுகளேன - இரு கண்களாலும், லேஹ்யமானுயாம்-ஆசையோடு அனுபவிக்கப்படுவதும், லாலித பரமசிவாயாம் - பரமசிவனை மோஹிக்கச் செய்ததும், லாவண்யாம்ருத தரங்க மாலாயாம் - ஸௌந்தர்யமாகிற அம்ருத ஸமுத்ரத்தின் அலைகளின் கூட்டம்போலிருப்பதுமான ஒரு மூர்த்தியினிடத்தில், லோலஹ்ருதயோऽஸ்மி - ஊசலாடும் (அல்லது, ஆசையோடு கூடிய) மனதோடிருக்கிறேன்.

1. அம்பிகையின் அழகைத் தன் கண்களால் பருகிவிடுவது போல் பரமசிவன் பார்ப்பதாக 'லோசனயுகளேன லேஹ்யமானுயாம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

2. ஸௌந்தர்யமாகிற ஸமுத்ரத்தில் அடுத்தடுத்து வரும் அலைகள்போல் அம்பிகை இருப்பதை 'லாவண்யாம்ருத தரங்க மாலாயாம்' என்பதில் சொல்லப்பட்டது. அடுத்தடுத்துவரும் அலைகளின் சேர்க்கைக்கு (தரங்க மாலைக்கு) லஹரி என்று பெயர். அம்பிகை இவ்விதமான ஸௌந்தர்யலஹரீ ரூபமாயிருப்பதால் அந்த ஸௌந்தர்யத்தைப்பற்றித் தான் எழுதிய ஸ்தோத்ரத்திற்கே ஸ்ரீமதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரீ' என்று பெயர்வைத்தார்கள்.

39 मधुकरसहचरचिकुरैर्मदनागसमयदीक्षितकटाक्षैः ।
मण्डितकम्पातीरैर्मङ्गलकन्दैर्ममास्तु सारूप्यम् ॥

மதுகர ஸஹசர சிகுரை:
  மதனாகம ஸமய தீக்ஷித கடாக்ஷை: |
மண்டித கம்பா தீரை:
  மங்கள கந்தைர் மமாஸ்து ஸாரூப்யம் ||

மதுகர ஸஹசர சிகுரை:— வண்டுகள் போன்றதான (கறுத்த) கூந்தல்களையுடையதும், மதனாகமஸமய — காமசாஸ்த்ரத்தை போதிப்பதென்பதான, தீக்ஷித—தீக்ஷையோடு கூடிய, கடாக்ஷை:— கடாக்ஷங்களையுடையதும், மண்டித கம்பாதீரை: — கம்பாநதியின்

கரையை அலங்கரிப்பதும், மங்கள கந்தை: - மங்களத்தின் மூலம் போன்றதுமான ஒரு மூர்த்தியோடு, ஸ்ரூப்யம்-ஸாரூப்யமானது, மம அஸ்து – எனக்கு ஏற்படட்டும்.

40 वदनारविन्दवक्षोवामाङ्कतटीवशंवदीभूता ।
पुरुषत्रितये त्रेधा पुरंध्रिरूपा त्वमेव कामाक्षि ॥

வதனாரவிந்த வக்ஷோ-
வாமாங்க தடீ வசம்வதீ பூதா |
புருஷ த்ரிதயே த்ரேதா
புரந்த்ரி ரூபா த்வமேவ காமாக்ஷி ||

காமாக்ஷி – ஹே காமாக்ஷிதேவி! – புருஷத்ரிதயே - ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று பதிகளிடத்தில், வதனாவிந்த வக்ஷா வாமாங்கதடீ – முறையே அவர்களுடைய முக கமலத்திலும், மார்பிலும், இடதுமடியிலும், வசம்வதீ பூதா – எப்போதும் இருந்துகொண்டு, த்ரேதா – மூன்று ரூபங்களோடுகூடிய, புரந்த்ரீ ரூபா - பத்னீ ஸ்வரூபமாக, த்வமேவ – நீயே (இருக்கிறாய்).

1. இதனால் ஸரஸ்வதீ, லக்ஷ்மீ, பார்வதீ என்ற மூவரும் பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பிகையின் ரூபங்களென்பது சொல்லப்பட்டது.

41 बाधाकरीं भवाब्धेराधाराद्यम्बुजेषु विचरन्तीम् ।
आधारीकृतकाञ्चीं बोधामृतवीचिमेव विमृशामः ॥

பாதாகரீம் பவாப்தே:
ஆதாராத்யம்புஜேஷு விசரந்தீம் |
ஆதாரீக்ருத காஞ்சீம்
போதாம்ருத வீசிமேவ விம்ருசாம: ||

பவாப்தே: – ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திற்கு, பாதாகரீம் – இடையூறைச் செய்பவளும், ஆதாராதி அம்புஜேஷு – மூலாதாரம் முதலான கமலங்களில், விசரந்தீம் - ஸஞ்சரிப்பவளும், ஆதாரீக்ருத காஞ்சீம்-காஞ்சீபுரியை வாஸஸ்தானமாக உடையவளும், போதாம்ருத வீசிம் ஏவ – ஞானம்ருத (ஸமுத்ர)த்தின் அலையாயிருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷியையே, விம்ருசாம: – த்யானம் செய்கிறோம்.

1. 'ப்வாப்தே: பாதாகரீம்' என்பதினால் பக்தர்களை ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலிருந்து கரையேறச்செய்து விடுவிப்பதாக அம்பிகையைப் பற்றிச் சொல்லப்பட்டது. இதேமாதிரி ஆசார்யாளால்

'................ .......ஜன்மஜலதௌ
நிமக்னானாம் தம்ஷ்ட்ரா முராரிபு வராஹஸ்ய பவதி ||'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும்

'ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா |'

என்று லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அம்பிகையானவள் குண்டலினீ ரூபிணியாய் மூலாதாரம் முதலான ஷட் சக்ரங்களிலும் ஸஞ்சரிப்பதை 'ஆதாராத்யம் புஜேஷு விசரந்தீம்' என்று இங்கு சொல்லப்பட்டது. இதை விபரமாக ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசமுபரி |
மனோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||

ஸுதாதாராஸாரை: சரணயுகளாந்தர் விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புனரபி ரஸாம்னாய மஹஸ: |
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபம் அத்யுஷ்ட வலயம்
ஸ்வமாத்மானம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி ||'

42 कलयाम्यन्तः शशधरकलयाङ्कितमौलिममलचिद्वलयाम् ।
अलयामागमपीठीनिलयां वलयाङ्कसुन्दरीमम्बाम् ॥

கலயாம்யந்த: சசதர-
கலயாங்கித மௌளிம் அமல சித்வலயாம் |
அலயாம் ஆகமபீட-
நிலயாம் வலயாங்கஸுந்தரீம் அம்பாம் ॥

சசதர கலயாங்கித மௌளிம் — சந்த்ரனுடைய கலையினால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தையுடையவளும், அமல சித்வலயாம் — நிர்மலமான சித்ரூபமாயிருப்பவளும், அலயாம் — அழிவில்லாதவளும், ஆகமபீட நிலயாம் — வேதங்களாகிற பீடத்திலிருப்பவளும், வலயாங்கித ஸுந்தரீம் அம்பாம் — வளைகளையணிந்தவளுமான ஜகன் மாதாவை, அந்த: கலயாமி — என்மனதில் எப்போதும் த்யானம் செய்கிறேன்.

43 शर्वादि परमसाधकगुर्वानीताय कामपीठजुषे ।
सर्वाकृतये शोणिमगर्वाय समर्प्यते हृदयम् ॥

சர்வாதி பரம ஸாதக-
குர்வானீதாய காமபீடஜுஷே |
ஸர்வாக்ருதயே சோணிம-
கர்வாய ஸமர்ப்யதே ஹ்ருதயம் ॥

சர்வாதி — பரமசிவன் முதலான, பரமஸாதக குர்வானீதாய — உத்தமமான ஸாதகர்களான குருக்களால் வரவழைக்கப்பட்டதும் (உபாஸிக்கப்பட்டதும்), காமபீடஜுஷே — காமகோடி பீடத்தில் விளங்குவதும், ஸர்வாக்ருதயே — ஸகலமான ஜகத்தின் ரூபமாயிருப்பதும், சோணிம கர்வாய — உயர்ந்ததான சிகப்பு நிறத்தை யுடையதுமான ஒரு மூர்த்தியிடத்தில், ஹ்ருதயம் — (என்னுடைய) மனதானது, ஸமர்ப்யதே — அர்ப்பணம் பண்ணப்படுகிறது.

1. அம்பிகையின் உபாஸகர்களில் பரமசிவனே முதன்மையாகச் சொல்லப்படும். இதனால் அவரை ஆதிகுரு, ஆதிநாதரென்று சொல்வது ஸம்ப்ரதாயம். அம்பிகையை ப்ரதிபாதிக்கும் சாஸ்த்ரங்களாகிய தந்த்ரங்கள் பரமசிவனால் தன்னுடைய இரு அம்சங்களான சிவ, சக்தி ரூபங்களில் குரு, சிஷ்ய பாவத்தோடிருந்து வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

'குரு சிஷ்ய பதே ஸ்தித்வா ஸ்வயமேவ ஸதாசிவ: |
ப்ரச்னோத்தர பதைர் வாக்யை: தந்த்ரம் ஸமவதாரயத் ||'

குருமண்டலத்தைச் சொல்லும்போதும் 'ஸதாசிவஸமாரம்பாம்' என்று சொல்வது வழக்கம்.

44 **समया सांध्यमयूखैः समया बुद्धया सदैव शीलितया ।**
**उमया काञ्चिरतया न मया लभ्येत किं नु तादात्म्यम् ॥**

ஸமயா ஸாந்த்ய மயூகை:
ஸமயா புத்யா ஸதைவ சீலிதயா |
உமயா காஞ்சீரதயா
ந மயா லப்யேத கிம் நு தாதாத்ம்யம் ||

ஸாந்த்யமயூகை:-ஸந்த்யாகாலத்து (ஸூர்ய) கிரணங்களுக்கு, ஸமயா - ஸமானமான காந்தியையுடையவளும், ஸமயா புத்யா - பேதமில்லாமல் ஸமமான புத்தியுடன், (அதாவது, அவ்விதமான புத்தியுள்ளவர்களால்) ஸதைவ சீலிதயா-ஸதாகாலமும் உபாஸிக்கப்பட்டவளும், காஞ்சீரதயா - காஞ்சீபுரியில் ப்ரீதியுள்ளவளாயுமிருக்கிற, உமயா - உமாதேவியோடு, தாதாம்யம் — ஐக்யபாவனையானது (அல்லது, ஸாயுஜ்யமானது), மயா - என்னால் ந லப்யேத கிம் நு - கிடைக்கப்பெறுதா !

1. இங்கு சொல்லப்பட்ட ஸம புத்தியைப்பற்றி பின்வரும் 50-வது ச்லோகத்தில் விஸ்தரிக்கப்படுகிறது.

45 जन्तोस्तव पदपूजनसंतोषतरङ्गितस्य कामाक्षि ।
बन्धो यदि भवति पुनः सिन्धोरम्भःसु बम्भ्रमीति
शिला ॥

ஜந்தோஸ்தவ பதபூஜன-
ஸந்தோஷ தரங்கிதஸ்ய காமாக்ஷி |
பந்தோ யதி பவதி புன:
ஸிந்தோரம்ப:ஸு பம்ப்ரமீதி சிலா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷிதேவியே! தவ பத பூஜன - உன் பாதங்களைப் பூஜிப்பதினால் ஏற்படும், ஸந்தோஷ தரங்கிதஸ்ய - ஸந்தோஷம் நிறைந்த, ஜந்தோ: - ப்ராணிக்கு (மனுஷ்யனுக்கு), பந்த: - ஜன்ம (அல்லது, கர்ம) ஸம்பந்தமானது, புன: பவதி யதி - திரும்பவும் ஏற்படுமென்றால் (அது) ஸிந்தோ: அம்ப:ஸு - நதீ ஜலத்தில், சிலா - கற்பாறையானது, பம்ப்ரமீதி - சுழலும் (என்று சொல்வது மாதிரி ஆகும்.)

1. அதாவது, ஜலத்தில் கற்பாறையானது மிதக்கிறது என்று சொன்னால் எவ்வளவு அஸம்பாவிதமாயிருக்குமோ அதே மாதிரி அம்பிகையின் உபாஸனையிலீடுபட்டவனுக்கு புனர்ஜன்மம் உண்டு என்று சொல்லது ஆகும், என்று தாத்பர்யம்.

46 कुण्डलि कुमारि कुटिले चण्डि चराचरसवित्रि चामुण्डे ।
गुणिनि गुहारिणि गुह्ये गुरुमूर्त्ते त्वां नमामि कामाक्षि ॥

குண்டலி குமாரி குடிலே
சண்டி சராசரஸவித்ரி சாமுண்டே |
குணினி குஹாரிணி குஹ்யே
குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி ||

குண்டலி - குண்டலங்களை (அதாவது, தாடங்கங்களை) உடையவளும், குமாரி - பால்யமான வயதுடையவளும் (அல்லது, பாலா

ரூபிணியாயிருப்பவளும்) குடிலே - குண்டலினீஸ்வரூபமாயிருப்பவளும், சண்டி - சண்டிரூபிணியாயிருப்பவளும், (அல்லது மங்களத்தைச் செய்பவளும்) சராசரஸவித்ரி - ஜங்கம ஸ்தாவராத்மகமான ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்தவளும், சாமுண்டே - சாமுண்டா ரூபிணியாயிருப்பவளும், குணினி - த்ரிகுணங்களோடிருப்பவளும் குஹாராணி - (மனதிலிருக்கும்) அந்தகாரத்தைப் போக்கடிப்பவளும், குஹ்யே - ரஹஸ்யமான ஸ்வரூபத்தோடிருப்பவளும், குருமூர்த்தே — குரு ஸ்வரூபியாயிருப்பவளுமான, காமாக்ஷி — ஹே காமாக்ஷியே! த்வாம் நமாமி - உன்னை நமஸ்கரிக்கிறேன்.

1. இந்த ச்லோகத்தில் அம்பிகையைப் பலவிதமான நாமங்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பிகையின் ரூபமான குண்டலினீ சக்தியானவள் 'புஜகநிபம் அத்யுஷ்டவலயம்' என்றபடி மூன்றரைச் சுற்றுக்களுடைய ஸர்ப்பாகாரமாக சுருண்டிருப்பதால் குடிலையென்று பெயர் ஏற்பட்டது. பக்தர்களுக்கு விரோதிகளாயிருப்பவர்களிடத்தில் அம்பிகை கோபத்தோடிருப்பதால் சண்டீ என்று பெயர். (தேவீ மாஹாத்ம்யத்தின் மூன்றாவது பாகமான உத்தர சரித்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் அம்பிகையின் முக்யமான ரூபத்திற்கு சண்டீ என்று பெயர். இதிலிருந்து தேவீ மாஹாத்திற்கே சண்டீ என்ற பெயரும் உண்டு.) அம்பிகையின் ரூபமான காளிகாதேவியானவள் சண்டன், முண்டன் என்ற இரு அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததினால் சாமுண்டா என்று பெயர் ஏற்பட்டது.

'யஸ்மாத் சண்டம் ச முண்டம் ச க்ருஹீத்வா த்வம் உபா [கதா |
சாமுண்டேதி ததோ லோகே க்யாதா தேவி பவிஷ்யஸி ||'

(துர்காதேவியின் மந்த்ரமான நவார்ண மந்த்ரத்தில் சாமுண்டா தேவியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.) மூலப்ரக்ருதி ரூபமாய் அம்பிகை இருக்கும்போது ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களாகிய மூன்று குணங்களும் ஸமமான நிலையோடு அவளிடத்திலிருப்பதாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸத்வம் ரஜஸ் தம இதி குணத்ரயமுதாஹ்ருதம் |
ஸாம்யாவஸ்திதிரேதேஷாம் அவ்யக்திம் ப்ரக்ருதிம் விது: ||'

இந்த குணங்கள் தனித்தனியாக மேலிட்டிருக்கும்போது வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற சக்தி ரூபங்களும் ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரர்களும் அம்பிகையிடமிருந்து ஏற்படுவதாகச்சொல்லப்படும். ஆகவே அம்பிகையை இங்கு குணினி என்று சொல்லப்பட்டது. கு என்ற அக்ஷரமானது மனதிலிருக்கும் அந்தகாரத்தை (இருட்டை, அக்ஞானத்தை) குறிக்கும். அம்பிகை அவ்விதமான இருட்டைப் போக்குவதால் குஹாரிணி என்று இங்கு சொல்லப்பட்டது. அம்பிகை குருமூர்த்தியாயிருப்பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்திலும் 'குருமூர்த்தி:', 'குருமண்டல ரூபிணீ', 'தக்ஷிணா மூர்த்தி ரூபிணீ' என்றநாமங்களிலும்-சொல்லப்பட்டிருக்கிறது.

47 अभिदाकृतिर्भिदाकृतिरचिदाकृतिरपि चिदाकृतिर्मातः ॥
अनहंता त्वमहंता भ्रमयसि कामाक्षि शाश्वती विश्वम् ॥

அபிதாக்ருதிர் பிதாக்ருதி—
ரசிதாக்ருதிரபி சிதாக்ருதிர் மாத: |
அனஹந்தா த்வமஹந்தா
ப்ரமயஸி காமாக்ஷி சாச்வதீ விச்வம்||

மாத: காமாக்ஷி - ஜகன்மாதாவான ஹே காமாக்ஷி! சாச்வதீ த்வம் - அழிவில்லாத ஸ்வரூபத்தையுடைய நீ, அபிதாக்ருதி: - பேதமில்லாத ரூபத்தோடும், பிதாக்ருதி: - பேதங்களான ரூபத்தோடும் அசிதாக்ருதிரபி - சித்ரூபமாயில்லாமலும், சிதாக்ருதி: - சித் ஸ்வரூபிணியாயும், அனஹந்தா - அஹங்காரமில்லாதவளாயும், அஹந்தா- அஹங்கார ஸ்வரூபிணியாயும் இருந்துகொண்டு விச்வம் - ஜகத்தை, ப்ரமயஸி - சுழற்றிக்கொண்டிருக்கிறாய்.

1. இதிலும் இதற்கு முந்திய ச்லோகங்களிலும் சொல்லப்பட்டபடி அம்பிகையானவள் பலவிதமான குணங்களுடனும் பலவிதமான ரூபங்களுடனும் இருப்பதாகத்தோன்றியபோதிலும் பரமார்த்தத்தில் ஒருவளாகவே இருந்துகொண்டுவருவதை ஒரு நடிகையானவள் பல வேஷங்களை தரித்து நடிப்பதற்கு ஒப்பிடப்பட்டு 'அம்பாஸ்தவ'த்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'தாக்ஷாயணீதி குடிலேதி குஹாரிணீதி
காத்யாயனீதி கமலேதி கலாவதீதி |
ஏகா ஸதீ பகவதீ பரமார்த்ததோऽபி
ஸந்த்ருச்யஸே பஹுவிதா நனு நர்த்தகீவ ||'

48 शिव शिव पश्यन्ति समं श्रीकामाक्षीकटाक्षिताः पुरुषाः ।
विपिनं भवनममित्रं मित्रं लोष्टं च युवतिबिंबोष्ठम् ॥

சிவ சிவ பச்யந்தி ஸமம்
ஸ்ரீ காமாக்ஷீ கடாக்ஷிதா: புருஷா: |
விபினம் பவனம் அமித்ரம்
மித்ரம் லோஷ்டம் ச யுவதிபிம்போஷ்டம் ||

ஸ்ரீ காமாக்ஷி கடாக்ஷிதா: புருஷா: - ஸ்ரீ காமாக்ஷியால் கடாக்ஷிக்கப்பட்டவர்கள், விபினம் - காட்டை, பவனம் - வீடாகவும், அமித்ரம் - சத்ருவை, மித்ரம் - ஸ்நேஹிதனாகவும், யுவதி பிம்போஷ்டம் ச - யுவதிகளுடைய கோவைக்கனிபோன்ற அதரத்தையும், லோஷ்டம்—ஓட்டாஞ்சல்லிபோலும், ஸமம் பச்யந்தி - ஸமமாகப்பார்க்கிறார்கள், சிவ சிவ - அஹோ ஆச்சர்யம்!

1. அதாவது, ஸ்ரீ காமாக்ஷியின் கடாக்ஷம் பக்தன்மீது பட்டவுடன் அவனுக்கு ஸமத்ருஷ்டி ஏற்பட்டு, வீடு, காடு என்றாவது, மித்ரன், சத்ரு என்றாவது பேதமான பாவமில்லாதவனாக ஆகிவிடுகிறானென்று சொல்லப்பட்டது. அவனுக்கு ப்ரியம், அப்ரியம் என்ற இரண்டு சித்தவ்ருத்திகளும் இல்லாமற் போய்விடுவதால் அவன் யுவதிகளுடைய பிம்பபலம்போன்ற அதரத்தைக்கூட ஓட்டாஞ்சல்லிக்கு ஸமானமாக மதிப்பானென்று சொல்லப்பட்டது.

49 कामपरिपन्थि कामिनि कामेश्वरि कामपीठमध्यगते ।
कामदुघा भव कमले कामकले कामकोटि कामाक्षि ॥

காம பரிபந்த்தி காமினி
 காமேச்வரி காமபீட மத்ய் கதே |
காமதுகா பவ கமலே
 காமகலே காமகோடி காமாக்ஷி ||

காம பரிபந்த்தி காமினி - மன்மதனுக்கு சத்ருவான பரமசிவனுடைய நாயகியாயும், காமேச்வரி - காமேச்வரி (லலிதாம்பிகா) ஸ்வரூபிணியாயும், காமபீட மத்யகதே - காமராஜபீடத்தின் மத்தியிலிருப்பவளும், கமலே - லக்ஷ்மீ ஸ்வரூபிணியாயும், காமகலே — காமகலா ஸ்வரூபிணியாயும், காமகோடி — காமகோடியென்ற பெயருள்ளவளாயுமிருக்கும், காமாக்ஷி - ஹே காமாக்ஷிதேவியே! காமதுகா பவ - (என்னுடைய) விருப்பங்களைக் கொடுப்பவளாய் ஆகுவாயாக.

1. அம்பிகை சிதக்னி குண்டத்திலிருந்து லலிதாதேவியாக ஆவிர்பவித்தபிறகு தேவர்கள் அவளை விவாஹம்செய்ய அவளுக்கு எவ்வகையிலும் தகுந்தவரான புருஷன் கிடைக்கவேண்டுமே என்ற கவலையோடிருக்கும்போது பரமேச்வரன் காமேச்வர ரூபமாக

'கோடி கந்தர்ப்ப லாவண்ய யுக்தோ திவ்ய சரீரவான் |
திவ்யாம்பரதர: ஸ்ரக்வீ திவ்யகந்தானுலேபன. ||
கிரீட ஹாரகேயூர குண்டலாத்யைரலங்க்ருத: |
ப்ராதுர்பபூவ புருஷோ ஜகன்மோஹன ரூபத்ருக் ||'

என்றபடி அங்கு வந்ததாகவும் பிறகு இருவருக்கும் விவாஹமான வ்ருத்தாந்தமும் லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காமேச்வரரைப் பதியாக அடைந்ததினுல் லலிதாம்பிகைக்கு காமேச்வரீ என்று பெயர் ஏற்பட்டது.

2. கமலா என்ற பதத்தினுல் மஹாவிஷ்ணுவின் பத்னியான லக்ஷ்மீ ரூபமாக அம்பிகையிருப்பதைச் சொல்லப்பட்டது. இது தவிர, லக்ஷ்மீ என்ற பெயரே அம்பிகைக்கு உண்டென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'தஸ்யாங்க மண்டலாரூடா சக்திர் மாஹேச்வரீ பரா |
மஹாலக்ஷ்மீரிதி க்யாதா ச்யாமா ஸர்வமனோஹரா ||'

(விஷ்ணுபுராணம்)

'ச்ரியம் லக்ஷ்மீம் அம்பிகாம் ஔபலாங்காம் |'

(ஆயுஷ்யஸூக்தம்)

3. பரப்ரம்ஹஸ்வரூபிணியான அம்பிகையானவள் சிவ சக்தி ஸாமரஸ்யரூபிணியானதாலும், அவ்வித ரூபத்தில் காமேச்வரரான சிவனானவர் ஒரு கோடியாக (ஏகதேசமாக) இருப்பதாலும் அம்பிகைக்கு காமகோடியென்று பெயர் ஏற்பட்டது. (காமனென்ற பதமானது காமேச்வரரைக்குறிக்கும்)

4. காஞ்சீபுரியிலிருக்கும் பிலத்திற்கே காமகோடியென்று பெயர். அது ஸர்வதீர்த்தத்திற்கு மூன்று அம்சம் ஈசான்யபாகத்தில் ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்திற்குள்ளிருக்கிறது. அதற்குப் பலவிதமான பெயர்களுண்டு.

'ஜகத் காமகலாகாரம் பூமே: குண்டலினீ பதம் |
.... .... .... .... .... .... .... .... ....
தத் காமகரம் திவ்யம் அகக்னம் ஸர்வஸித்திதம் |
தபஸ்த்தானம் பிலம் ஸூக்ஷ்மபரமம் வ்யோம தத் ஸ்ம்ருதம் ||
ஆதிபௌதிக மர்மாங்கம் நாபிஸ்தானம் புவ: பரம் |
ததேவ ப்ரம்ஹண: சம்போ: சரீரமிதி கத்யதே ||
லோகானாம் வ்யங்க்ய சப்தத்வாத் நாபிரித்யபி ஸம்ஜ்ஞிதம் |
ஸ்ரீபுரஸ்ய த்ரிமூர்த்தீனாம் ஈச்வராணாம் திசாமபி ||
லோகானாம் மேருசைலஸ்ய கோரூபாயாவனேரபி |
நவத்வாரஸ்ய மார்க்கம் தம் பூயோனிஸ் தன் மஹாபிலம் ||'

5. காமகோஷ்டம் (காமகோட்டம்) என்பது மேலே சொல்லிய காமகோடியென்ற பில மடங்கிய பெரிய ப்ரதேசத்திற்குப்பெயர். இது ருத்ரசாலைக்கும் விஷ்ணு சாலைக்கும் நடுவிலுள்ளது, பெரிய நான்கெல்லையுடையது. இதற்கு பஞ்சபாண நிகேதனம் என்றும் பெயர் உண்டு. இது காஞ்சியின் மத்ய ப்ரதேசம்.

ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயம் அடங்கிடது. இங்கு எவர்கள் தங்கள் இஷ்ட தேவதையின் மந்த்ரத்தை ஜபிக்கிறார்களோ அதற்குக் கோடி மடங்கான பலனை அடைவார்களென்றும், காமங்களை விரும்புவோர்கள் அவற்றைக் கோடிக்கணக்காக அடைவார்களென்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

'ஏதத் சதுர்திங்மத்யஸ்த்தம் பஞ்சபாண நிகேதனம் |
தஸ்மாத் தத் காமகோஷ்டாக்யம் காஞ்ச்யாம் மத்யம பூதலம் ||
யோ ஜபேத் காமகோஷ்டேऽஸ்மின் மந்த்ரமிஷ்டார்த்த தைவதம் |
கோடிவர்ணபலம் ப்ராப்ய முக்திலோகம் ச கச்சதி ||
காமானும் வர்ணதாத்பர்யாத் தத்கோடி குணஸங்க்யயா |
காமகோடீதி விக்யாதம் காமகோஷ்டதரா தலம் ||'

6. மேலே சொல்லிய பில ப்ரதேசத்திற்கு காமகோடி யென்று பெயர் வந்ததற்கு அனேகம் காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. காமம் என்ற பதமானது பொதுவாக விருப்பத்தை (அதாவது, புருஷார்த்தத்தை) குறிக்கும். ஜனங்கள் விரும்பும் புருஷார்த்தங்கள் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களென்கிற நான்கு வகைப் பட்டதாகச் சொல்லப்படும். இந்த வரிசையில் காமத்திற்கு அடுத்தாற்போல் (அடுத்த கோடியாக) மோக்ஷம் வருவதாலும், மோக்ஷமே (காமங்களுக்குள்) மற்ற புருஷார்த்தங்களைவிட உத்க்ருஷ்டமானதாலும் (பரமகோடியாயிருப்பதாலும்) காமகோடியென்ற பதமே மோக்ஷத்தையும் குறிக்கும். ஆகவே இந்த காமகோடி க்ஷேத்ரத்தில் ஒருவன் மேலே சொல்லிய காமங்களில் ஏதாவது ஒன்றையுத்தேசித்து உபாஸித்தாலும் அவனுக்கு அந்த காமமானது கோடி மடங்காகக் கிடைப்பதுடன் மற்ற புருஷார்த்தங்களும் கிடைத்து, கடைசியாகிய (காமகோடியாகிய) மோக்ஷமும் (அவன் உத்தேசிக்காவிட்டாலும்) அவனுக்குக் கிடைக்கப்பெறுமென்று சொல்லப் படுவதால் அந்த க்ஷேத்ரத்திற்கு 'காமகோடி' என்று பெயர் ஏற்பட்டது

'யத்ர காமக்ருதோ தர்மோ ஜந்துனா யேன கேன வா |
ஸக்ருத்வாபி ஸுதர்மாணாம் பலம் பலதி கோடிச: |
தேனேதம் காமகோடீதி பிலத்வாரம் ப்ரஸித்திமத் ||
.... ... .... .... ....
அத காமஸ் த்ருதீயார்த்த: புருஷார்த்தேஷு விச்ருத: |
தத் பரஸ்தாத் ச்ருதோ மோக்ஷ: கோடி சப்தேன சப்தித: ||
காமகோடி ச்ருதோ மோக்ஷ: புருஷார்த்த சதுர்த்தக: |
அர்த்தோ ऽத வா ச்ருத: காம: காமேசோ தனத: ஸ்ம்ருத: |
தத்கோடிதா பீடசக்தி: காமகோடீதி விச்ருதா ||'

7. அம்பிகையே அந்த காமகோடி யெனப்படும் பிலாகாச ஸ்வரூபிணியாயிருப்பதால் அந்தப்பெயரே அம்பிகைக்கும் ஏற்பட்டதென்று சொல்லப்படும்.

8. அம்பிகையின் ரூபங்கள் ஸ்தூல, ஸூக்ஷ்ம, பர ரூபங்களென்ற மூன்றில் ஸ்தூலமென்பது கரசரணாதி அவயவங்களையுடையது. ஸூக்ஷ்மமென்பது மந்த்ரமயமானது. பரமென்பது வாஸனாமயமானது. திரும்பவும் ஸூக்ஷ்மரூபமானது ஸூக்ஷ்ம,ஸூக்ஷ்மதர, ஸூக்ஷ்மதமமென்பதாக் மூன்று பிரிவையுடையது. ஸூக்ஷ்மமென்பது பஞ்சதசீ வித்யாரூபமானது. ஸூக்ஷ்மதரமென்பது காமகலாக்ஷரரூபமானது. ஸூக்ஷ்மதமமென்பது குண்டலினீ ரூபம்.

9. இந்த காமகலையானது மிகவும் ரஹஸ்யமானதால் அதினுடைய விபரங்களை குருமுகமாகவே அறிந்து கொள்ளவேண்டியது. ஆயினும் அவைகளை 'காமகலாவிலாஸம்' என்ற க்ரந்தத்திலும் பாஸ்கரராயர், ஆர்தர் ஏவலன் முதலான பெரியோர்கள் எழுதிய க்ரந்தங்களிலும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அம்பிகையின் காமகலா ஸ்வரூபமானது மூன்று பிந்துக்களும் ஹகாரார்த்தமும் சேர்ந்ததாகவும் அவையிருக்குமிடம்,

'அக்ர பிந்து பரிகல்பிதானனாம்
அன்ய பிந்து ரசித ஸ்தனத்வயீம் |
நாதபிந்து ரசனா குணாஸ்பதாம்
நௌமி தே பரசிவே பராம் கலாம் ||'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமதாசார்யாளும் 'ஸௌந்தர்ய லஹரி'யில்

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தததோ
ஹரார்தம் த்யாயேத்யோ ஹரமஹிஷி தே மன்மத கலாம் ।'

என்று சொல்லியிருக்கிறார்கள்.

50 मध्ये हृदयं मध्ये निटिलं मध्ये शिरोऽपि वास्तव्याम् ।
चण्डकरशक्रकार्मुकचन्द्रसमाभां नमामि कामाक्षीम् ॥

மத்யே ஹ்ருதயம் மத்யே நிடிலம்
மத்யே சிரோऽபி வாஸ்தவ்யாம் ।
சண்டகர சக்ர கார்முக
சந்த்ரஸமாபாம் நமாமி காமாக்ஷீம் ॥

மத்யே ஹ்ருதயம் - ஹ்ருதயத்தின் மத்தியிலும், மத்யே நிடிலம் - நெற்றியின் நடுவிலும், மத்யே சிரோऽபி - சிரஸின் நடுவிலும், (முறையே) சண்டகர - ஸூர்யன், சக்ர கார்முக - இந்த்ர தனுஸ், சந்த்ரன் - சந்த்ரன் (இவர்களுக்கு) ஸமாபாம் - ஸமமான காந்தியுடையவளாய், வாஸ்தவ்யாம் - இருப்பவளான, காமாக்ஷீம் - காமாக்ஷியை, நமாமி - நமஸ்கரிக்கிறேன்.

1. அம்பிகையானவள் பக்தனுடைய சரீரத்தில் சிரஸில் சந்த்ரனுடைய காந்தியோடும், நெற்றியில் இந்த்ர தனுஸ் மாதிரியும், ஹ்ருதயத்தில் ஸூர்யன் போலவும் காந்தியோடிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில்

'சிரஸ்த்திதா சந்த்ரநிபா பாலஸ்த்தா இந்த்ர தனுஷ்ப்ரபா ।
ஹ்ருதயஸ்த்தா ரவிப்ரக்யா .... .... .... ॥'

என்றும் 'லகுஸ்துதி'யில் பின்வருமாறும் சொல்லப்பட்டிருக்கிறது

'ஐந்த்ரஸ்யேவ சராஸனஸ்ய தததீ மத்யே லலாடம் ப்ரபாம்
சௌக்லீம் காந்திம் அனுஷ்ணகோரிவ சிரஸ்யாதன்வதீ
ஸர்வத: ।

ஏஷாऽஸௌ த்ரிபுரா ஹ்ருதி த்யுதிரிவோஷ்ணாம்சோ:
[ஸதாऽஹஸ்த்திதா
சிந்த்யான் ந: ஸஹஸா பதைஸ் த்ரிபிரகம் ஜ்யோதிர்
[மயம் வாங்மயம்'.

51 अधिकाञ्चिकेलिलोलैरखिलागमयन्त्रतन्त्रमन्त्रमयैः ।
अतिशीतं मम मानसमसमशरद्रोहिजीवनोपायैः ॥

அதிகாஞ்சி கேளி லோலை:
அகிலாகம யந்த்ர தந்த்ர மந்த்ர மயை: |
அதிசீதம் மம மானஸம்
அஸமசரத்ரோஹி ஜீவனோபாயை: ||

அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், கேளிலோலை:- விளையாடுவதில் மிகவும் ப்ரியமுள்ளதாயும், அகில ஆகம யந்த்ர தந்த்ர மந்த்ர மயை:- எல்லா வேதங்களாயும் யந்த்ரங்களாயும் தந்த்ரங்களாயும் மந்த்ரங்களாயுமிருப்பதும், அஸமசர - மன்மதனுடைய, த்ரோஹி - சத்ருவான பரமசிவனுடைய, ஜீவனோபாயை:- ப்ராணனுக்கு ஆதாரமாயிருப்பதாயுமிருக்கிற ஒரு மூர்த்தியினால், மம மானஸம் -என்னுடைய மனதானது, அதி சீதம் - மிகவும் குளிர்ந்திருக்கிறது.

1. 'விஷமசர' என்ற பாடந்தரத்திலும் மன்மதன் என்று தான் அர்த்தம்.

52 नन्दति मम हृदि काचन मन्दिरयन्ती निरन्तरं काञ्चीम् ।
इन्दुरविमण्डलकुचा बिन्दुवियन्नादपरिणता तरुणी ॥

நந்ததி மம ஹ்ருதி காசன
மந்திரயந்தீ நிரந்தரம் காஞ்சீம் |
இந்து ரவி மண்டலகுசா
பிந்துவியன் நாத பரிணதா தருணீ ||

காஞ்சீம் - காஞ்சீபுரியை, நிரந்தரம் - இடைவிடாமல், மந்திரயந்தீ - வாஸஸ்தானமாக உடையவளும், இந்து ரவி மண்டல குசா- சந்த்ர ஸூர்யர்களை ஸ்தனங்களாக உடையவளும், பிந்து வியன் நாத பரிணதா - பிந்து, (வியத்) ஆகாசம், நாதம் இம்மூன்று விதமான வேறு ரூபங்களையுடையவளுமான, காசன தருணீ - ஒரு யௌவன ஸ்த்ரீயானவள், மம ஹ்ருதி - என்னுடைய மனதில், நந்ததி - ஆனந்தத்தோடிருக்கிறாள்.

1. சந்த்ர ஸூர்யர்கள் அம்பிகையினுடைய ஸ்தனங்களாகவும் நேத்ரங்களாகவும் (காதிலணிந்த) தாடங்கங்களாகவுமிருப்பதாகச் சொல்லப்படுவார்கள்.

'ஸூர்ய சந்த்ரௌ ஸ்தனௌ தேவ்யா: தாவேவ நயனே
[ஸ்ம்ருதௌ |
உபௌ தாடங்கயுகளம் இத்யேஷா வைதிகீ ச்ருதி: ||'

2. வ்யோம, பிந்து, நாத—இவை நாதப்ரம்ஹ வித்யையில் சொல்லப்படும் பதங்கள். பரமசிவன் சுக்லபிந்து ரூபமாகவும் சக்தியானவள் சோணபிந்து ரூபமாகவுமிருப்பதாகவும் அவர்கள் பரஸ்பரம் ப்ரவேசிப்பதால் மிச்ரபிந்துவானது உண்டாகி அந்த பிந்துவிலிருந்து வ்யோமமும் நாதமும் ஏற்பட்டு அவற்றிலிருந்து ஸகல ஜகத்தும் உண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதின் விபரங்களை 'காமகலாவிலாஸம்', 'சாரதாதிலகம்' முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும். இம்மூன்றும் அம்பிகையின் பரிணாமங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'வ்யோமேதி பிந்துரிதி நாத இதீந்துலேகா-
ரூபேதி வாக்பவதனூரிதி மாத்ருகேதி |
நி: ஸ்யந்தமான ஸுகபோத ஸுதாஸ்வரூபா
வித்யோதஸே மனஸி பாக்யவதாம் ஜனானாம் ||'
(அம்பாஸ்தவம்)

53 शम्पालतासवर्णं संपादयितुं भवज्वरचिकित्साम् ।
लिम्पामि मनसि किंचन कम्पातटरोहि सिद्धभैषज्यम् ॥

சம்பா லதா ஸவர்ணம்
ஸம்பாதயிதும் பவஜ்வர சிகித்ஸாம் |
லிம்பாமி மனஸி கிஞ்சன
கம்பாதடரோஹி ஸித்த பைஷஜ்யம் ||

பவஜ்வர சிகித்ஸாம்-ஸம்ஸாரமாகிற ஜ்வரத்திற்கு சிகித்ஸையை, ஸம்பாதயிதும் - அடைவதற்காக, சம்பாலதா ஸவர்ணம் - மின்னல் கொடிபோன்ற நிறமுள்ளதும், கம்பாடதடரோஹி - கம்பா நதிக்கரையில் உண்டானதுமான, கிஞ்சன - ஒரு, ஸித்த பைஷஜ்யம் - ஸித்தௌஷதத்தை, மனஸி - மனதில் (மனதால்), லிம்பாமி - பூசிக்கொள்ளுகிறேன்.

1. ஸம்ஸாரமாகிற ஜ்வரத்தைப்போக்கும் ஸித்தௌஷதமாக அம்பிகையை இங்கு வர்ணிக்கப்பட்டது. அது மின்னல் கொடி போன்ற ரூபத்தையுடையது. அது (கொடியென்ற உபமானத்தை மேலும் அனுஸரித்து) கம்பாநதிக்கரையில் படர்ந்தது. இப்பேர்ப்பட்ட ஔஷதத்தை (ஸாதாரணமான ஜ்வரங்களைப் போக்குவதற்கு ஔஷதங்களை மேலே பூசுவதுமாதிரி) தான் மனதால் பூசிக்கொண்டதாக கவி இங்கு வர்ணிப்பதினால் தான் அந்த ஔஷதத்திற்கு உபமிக்கப்பட்ட அம்பிகையை மனதால் எப்போதும் த்யானம் செய்வதைச் சொல்லப்பட்டது.

2. சம்பா என்றால் மின்னல். மின்னலானது கொடிபோல் தோன்றுவதால் அதை லதையாகச் சொல்லப்பட்டது.

54 अनुमितकुचकाठिन्यामधिवक्षःपीठमङ्गजन्मारिपोः ।
आनन्ददां भजे तामानङ्गब्रह्मतत्त्वबोधिसिराम् ॥

அனுமித குச காடின்யாம்
அதிவக்ஷ: பீடம் அங்கஜன்மாரிபோ: |
ஆனந்ததாம் பஜே தாம்
ஆனங்க ப்ரம்ஹ தத்வ போதி ஸிராம் ||

அனுமித குச காடின்யாம் - ஊஹித்தறியவேண்டிய காடின் யத்தையுடைய (உறுதியையுடைய)[1]. ஸ்தனங்களையுடையவளும், அங்க ஜன்ம ரிபோ: - மன்மதனுடைய சத்ருவான பரமசிவனுடைய அதி வக்ஷ: பீடம் - மனதில் (மனதிற்கு), ஆனந்ததாம் - ஆனந்தத்தைக் கொடுப்பவளும், அனங்க ப்ரம்ஹதத்வ - காமசாஸ்த்ரத்தை, போதி ஸிராம் - போதிக்கும் வழியாயுமுள்ள, தாம் - அந்த ஸ்ரீகாமாக்ஷியை, பஜே - பஜிக்கிறேன்.

1. அங்கமென்றால் மனது எனறர்த்தம். காமமானது மன திலிருந்து உண்டாவதால் மன்மதனை மனதிலிருந்து பிறந்தவனுக அங்கஜனென்றும் மனஸிஜனென்றும் சொல்வது வழக்கம்.

55 ऐक्षिषि पाशाङ्कुशधरहस्तान्तं विस्मयार्हवृत्तान्तम् ।
अधिकाञ्चि निगमवाचां सिद्धान्तं शूलपाणिशुद्धान्तम् ॥

ஐக்ஷிஷி பாசாங்குசதர—
ஹஸ்தாந்தம் விஸ்மயார்ஹ வ்ருத்தாந்தம் |
அதிகாஞ்சி நிகமவாசாம்
ஸித்தாந்தம் சூலபாணி சுத்தாந்தம் ||

பாசாங்குசதர ஹஸ்தாம் - பாசம், அங்குசம் இவற்றைக் கைகளிலுடையவளும், விஸ்யாமர்ஹ வ்ருத்தாந்தம் - ஆச்சர்யப்படத்தக்கதான சரித்திரத்தையுடையவளும், நிகமவாசாம் - வேத வாக்யங்களுக்கு (அதாவது வேதங்களுக்கு), ஸித்தாந்தம் - முடிவான தாத்பர்யமாயிருப்பவளுமான, சூலபாணி சுத்தாந்தம் - பரமசிவனுடைய பத்னியை, அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், ஐக்ஷிஷி - பார்த்தேன்.

1. 'விஸ்ம்யார்ஹ வ்ருத்தாந்தம்' - இதேமாதிரி 'அத்புத சாரித்ரா' என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமமிருக்கிறது. இதனுல் அம்பிகையைப்பற்றிய பாண்டாஸுர வதம், மஹிஷாஸுர வதம் முதலியவைகள் சொல்லப்பட்டதுடன் குறிப்பாக ஸ்ரீ காமா

க்ஷியால் செய்யப்பட்ட தபஸ், பந்தகாஸாரவதம், ஸ்வர்ண காமாக்ஷி ப்ராதுர்பாவம் முதலிய (காமாக்ஷீ விலாஸத்தில் சொல்லப்பட்ட) வ்ருத்தாந்தங்களும் குறிக்கப்பட்டன.

56 आहितविलासभङ्गीमाब्रह्मस्तम्बशिल्पकल्पनया ।
आश्रितकाञ्चीमतुलामाद्यां विस्फूर्तिमाद्रिये विद्याम् ।

ஆஹித விலாஸ பங்கீம்
ஆப்ரம்ஹ ஸ்தம்ப சில்ப கல்பனயா |
ஆச்ரித காஞ்சீம் அதுலாம்
ஆத்யாம் விஸ்பூர்த்திம் ஆத்ரியே வித்யாம் ||

ஆப்ரம்ஹ ஸ்தம்ப - ப்ரம்ஹா முதல் புழுமுடிய எல்லா ஜீவன்களையும், சில்ப கல்பனயா - ஸ்ருஷ்டிப்பதினல், ஆஹித விலாஸ பங்கீம் - தன் லீலைகளின் பேதங்களையுடையவளும், ஆச்ரித காஞ்சீம் - காஞ்சீபுரியை அடைந்தவளும், அதுலாம் - இணையற்றவளும் ஆத்யாம் விஸ்பூர்த்திம் - ப்ரம்ஹத்தின் முதன் முதலான உணர்ச்சியாயிருப்பவளுமான, வித்யாம் . வித்யா (ஞான) ரூபிணியை, ஆத்ரியே - ஆச்ரயிக்கிறேன்.

1. அம்பிகையானவள் ஸகல ஜீவன்களுடைய ஸ்ருஷ்டிக்கும் காரணமாயிருப்பதால் 'ஆப்ரும்ஹகீடஜனனீ' என்றும் 'ஆப்ரம்ஹாதி பிபீலிகாந்த ஜனனீ' என்றும் இங்கு சொல்லப்பட்டது மாதிரி வர்ணிப்பது வழக்கம். ப்ரம்ஹா என்ற பதமானது ஸகல ஜீவன்களுடைய ஸ்தூலசரீரங்களின் ஸமஷ்டி ரூபமான ஹிரண்ய கர்ப்பரைக்குறிக்கும். ஜீவன்களுக்குள் முக்யமான அவரையும், ஜீவன்களில் கடைசியாக இருக்கும் புழு, எறும்பு முதலியவற்றையும் சொல்லியிருப்பதால் நடுவாக இருக்கும் ஸகல ஜீவன்களையும் சேர்த்துச் சொல்லப்பட்டது. ஸ்தம்பமென்பது அதீந்த்ரிய மானதும் (இந்த்ரியங்களுக்குத் தென்படாததும்), வைத்ய சாஸ்த்ரங்களில் நகேருகம், மகேருகம் என்று இருபெயர்களால் சொல்லப்படுவதுமான புழுப் போன்ற ஜீவ விசேஷம்.

2. ப்ரளயகாலத்தின் போது (மறுபடியும் ஜனிக்கவேண்டிய) ஸகல ஜீவன்களேயும் தன்னிடம் அடக்கிக்கொண்டு ப்ரம்ஹமானது ஸ்வாத்மாராமமாய் இருக்கும்போது, அவ்விதமானஜீவன்களுடைய கர்ம வாஸனையால் திரும்பவும் ஸ்ருஷ்டியுண்டாகவேண்டிய காலம் வந்தவுடன் அப்படி ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்பதான ஒரு உணர்ச்சியானது ப்ரம்ஹத்தினிடம் உண்டாகிறது. இதையே ச்ருதியில் 'ஸோऽகாமயத' என்பது முதலான வாக்யங்களினுல் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான உணர்ச்சியை ஸ்புரணம்,ஸ்பூர்த்தி, ஸ்பந்தம் என்று சொல்லப்படும். இதை(பாலானது காய்ச்சப்படும்போது) பொங்குவதற்கு முன்னுக இருக்கும் தோற்றத்திற்கு(கொதிப்புக்கு) உபமிக்கபபடும். இந்த ஸ்பூர்த்தியானது மாயையின்(அம்பிகையின்) கார்யமானதால் அதையே அம்பிகையின் ரூபமாகச்சொல்லப்படும். அதுவே ஸ்ருஷ்டிக்கு முதல் முதலாக ஏற்படுவதால் 'ஆத்யாம் விஸ்பூர்த்திம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

57 मूकोऽपि जटिलदुर्गतिशोकोऽपि स्मरति यः क्षणं भवतीम् ।
एको भवति स जन्तुर्लोकोत्तरकीर्तिरेव कामाक्षि ॥

மூகோऽபி ஜடில துர்கதி -
சோகோऽபி ஸ்மரதி ய: க்ஷணம் பவதீம் |
ஏகோ பவதி ஸ ஜந்து:
லோகோத்தர கீர்த்திரேவ காமாக்ஷி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷியே! ய: - எவனொருவன், மூகோऽபி- ஊமையாயிருந்தபோதிலும், ஜடில துர்கதி சோகோऽபி - மிகவும் சிக்கலான கஷ்டங்களால் துக்கப்படுகிறவனுயிருந்தபோதிலும், பவதீம் - உன்னே, க்ஷணம் ஸ்மரதி - ஒரு க்ஷணநேரம் ஸ்மரித்தானேயாகில், ஸ ஏகோ ஜந்து: ஏவ - அவன் ஒருவன் மட்டுமே, லோகோத்தர கீர்த்தி: - லோகத்தில் மிகவும் மேன்மையான கீர்த்தியுடையவனுக, பவதி-ஆகிறுன்.

58 पञ्चदशवर्णरूपं कंचन काञ्चीविहारधौरेयम् ।
पञ्चशरीयं शंभोर्वञ्चनवैदग्ध्यमूलमवलम्बे ॥

பஞ்சதச வர்ண ரூபம்
கஞ்சன காஞ்சீ விஹார தௌரேயம் |
பஞ்ச சரீயம் சம்போ:
வஞ்சன வைதக்த்ய மூலம் அவலம்பே ||

பஞ்சதசவர்ணரூபம்- பஞ்சதசாக்ஷரீ ரூபமுடையதும், காஞ்சீ விஹார தௌரேயம் - காஞ்சீ பட்டணத்தில் விளையாடுவதில் முன் னிற்பதும், சம்போ: வஞ்சன வைதக்த்யம் – பரமசிவனை வஞ்சிப் பதில் (மோஹிப்பதில்) ஸாமார்த்தியமுடையதும், பஞ்ச சரீயம் - மன்மதனைச் சேர்ந்ததான (காமரூபிணியான), கஞ்சன - ஒரு மூர்த் தியை, அவலம்பே - சரணமடைகிறேன்.

1. பஞ்சதசாக்ஷரீ (ஸ்ரீ) வித்யையானது அம்பிகையின் சரீர மாயிருப்பது

'ஸ்ரீமத் வாக்பவ கூடைக ஸ்வரூப முக பங்கஜா |
கண்டாத: கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணீ |
சக்தி கூடைகதாபன்ன கட்யதோ பாகதாரிணீ ||'

என்ற 'ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம'த்திய நாமங்களில் சொல்லப்பட்டிரு க்கிறது.

59 परिणतवतीं चतुर्धा पदवीं सुधियां समेत्य सौषुम्नीम् ।
पञ्चाशदर्णकल्पितपदाशिल्पां तां नमामि कामाक्षीम् ॥

பரிணதவதீம் சதுர்த்தா
பதவீம் ஸுதியாம் ஸமேத்ய ஸௌஷு
[ம்னீம் |
பஞ்சாசதர்ண கல்பித-
பதசில்பாம் தாம் நமாமி காமாக்ஷீம் ||

ஸூக்ஷ்மதியாம் - ஞானவான்களுடைய, ஸௌஷும்னீம் பதவீம்-ஸுஷும்னா மார்கத்தை, ஸமேத்ய - அடைந்து, சதுர்தா - நான்கு விதமாக, பரிணதவதீம் - பேதங்களடைந்திருப்பவளாயும், பஞ்சாசதர்ண கல்பித - ஐம்பது அக்ஷரங்களாலாகிய, பதசில்பாம் - பதங்களின் ரூபமாயிருப்பவளுமான, தாம் காமாக்ஷீம் - அந்த காமாக்ஷீ தேவியை, நமாமி - நமஸ்கரிக்கிறேன்.

1. முந்திய ச்லோகத்தில் அம்பிகை ஸ்ரீ வித்யாரூபிணியாயிருப்பதைச்சொல்லிவிட்டு, இந்த ச்லோகத்தில் சப்த ரூபிணியாயிருப்பதைச் சொல்லுகிறார். சப்தமானது (வாக்கானது) பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்று நான்கு வகைப்படும். நாதமானது மூலாதாரத்தில் இருக்கும்போது பரா என்ற பெயரோடும் அங்கிருந்து ஸுஷும்னா மார்கமாக மேலே வருகையில் ஸ்வாதிஷ்டானத்திற்கு வரும்போது பச்யந்தீ என்றும், அனாஹதத்திற்கு வரும்போது மத்யமா என்றும், அதற்கு மேலாக விசுத்தி ஸ்தானமான கண்டத்தின் மூலமாய் வெளிவரும்போது வைகரீ என்றும் பெயர்.

'மூலாதாரே ஸமுத்பன்ன: பராக்யோ நாத ஸம்பவ: |
ஸ ஏவோர்த்வதயா னீத: ஸ்வாதிஷ்டானே விஜ்ரும்பித: ||
பச்யந்த்யாக்யாம் அவாப்னோதி ததைவோர்த்வம் சனை: சனை: |
அனாஹதே புத்தி தத்வ ஸமேதோ மத்யமாபித: ||
ததா தயோர்த்வ நுன்ன: ஸன் விசுத்தௌ கண்டதேசத: |
வைகர்யாக்ய: .... .... .... .... ||'
இதையே ஸ்ரீமதாசார்யாளும்
'மூலாதாராத் ப்ரதமமுதிதோ யச்ச பாவ: பராக்ய:
பச்சாத் பச்யந்த்யத ஹ்ருதயகோ புத்தியுக் மத்யமாக்ய: |
வ்யக்தே வைகர்யத ருருதிஷோர் அஸ்ய ஜந்தோ: ஸுஷும்ன
பத்தஸ் தஸ்மாத் பவதி பவன ப்ரேரிதா வர்ணஸம்ஞா ||'
என்பதாக 'ப்ரபஞ்சஸார'த்தில் சொல்லியிருக்கிறார்கள்.

1. இந்த வைகரீ என்ற வாக்கானது நாம் ஸாதாரணமாகப் பேசுவது. இதையே தான் வாக்கென்று தெரியாதவர்கள் சொல்வார்களே தவிர அறிஞர்கள் வாக்கானது மேலே சொல்லியபடி

நான்குவகைப்பட்டதென்றும் அவற்றில் கடைசியானதுதான் வைசரீ வாக்கென்றும் சொல்லுவார்கள்.

'சத்வாரி வாக் பரிமிதா பதானி
 தானி விதுர் ப்ராஹ்மணா யே மனீஷிண: |
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி
 துரீயம் வாசோ மனுஷ்யா வதந்தி ||'

3. வைகரீ வாக்கானது அ முதல் க்ஷ வரையிலுள்ள ஐம்பது அக்ஷரங்களாலும் அவற்றின் சேர்க்கைகளான பதங்களாலும் உண்டாவது. அதை இங்கு 'பஞ்சாசதர்ண கல்பித பத சில்பாம்' என்று சொல்லப்பட்டது. வர்ணங்கள் அ முதல் க்ஷ வரையில் இருப்பதால் பஞ்சாசத் வர்ணங்களையும் (வைகரீ வாக்கையும்) அக்ஷமாலையென்றுசொல்லப்படும்.

'பரா பூஜன்ம பச்யந்தீ வல்லீ ருச்சஸமுத்பவா |
மத்யமா ஸௌரபா வைகர்யக்ஷமாலா ஜயத்யஸௌ ||'

4. இந்த நாலுவிதமான வாக்குகளும் அம்பிகையின் ரூபங்களென்பதாக

'பரா ப்ரத்யக்சிதீ ரூபா பச்யந்தீ பரதேவதா |
மத்யமா வைகரீ ரூபா.... .... .... ||"

என்பதாக 'ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம'த்தில் சொல்லப்பட்டது. இதை பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் பாஸ்கரராயருடைய ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம், காமகலா விலாஸம், சாரதா திலகம், ஆர்தர் ஏவலனுடைய க்ரந்தங்கள் முதலியவற்றைப் பார்க்கவும்.

60 आदिक्षन्मम गुरुराडादिक्षान्ताक्षरात्मिकां विद्याम् ।
स्वादिष्ठचापदण्डां नेदिष्ठामेव कामपीठगताम् ॥

ஆதிக்ஷன் மம குருராட்
　　ஆதி க்ஷாந்தாக்ஷராத்மிகாம் வித்யாம் |
ஸ்வாதிஷ்ட சாபதண்டாம்
　　நேதிஷ்டாமேவ காமபீடகதாம் ||

மம குருராட் - என்னுடைய குருநாதனனவர், ஸ்வாதிஷ்ட - மிகவும் இனிப்பான, சாபதண்டாம் - (கரும்பு) வில்லையுடையவளும் காமபீடகதாம் - காமகோடிபீடத்திலிருப்பவளும், ஆதி - அ முதலாக, க்ஷாந்த - க்ஷ முடியவுள்ள, அக்ஷராத்மிகாம் - அக்ஷரங்களின் ஸ்வரூபமாயுள்ள, வித்யாம் - வித்யாரூபிணியுமான ஸ்ரீ காமாக்ஷியை, நேதிஷ்டாம் ஏவ - மிகவும் ஸமீபத்திலிருப்பவளாகவே, ஆதிக்ஷத் - காட்டினர் (உபதேசித்தார்.)

1. அதாவது, தன் குருநாதருடைய அனுக்ரஹத்தினல் வித்யா ரூபிணியான ஸ்ரீ காமாக்ஷியின் தர்சனம் தனக்குக் கிடைத்ததாகச் சொல்லுகிருர்.

61 तुष्यामि हर्षितस्मरशासनया काञ्चिपुरि कृतासनया ।
स्वासनया सकलजगद्भासनया कलितशम्बरासनया ॥

துஷ்யாமி ஹர்ஷிதஸ்மர-
　　சாஸனயா காஞ்சிபுரி க்ருதாஸனயா |
ஸ்வாஸனயா ஸகல ஜகத்-
　　பாஸனயா கலித சம்பராஸநயா ||

ஹர்ஷிதஸ்மரசாஸனயா - ஸ்மரனை (மன்மதனை) தண்டித்தவரான பரமசிவனை ஸந்தோஷப்படுத்தியவளும், காஞ்சிபுரி - காஞ்சீபுரியில், க்ருதாஸனயா - வாஸஸ்தானத்தையுடையவளும், ஸ்வாஸனயா - தன்னிடமே நிலையோடிருப்பவளும், ஸகல ஜகத் பாஸனயா - ஸகல ஜகத்தையும் ப்ரகாசத்தோடு இருக்கச் செய்பவளும், கலித சம்பராஸனயா - மன்மதன் (திரும்பவும்) உண்டாகும்படி செய்தவளுமான (ஸ்ரீ காமாக்ஷியால்), துஷ்யாமி - ஸந்தோஷப்படுகிறேன்.

1. ஜகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் ப்ரம்ஹத்தினிடம் நிலையோடிருக்கையில், ப்ரம்மமானது தன்னிடமே நிலைத்திருப்பதாகச் சொல்லப்படும். இப்படி தான் நிலைத்திருப்பதற்கு பிற வஸ்துக்களை அபேக்ஷிக்காமல் தன்னிடமே ப்ரதிஷ்டிதமாக ப்ரம்ஹமிருப்பதை 'ஸ்வாஸனயா' என்ற பதத்தினால் இங்கு குறிக்கப்பட்டது.

2, சம்பரன் என்ற மஹா மாயாவியான அஸுரனை மன்மதன் ஸம்ஹாரம் செய்ததால் அவனுக்கு சம்பராஸனன் என்று பெயர். அவனை அம்பாள் உஜ்ஜீவிக்கச் செய்ததை 'கலித சம்பராஸனயா' என்று சொல்லப்பட்டது.

3. சம்பரமென்றால் மிகவும் சிரேஷ்டமான என்றும் அர்த்தமுண்டு. ஸர்வோத்க்ருஷ்டமான ஆஸனமான காமகோடி பீடத்தில் அம்பிகை இருப்பதை 'கலித சம்பராஸனயா' என்று சொன்னதாகவும் சொல்லலாம்.

62 प्रेमवती कम्पायां स्थेमवती यतिमनःसु भूमवती ।
सामवती नित्यगिरा सोमवती शिरसि भाति हैमवती ॥

ப்ரேமவதீ கம்பாயாம்
ஸ்தேமவதீ யதிமன:ஸு பூமவதீ |
ஸாமவதீ நித்யகிரா
ஸோமவதீ சிரஸி பாதி ஹைமவதீ ||

ஹைமவதீ - ஹிமவானுடைய பெண்ணான காமாக்ஷியானவள், கம்பாயாம் - கம்பாநதியிடத்தில், ப்ரேமவதீ - ப்ரியமுள்ளவளாயும், யதிமன:ஸு - யதிகளுடைய மனதுகளில், ஸ்தேமவதீ - ஸ்திரமான நிலையோடிருப்பவளும், பூமவதீ - ஐச்வர்யம் (மஹிமை) பொருந்தியவளும், நித்யகிரா - அழிவில்லாத வாக்காகிய வேதங்களால், ஸாமவதீ - புகழப்பட்டவளும், சிரஸி - சிரஸில், ஸோமவதீ - சந்திரனையுடையவளுமாக, பாதி - விளங்குகிறாள்.

63 कौतुकिना कम्पायां कौसुमचापेन कीलितेनान्तः ।
कुलदैवतेन महता कुड्मलमुद्रां धुनोतु नः प्रतिभा ॥

கௌதுகினா கம்பாயாம்
கௌஸுமசாபேன கீலிதேனாந்த: |
குலதைவதேன மஹதா
குட்மள முத்ராம் துனோது ந: ப்ரதிபா ||

கம்பாயாம் கௌதுகினா - கம்பாநதியில் (கம்பாநதீ தீரத்தில் இருப்பதில்) உத்ஸாஹத்தோடு கூடியதும், அந்த: - உள்ளுக்குள் (மனதில்) கௌஸுமசாபேன - மன்மதனால், கீலிதேன - செய்யப்பட்ட அடையாளத்தோடு கூடியதுமான (அதாவது, ச்ருங்கார ரஸம் நிரம்பிய மனதையுடையதுமான), மஹதா குலதைவதேன - உயர்ந்த (ஸர்வோத்க்ருஷ்டமான) குலதெய்வத்தினால்; ந: ப்ரதிபா - நம்முடைய புத்தியானது, குட்மளமுத்ராம் துனோது- மலர்ச்சியடையட்டும்.

1. மன்மதன் புஷ்பங்களாலாகிய தனுஸ்ஸை உடையவனாகையால் இங்கு 'கௌஸுமசாபேன' என்று சொல்லப்பட்டது.
2. மலரும் தருணத்திலிருக்கும் மொட்டுக்கு குட்மளம் என்று பெயர்.

64 केनापि मिलितदेहा यूना स्वाहासहायतिलकेन ।
सहकारमूलदेशे संविद्रूपा कुटुम्बिनी रमते ॥

கேனாபி மிளித தேஹா
யூனா ஸ்வாஹாஸஹாய திலகேன |
ஸஹகார மூலதேசே
ஸம்வித்ரூபா குடும்பினீ ரமதே ||

ஸம்வித்ரூபா - ஞான ரூபிணியான, குடும்பினீ - ஒரு குலஸ்திரீயானவள், ஸ்வாஹா ஸஹாய - அக்னியை, திலகேன - திலக

பாகவுடைய (அதாவது அக்னியை நெற்றிக் கண்ணுக உடைய) கேனுபி யூனு - யாதோ ஒரு (வர்ணிக்க முடியாத) யௌவன புருஷனுடன், மிளிததேஹா - சேர்ந்ததான சரீரத்தையுடையவளாய். ஸஹகார மூல தேசே - ஆம்ரமாத்தின் மூலப்ரதேசத்தில் (அடியில்), ரமதே - ரமித்துக்கொண்டிருக்கிருள்.

1. இங்கு சிவதம்பதிகளுடைய அர்த்தநாரீச்வர ஸ்வரூமாமானது 'மிளிததேஹா' என்பதினுல் சொல்லப்பட்டது.

2. அக்னியினுடைய பத்னிக்கு ஸ்வாஹா என்று பெயராகையால் இங்கு 'ஸ்வாஹா ஸஹாய' னென்று அக்னியைச் சொல்லப்பட்டது.

65 कुसुमशरगर्वसंपत्कोशगृहं भाति काञ्चिमध्यगतम् ।
स्थापितमस्मिन्कथमपि गोपितमन्तर्मया मनोरत्नम् ॥

குஸுமசர கர்வ ஸம்பத்-
கோசக்ருஹம் பாதி காஞ்சிமத்யகதம் |
ஸ்தாபிதம் அஸ்மின் கதமபி
கோபிதம் அந்தர்மயா மனோரத்னம் ||

குஸுமசா - மன்மதனுடைய, கர்வஸம்பத் - கர்வமாகிய தனத்தின், கோசக்ருஹம் - பொக்கிஷமானது, காஞ்சிமத்யகதம் - காஞ்சீபுரியின் நடுவிலிருந்துகொண்டு, பாதி - விளங்குகிறது. அஸ்மின் ஸ்தாபிதம் - அதில் ஸ்தாபிக்கப்பட்டதாயிருக்கும், மனோரத்னம் - என் மனோரத்னமானது, மயா - என்னுல், அந்த: - என் மனத்திற்குள், கதமபி கோபிதம் - எப்படியோ காப்பாற்றப் பட்டுவருகிறது.

1. காஞ்சிமத்யகதமான காமகோடிபீடமானது மன்மதனுடைய கர்வத்திற்குக் காரணமாயிருக்கும் காமத்திற்கு பொக்கிஷம் போல் விளங்குகிறதென்றும் அதில் ஸ்தாபிக்கப்பட்ட மூர்த்தி

யான ஸ்ரீ காமாக்ஷியானவள் ஒரு ரத்னம்போல் தன் மனதில் விளங்கிக்கொண்டு தன்னால் எப்போதும், காப்பாற்றப்பட்டு (அதாவது, த்யானிக்கப்பட்டு) வருகிறாள் என்றும் கவியால் சொல்லப்பட்டது. அவ்விதமான கோசக்ருஹத்திற்குள் ஸ்தாபிதமான (ஸ்ரீ காமாக்ஷியாகிற) ரத்னத்தைத் தான் கொண்டு வந்து தன் மனதிற்குள் வைத்து எப்படியோ காப்பாற்றி வருவதாக வர்ணித்திருக்கிறார்.

66 दग्धषडध्वारण्यं दरदलितकुसुम्भसंभृतारुण्यम् ।
कलये नव तारुण्यं कम्पातटसीम्नि किमपि कारुण्यम् ॥

தக்த ஷடத்வாரண்யம்
தரதளித குஸும்ப ஸம்ப்ருதாருண்யம் |
கலயே நவ தாருண்யம்
கம்பா தடஸீம்னி கிமபி காருண்யம் ||

தக்த ஷடத்வாரண்யம் - ஆறு அத்வாக்களாகிய ஆரண்யத்தை எரித்ததும் (அதாவது, அவற்றைக் கடந்ததும்), தரதளித - கொஞ்சம் மலர்ந்ததான, குஸும்ப - குங்குமப்பூவின், ஸம்ப்ருத - சேர்க்கையான, ஆருண்யம் - சிகப்பு நிறத்தையுடையதும், நவ தாருண்யம் - புதிதான (ஆரம்பித்ததான) யௌவனத்தையுடையதுமான, கிமபி காருண்யம் - ஏதோ ஒரு கருணாரூபிணியை, கம்பா தடஸீம்னி - கம்பா நதிக்கரையில், கலயே - அறிகிறேன் (த்யானிக்கிறேன்.)

1. ஜகத்தானது ஷட் (ஆறுவகையான) அத்வாக்களாய் (வழிகளாய்) சித்ரூபிணியான அம்பிகையிடமிருந்து ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

'வர்ண: கலா பதம் தத்வம் மந்த்ரோ புவனமேவ ச |
இத்யத்வ ஷட்கம் தேவேசி பாதி த்வயி சிதாத்மனி ||'

76 कुटिलं चटुलं पृथुलं मृदुलं कचनयनजघनचरणेषु ।
अवलोकितमवलम्बितमधिकम्पातटममेयमस्माभिः ॥

குடிலம் சடுலம் ப்ருதுளம்
ம்ருதுளம் கச நயன ஜகன சரணேஷு |
அவலோகிதம் அவலம்பிதம்
அதிகம்பாதடம் அமேயம் அஸ்மாபி: ||

கச நயன ஜகன சரணேஷு - கூந்தல்களிலும் கண்களிலும் நிதம்ப ப்ரதேசத்திலும் சரணங்களிலும், குடிலம் சடுலம் ப்ருதுளம் ம்ருதுளம் - (முறையே) வளைந்தும் சஞ்சலத்தோடும் பருத்தும் ம்ருதுவாயும் இருக்கிற, அமேயம் - அளவிடமுடியாத (அதாவது, மனதிற்கு எட்டாததான) ஒரு மூர்த்தியானது, அஸ்மாபி:-நம்மால் அதிகம்பாதடம் – கம்பாநதிக்கரையில், அவலோகிதம் – பார்க்கப் பட்டது, அவலம்பிதம் - சரணமடையப்பட்டது.

1. கசங்களில் குடிலமாயும், நயனங்களில் சடுலமாயும், ஜகனத்தில் ப்ருதுளமாயும், சரணங்களில் ம்ருதுளமாயும் அம்பிகை யின் ரூபமிருப்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது. இதேமாதிரி ஸ்ரீ மதாசார்யாளும்

‘ அராளா கேசேஷு ப்ரக்ருதிஸரளா மந்தஸிஹதே
சிரீஷாபா சித்தே த்ருஷதுபல சோபா குசதடே |
ப்ருசம் தன்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹவிஷயே
ஜகத் த்ராதும் சம்போர் ஜயதி கருணு காசிதருணு ||’

என்று ‘ஸௌந்தர்யலஹரி’யில் வர்ணித்திருக்கிறார்கள்.

77 प्रत्यङ्मुख्या दृष्ट्या प्रसाददीपाङ्कुरेण कामाक्ष्याः ।
पश्यामि निस्तुलमहो पचेलिमं किमपि परशिवोल्लासम् ॥

ப்ரத்யங் முக்யா த்ருஷ்டியா
ப்ரஸாத தீபாங்குரேண காமாக்ஷ்யா: |
பச்யாமி நிஸ்துலமஹோ
பசேளிமம் கிமபி பரசிவோல்லாஸம் ||

காமாக்ஷ்யா: - காமாக்ஷியினுடைய, ப்ரஸாத தீபாங்குரேண- அனுக்ரஹமாகிற தீபச்சுடரால் (உண்டான), ப்ரத்யங்முக்யா - அந்தர்முகமான, த்ருஷ்ட்யா - பார்வையால், நிஸ்துலம் - இணையற்றதும், பசேளிமம் - பழுத்ததுமான, கிமபி - ஒரு (வர்ணனையிலடங்காத) பரசிவோல்லாஸம் - பரமசிவனுடைய உல்லாஸத்தை (ஸ்வரூபத்தை, அதாவது மோக்ஷானந்தத்தை), பச்யாமி - பார்க்கிறேன்.

1. அம்பிகையின் அனுக்ரஹத்தால் சிவஞானம் ஏற்படுவதாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் 'சிவஞான ப்ரதாயினீ' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

78 विद्ये विधातृविषये कात्यायनि कालि कामकोटि कले ।
भारति भैरवि भद्रे शाकिनि शांभवि शिवे स्तुवे भवतीम् ॥

வித்யே விதாத்ரு விஷயே
காத்யாயனி காளி காமகோடி கலே |
பாரதி பைரவி பத்ரே
சாகினி சாம்பவி சிவே ஸ்துவே பவதீம் ||

வித்யே - (வித்யா ரூபிணியான) ஸரஸ்வதீ ரூபத்தையுடையவளே, விதாத்ரு விஷயே - (அந்த ஸரஸ்வதீ ரூபத்தில்) ப்ரம்ஹாவின் காந்தையாயிருப்பவளே, காத்யாயனி காளி காமகோடி கலே பாரதி பைரவி பத்ரே சாகினி சாம்பவி சிவே - காத்யாயனீ, காமகோடீ, கலா, பாரதீ, பைரவி, பத்ரா, சாகினீ, சாம்பவீ, சிவா என்ற பெயர்களையுடையவளே, பவதீம் - உன்னை, ஸ்துவே - ஸ்துதி செய்கிறேன்.

1. அம்பிகையானவள் தேவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டி காத்யாயன மஹர்ஷியுடைய ஆச்ரமத்தில் ஆவிர்பவித்து அவரால் தன் பெண்ணாக ஸ்வீகரிக்கப்பட்டதினால் காத்யாயனீ என்று பெயர் ஏற்பட்டது. காளீ என்ற நாமம் அம்பாளுக்கு ஏற்பட்டதற்கு அனேகம் காரணங்களுண்டு. கருப்பு வர்ணமாயிருப்பதையும், காலத்திற்கு அதீதமாயிருப்பதையும் இந்தப் பெயருக்கு இரண்டு காரணங்களாகச் சொல்லலாம். 'கலாத்மிகா' கலாநாதா' 'கலாமாலா' 'கலாவதீ' என்ற ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்திய நாமங்களின் பாஷ்யத்தில் கலா என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளின் ரூபமாக அம்பிகையிருப்பதால் கலா என்ற பெயர் ஏற்பட்டது. வித்யா, விதாத்ருவிஷயா, பாரதீ என்றவை ஸரஸ்வதியின் பெயர்கள். பைரவாகிய சிவனுடைய பத்னியாக இருப்பதாலும், பீருக்கள் (ஸ்த்ரீகள்) ஸமூஹ ரூபமாயிருப்பதாலும் அம்பிகைக்கு பைரவீ என்ற பெயர் ஏற்பட்டது. மங்கள ரூபிணியாயும் மங்கள ப்ரதையாயுமிருப்பதால் பத்ரா என்று பெயர். சாகினீ என்பது மூலாதார பத்மத்திலிருக்கும் (அம்பிகையின் ரூபிணியான) யோகினிக்குப் பெயர். தவிரவும், தேவீ மாஹாத்மயம், தேவீபாகவதம் இவற்றில் சொல்லப்பட்ட (அம்பிகா ரூபிணியான) சாகம்பரீ தேவியைக் குறித்ததாகவும் சொல்லலாம். சாம்பவீ, சிவா என்பவை சம்பு, சிவன் என்ற சிவனுடைய பெயர்களிலிருந்து ஏற்பட்டவை.

79 मालिनि महेशचारिणि काञ्चीखेलिनि विपक्षकालिनि ते ।
शूलिनि विद्रुमशालिनि सुरजनपालिनि कपालिनि नमोऽस्तु ॥

மாலினி மஹேச சாரிணி
காஞ்சீ கேலினி விபக்ஷகாலினி தே |
சூலினி வித்ருமசாலினி
ஸுரஜன பாலினி கபாலினி நமோऽஸ்து ||

மாலினி - மாலினியாயும், மஹேசசாரிணி - பரமசிவனுடைய பத்னியாயும், காஞ்சீ கேலினி - காஞ்சீபுரியில் விளையாடிக்கொண்டி

ருப்பவளாயும், விபக்ஷகாலினி - சத்ருக்களை ஸம்ஹாரம் செய்பவளாயும், சூலினி - சூலத்தை தரித்தவளாயும், வித்ருமசாலினி - பவழம் போன்ற நிறத்துடன் விளங்குகிறவளாயும், ஸுரஜனபாலினி- தேவர்களைக் காப்பாற்றுகிறவளாயும், கபாலினி - கபாலத்தைக் கையில் வைத்திருப்பவளாயுமிருக்கும், தே - உனக்கு, நம: அஸ்து - நமஸ்காரம் இருக்கட்டும்.

1. மாலையை தரித்திருப்பதாலும், பஞ்சாசத் வர்ணங்களாலான (அக்ஷரங்களாலான) மாலையை (வர்ணமாலையை) தரித்திருப்பதாலும் (அதாவது அக்ஷர ஸ்வரூபிணியாக இருப்பதாலும்) அம்பிகைக்கு மாலினீ என்று பெயர். அம்பிகை தனது ரூப விசேஷங்களில் சூலம், கபாலம் இவற்றைக் கைகளில் தரித்திருப்பதால் சூலினீ என்றும் கபாலினீ என்றும் பெயர்கள் ஏற்பட்டன. பரமசிவனும் கையில் கபாலத்தை தரித்திருப்பதால் அவருக்குக் கபாலியென்றும் அவருடைய பத்னியாகிய அம்பிகைக்கு கபாலினீயென்றும் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

80 देशिक इति किं शङ्के तत्तादृक्तव नु तरुणिमोन्मेषः ।
कामाक्षि शूलपाणेः कामागमतन्त्रयज्ञदीक्षायाम् ॥

தேசிக இதி கிம் சங்கே
தத் தாத்ருக் தவ நு தருணிமோன்மேஷ: |
காமாக்ஷி சூலபாணே:
காமாகம தந்த்ர யக்ஞ தீக்ஷாயாம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷியே! சூலபாணே: - பரமசிவனுடைய, காமாகம தந்த்ர யக்ஞ தீக்ஷாயாம் - காம சாஸ்த்ரத்தை அப்யஸிப்பதாகிய யாகத்திற்கு தீக்ஷை யடைவதில், தவ - உன்னுடைய, தாத்ருக் - அப்பேர்ப்பட்ட (விசேஷமான), தத் - அந்த, தருணிமோன்மேஷ: - யௌவனத்தின் விகாஸமானது, தேசிக: கிம் இதி- குருவா என்ன என்று, சங்கே - ஸந்தேஹப்படுகிறேன்.

81 वेतण्डकुम्भडम्बरवैतण्डिककुचभरार्तमध्याय ।
कुङ्कुमरुचे नमस्यां शङ्करनयनामृताय रचयामः ।

வேதண்ட கும்ப டம்பர
வைதண்டிக குச பரார்த மத்யாய |
குங்கும ருசே நமஸ்யாம்
சங்கர நயனாம்ருதாய ரசயாம: ||

வேதண்ட - யானையின், கும்ப - கும்பங்களின், டம்பர - ஆடம்பரத்தோடு, வைதண்டிக - விதண்டாவாதம்போல் போர்செய்யும், குச பரார்த்த - ஸ்தனங்களின் பாரத்தினால் கஷ்டப்படும், மத்யாய - இடுப்பை உடையவளும், குங்கும ருசே - குங்குமம் (குங்குமப்பூ) போன்ற காந்தியுடையவளும், சங்கர நயனாம்ருதாய - பரமசிவனுடைய நேத்ரங்களுக்கு அம்ருதம் போன்றவளுமான ஸ்ரீ காமாக்ஷிக்கு, நமஸ்யாம் ரசயாம:- நமஸ்காரத்தைச்செய்கிறோம்.

82 अधिकाञ्चितमणिकाञ्चनकाञ्चीमधिकाञ्चि कांचिदद्राक्षम् ।
अवनतजनानुकम्पामनुकम्पाकूलमस्मदनुकूलाम् ॥

அதிகாஞ்சித மணிகாஞ்சன
காஞ்சீம் அதிகாஞ்சி காஞ்சித் அத்ராக்ஷம் |
அவனத ஜனானுகம்பாம்
அனுகம்பாகூலம் அஸ்மத் அனுகூலாம் ||

அதிகாஞ்சித - அதிகமாக இழைக்கப்பட்ட, மணி - ரத்னங்களோடுகூடிய, காஞ்சன காஞ்சீம் - தங்க ஒட்யாணத்தையுடையவளும், அவனத ஜனானுகம்பாம் - வணங்கிய ஜனங்களிடத்தில் தயையுடையவளும், அஸ்மத் அனுகூலாம் - நம்மிடத்தில் அனுகூலமாயிருப்பவளுமான, காஞ்சித் - ஒரு ஸ்த்ரீயை, அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், அனுகம்பாகூலம் – கம்பாநதிக்கரையில், அத்ராக்ஷம் - பார்த்தேன்.

83 परिचितकम्पातीरं पर्वतराजन्यसुकृतसंनाहम् ।
परगुरुकृपया वीक्षे परमशिवोत्सङ्गमङ्गलाभरणम् ॥

பரிசித கம்பாதீரம்
பர்வத ராஜன்ய ஸுக்ருத ஸன்னாஹம் |
பரகுரு க்ருபயா வீக்ஷே
பரமசிவோத்ஸங்க மங்களாபரணம்||

பரிசித கம்பாதீரம் - கம்பா நதிக்கரையில் இருந்து பழக்கப்பட்டதும், பர்வத ராஜன்ய - பர்வதங்களின் அரசனான ஹிமவானுடைய, ஸுக்ருத ஸன்னாஹம் - புண்யத்தின் ஆவிர்பாவமாயிருப்பதும், பரமசிவோத்ஸங்க - பரமசிவனுடைய மடிக்கு, மங்களாபரணம் - மங்களமான ஆபரணமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியை, பரகுருக்ருபயா - என் குருநாதருடைய க்ருபையால், வீக்ஷே - பார்க்கிறேன்.

84 दग्धमदनस्य शम्भोः प्रथीयसीं ब्रह्मचर्यवैदग्धीम् ।
तव देवि तरुणिमश्रीचतुरिमपाको न चक्षमे मातः ॥

தக்த மதனஸ்ய சம்போ:
ப்ரதீயஸீம் ப்ரம்ஹசர்ய வைதக்தீம் |
தவ தேவி தருணிமஸ்ரீ-
சதுரிம பாகோ ந சக்ஷமே மாத: ||

தேவி - தேவியே! மாத: - ஜனனீ! தக்த மதனஸ்ய - மன்மதனை எரித்தவரான, சம்போ: - பரமசிவனுடைய, ப்ரதீயஸீம் - பெரிதாகச் சொல்லப்பட்ட, ப்ரம்ஹசர்ய வைதக்தீம் - ப்ரம்ஹசர்ய நிலைமையின்ப்ரபாவத்தை, தவ - உன்னுடைய, தருணிமஸ்ரீ - யௌவனத்திய அழகின், சதுரிம பாகோ - ஸாமர்த்தியத்தின் வைபவமானது, ந சக்ஷமே - பொறுக்கிறதில்லை.

1. காமத்திற்கு அரசனான மன்மதனைக்கூட பரமசிவன் (அவன் வசப்படாமல்) எரித்துவிட்டதால், அவருடைய ப்ரம்ஹசர்ய நியமத்தின் புகழானது எங்கும் பரவத்தலைப்பட்டது. ஆயினும் அம்பிகையின் யௌவனத்தின் ஸௌந்தர்யமானது அதைப் பொருக்காமல் பங்கப்படுத்திவிட்டதின்பேரில் பரமசிவனுடைய புகழானது இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இவ்விதமாக அம்பிகையின் ஸௌந்தர்யத்தையும் பரமசிவன் அம்பிகையிடத்தில் கொண்டிருக்கும் மோஹத்தையும் இந்த ஸ்தோத்ரம் முழுவதிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குமேல் அம்பிகையின் ரூபவிசேஷங்களைத் தனித்தனியாக வர்ணிக்கப்படுகிறது.

85 मदजलतमालपत्रा वसनितपत्रा करादृतखनित्रा ।
विहरति पुलिन्दयोषा गुञ्जाभूषा फणीन्द्रकृतवेषा ॥

மதஜல தமால பத்ரா
வஸனித பத்ரா கராத்ருத கனித்ரா |
விஹரதி புளிந்தயோஷா
குஞ்ஜாபூஷா பணீந்த்ர க்ருதவேஷா ||

மத ஜலதமால பத்ரா-மதஜலத்தால் இடப்பட்ட திலகம் முதலிய அலங்காரத்தையுடையவளும், வஸனித பத்ரா - இலைகளை வஸனமாக (ஆடையாக) தரித்தவளும், கராத்ருத கனித்ரா - மண்வெட்டியை கையில் கொண்டவளும், குஞ்ஜா பூஷா - குந்துமணிகளாலான அலங்காரங்களை உடையவளும், பணீந்த்ர க்ருத வேஷா - ஸர்ப்பராஜங்களை அணிந்து கொண்டவளுமான, புளிந்தயோஷா - வேடஸ்த்ரீயானவள், விஹரதி - விளையாடிக்கொண்டிருக்கிருள்.

1. இதில் அம்பாளுடைய சபரீ ரூபமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அர்ஜுனன் பாசுபதாஸ்த்ரத்தையுத்தேசித்து தபஸ் செய்யும்போது பரமசிவனானவர் அவனுடைய பக்தியின் அதிசயத்தை அறியவேண்டித் தான் கிராத (வேட) வேஷத்தைதரித்தும்,

வேடஸ்த்ரீ வேஷம்பூண்ட அம்பிகையுடனும், நாய்கள் வேஷ முடைய நான்கு வேதங்களோடும் மற்றும் கிராதர்களுக்குரிய சின்னங்களோடும் அவ்விடம் ஆவிர்பவித்ததும், அப்போது அவருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம்நடந்ததும், பிறகு அவர் அவனுக்கு பாசுபதாஸ்த்ரத்தை அளித்ததும் மஹாபாரதத்திலும் கிராதார்ஜுனீயத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸமயம் அம்பிகை கொண்ட வேடஸ்த்ரீ வேஷத்தை இதில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்ட ஆடையாபரணங்களெல்லாம் வேடஸ்த்ரீகள் வழக்கமாக அணிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறவை.

2. அம்பிகையின் சபரீ ரூபத்தைப் பின்வருமாறும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'பர்ஹாவதம்ஸயுத பர்பர கேசபாசாம்
குஞ்ஜாவளீக்ருத கனஸ்தன ஹாரசோபாம் |
ச்யாமாம் ப்ரவாளவதனும் ஸுகுமாரஹஸ்தாம்
த்வாமேவ நௌமி சபரீம் சபரஸ்ய ஜாயாம் ||'

(அம்பாஸ்தவம்)

'ஊடத் குஞ்ஜாஹார ஸ்தனபாரநமன் மத்யலதிகாம்
உதஞ்சத் கர்மாம்ப: கண குணித வக்த்ராம்புஜருசம் |
சிவம் பார்த்தத்ராண ப்ரவண ம்ருகயாகாரகுணிதம்
சிவாம் அன்வக்யாந்தீம் சபரமஹம் அன்வேமி சபரீம் ||'

(ஸகல ஜனனீ ஸ்தவம்)

'மாகந்த த்ரும பல்லவாருணபடம் பூர்ணேந்து பிம்பானனும்
தேவீம் திவ்யமயீம் ப்ரஸன்ன ஹ்ருதயாம் த்யாயேத்
[கிராதாவ்ருதாம் |
பர்ஹாபீத கசாபிராமசிகுராம் பிம்போஜ்வலச் சந்த்ரிகாம்
குஞ்ஜாஹார லதாம்சுஜால விலஸத் க்ரீவாம் மதீரே
[க்ஷணம் ||'

(ஆகாச பைரவ கல்பம்

'ச்யாமாம் வன்ஹிகலாப சேகரயுதாம் ஆபத்த பர்ணும்சுகாம்
குஞ்ஜாஹாரலஸத் பயோதரநதாம் அஷ்டாஹிபான்
[பிப்ரதீம் |
தாடங்காங்கத மேகலா குணரணன் மஞ்ஜீரதாம் ப்ராபிதான்
கைராதீம் வரதாபயோத்யதகராம் தேவீம் த்ரிநேத்ராம்
பஜே ||'

3. அம்பிகைக்கு இந்த ரூபத்தில் புளிந்தினீ என்ற பெயர். இந்த ரூபத்திய உபாஸனையானது மிகவும் விசேஷமாகச் சொல்லப் படும்.

4. தமாலமென்றால் நெற்றியிலணியப்படும் (சந்தனம் முதலிய) ஜாதிக்குறி. பத்ரமென்பது ஸ்த்ரீகள் முகம், ஸ்தனம் முதலிய இடங்களில் செய்துகொள்ளும் அலங்கார விசேஷம்.

86 अङ्के शुकिनी गीते कौतुकिनी परिसरे च गायकिनी ।
जयसि सविधेऽम्ब भैरवमण्डलिनी श्रवसि शङ्खकुण्डलिनी ॥

அங்கே சுகினீ கீதே
கௌதுகினீ பரிஸரே ச காயகினீ |
ஜயஸி ஸவிதேऽம்ப பைரவ-
மண்டலினீ ச்ரவஸி சங்க குண்டலினீ ||

அங்கே சுகினீ - முன் கையில் கிளியை யுடையவளும், கீதே கௌதுகினீ - ஸங்கீதத்தில் உத்ஸாஹமுடையவளும், பரிஸரே ச - ஸமீபத்திலும் (தன்னைச்சுற்றியும்), காயகினீ - காயகர்களையுடைய வளும் (அதாவது, பாடிக்கொண்டிருக்கும் சக்திகளால் சூழப்பட்ட வளும்), ஸவிதே - பக்கத்தில், பைரவ மண்டலினீ - பைரவர்களு டைய மண்டலங்களையுடையவளும், ச்ரவஸி - காதில், சங்க குண்ட லினீ - சங்கினாலான குண்டலங்களையுடையவளுமான, அம்ப - ஹே ஜனனி ! ஜயஸி - நீ ஸர்வோத்கர்ஷத்துடன் விளங்குகிறாய்,

1. இதில் மந்த்ரிணீ ரூபமாக அம்பாளை வர்ணிக்கப்பட்டிருக் கிறது. மந்த்ரிணியானவள் லலிதாம்பிகைக்கு ப்ரதான மந்த்ரீ.

அம்பிகையானவள் தனது ஸமஸ்த ராஜ்யபாரத்தையும் அவளிடம் ஒப்புவித்திருப்பதாகச் சொல்லப்படும். ஸங்கீதத்திற்கு அதிஷ்டான தேவதை. கையில் கிளியை தரித்திருப்பவளாகவும் ஸங்கீதத்தோடு கூடிய சக்தி ஸமூஹங்களால் சூழப்பட்டவளாகவும் த்யானிப்பது வழக்கம். மந்த்ரிணிக்கு சுகச்யாமளே என்றும், ராஜ ச்யாமளே என்றும், ஸங்கீத ச்யாமளே யென்றும், இன்னம் அனேகம் பெயர்களுண்டு.

'ஸங்கீதயோகினீ ச்யாமா ச்யாமளா மந்த்ரிநாயிகா |
மந்த்ரிணீ ஸசிவேசானீ ப்ரதானேசீ சுகப்ரியா ||
வீணாவதீ வைணிகீ ச முத்ரிணீ ப்ரியகப்ரியா |
நீபப்ரியா கதம்பேசீ கதம்பவனவாஸினீ |
ஸதாமதா ச நாமானி ஷோடசைதானி கும்பஜ ||'

(லலிதோபாக்யானம்)

2. ச்யாமளேயின் ஆவரண தேவதைகளில்
'அஸிதாங்கோ ருரு: சண்ட: க்ரோதனோன் மத்தோ பயங்கர:
கபாலீ பீஷணச்சைவ ஸம்ஹாரீ த்யஷ்ட பைரவா: ||'
என்ற பைரவாஷ்டகமடங்கிய பைரவமண்டலமானது ஐந்தாவது ஆவரணத்திலிருப்பதாகச் சொல்லப்படும்.

3. ச்யாமளேயின் காதில் சங்ககுண்டலம் தவிர தாளீபலாச தாடங்கம் (பனேயோலேச்சுருள்) இருப்பதாகவும் வர்ணிக்கப்படும்.

87 प्रणतजनतापवर्गा कृतरणसर्गा सासिंहसंसर्गा ।
कामाक्षि मुदितभर्गा हतरिपुवर्गा त्वमेव सा दुर्गा ॥

ப்ரணத ஜனதாபவர்கா
க்ருதரணஸர்கா ஸஸிம்ஹ ஸம்ஸர்கா |
காமாக்ஷி முதித பர்கா
ஹதரிபுவர்கா த்வமேவ ஸா துர்கா ||

ப்ராணத ஜனதா (அ) பவர்கா - நமஸ்கரிக்கும் ஜனக்கூட்டங்களுக்கு மோக்ஷத்தைக்கொடுப்பவளும், க்ருதாரணஸர்கா - யுத்தத்துக்கு போகிறவளும், ஸஸிம்ஹஸம்ஸர்கா - ஸிம்ஹத்தோடிருப்பவளும், முதித பர்கா - பரமசிவனை ஸந்தோஷிக்கச் செய்தவளும், ஹதரிபுவர்கா - சத்ருக் கூட்டங்களை நாசம் செய்தவளுமான, ஸா துர்கா - அந்த துர்கையானவள், காமாக்ஷி - ஹே காமாக்ஷி! த்வமேவ - நீ தான்.

1. இதில் அம்பிகையை துர்கா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. துர்காதேவியின் ஆவிர்பாவம், பராக்ரமம், அனுக்ரஹம் முதலியவற்றைப்பற்றி தேவீ மாஹாத்ம்யம், தேவீ பாகவதம் முதலியவற்றில் பார்க்கவும்.

88 श्रवणचलद्वेतण्डा समरोद्दण्डाधुतासुरशिखण्डा ।
देवि कलितान्त्रषण्डा धृतनरमुण्डा त्वमेव चामुण्डा ॥

ச்ரவண சலத் வேதண்டா
ஸமரோத்தண்டா துதாஸுரசிகண்டா |
தேவி கலிதாந்த்ரஷண்டா
த்ருத நரமுண்டா த்வமேவ சாமுண்டா ||

தேவி - ஹே காமாக்ஷி! ச்ரவண சலத் வேதண்டா - யானைகள் ஆடிடும் காதுகளையுடையவளும், ஸமரோத்தண்டா - யுத்தத்தில் பயங்கரமாயிருப்பவளும், துதாஸுர சிகண்டா - அஸுர ச்ரேஷ்டர்களை ஸம்ஹாரம் செய்தவளும், கலிதாந்த்ர ஷண்டா - குடல்களின் கொத்துக்களை (வாயில்) உடையவளும், த்ருத நரமுண்டா - நரர்களின் முண்டங்களை (மாலையாக) அணிந்தவளுமான, சாமுண்டா - சாமுண்டாதேவியும, த்வமேவ - நீயே.

1. இதில் அம்பிகையை சாமுண்டா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சண்டன், முண்டன் என்ற இரண்டு அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததால் காளிகாதேவிக்கு சாமுண்டா என்று பெயர் ஏற்பட்டது. காளிகா தேவியைப்பற்றி தேவீமாஹாத்ம்யம், காளிகா புராணம் முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும்.

89 उर्वीधरेन्द्रकन्ये दर्वीभरितेन भक्तपूरेण ।
गुर्वीमाकिञ्चनार्तिं खर्वीकुरुषे त्वमेवकामाक्षि ॥

உர்வீதரேந்த்ர கன்யே
தர்வீபரிதேன பக்தி பூரேண |
குர்வீம் அகிஞ்சனார்த்திம்
கர்வீ குருஷே த்வமேவ காமாக்ஷி ||

உர்வீதரேந்த்ர - பர்வதராஜனுடைய ஹிமவானுடைய, கன்யே - பெண்ணே! காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தர்வீபரிதேன - (உன் கையிலுள்ள) கரண்டி நிறைந்ததான, பக்தபூரேண - அன்னத்தை நிறம்பக்கொடுப்பதால், குர்வீம் அகிஞ்சனார்த்திம் - அகிஞ்சனனுடைய(ஒன்று மேயில்லாதவனுடைய,பரம ஏழையினுடைய) மிக க்கொடியதான (தாரித்ரியத்தின்) கஷ்டத்தை, த்வமேவ - நீயே, கர்வீகுருஷே - குறைத்துவிடுகிறாய் (போக்கடித்து விடுகிறாய்).

1. இதில் அம்பிகையை அன்னபூர்ணா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அன்னபூர்ணா தேவியானவள் இடது கையில் அன்னம் நிறைந்த பாத்ரத்தையும், வலது கையில் கரண்டியையும் வைத்துக்கொண்டு பக்தர்களுடைய பசியை (தாரித்ரியத்தை)போக்குவதாகச் சொல்லப்படுவாள்.

'ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ண தர்வீம்
துக்தான்ன பூர்ணமிதரேண ச ரத்னபாத்ரம் |
அன்னப்ரதான நிரதாம் நவஹேமவர்ணாம்
அம்பாம் பஜே கனகபூஷண மால்யசோபாம் ||'

அன்னபூர்ணா தேவியைப்பற்றி 'நித்யானந்தகரீ வராபயகரீ என்று ஆரம்பிக்கும் அழகிய ஸ்தோத்ரமொன்று ஸ்ரீ மதாசார்யாளால் செய்யப்பட்டிருக்கிறது.

90 ताडितरिपुपरिपीडन भयहरणनिपुणहलमुसला ।
क्रोडपति भीषणमुखी क्रीडसि जगति त्वमेव कामाक्षि ॥

தாடிதரிபுபரி பீடன-
பயஹரண நிபுண ஹலமுஸலா |
க்ரோடபதி பீஷண முகீ
க்ரீடஸி ஜகதி த்வமேவ காமாக்ஷி ||

தாடித - அவமானப்பட்ட (தோற்கடிக்கப்பட்ட), ரிபு - சத்ருக்களுடைய, பரிபீடன பய - உபத்ரவத்தின் பயத்தை, ஹரண - போக்குவதில், நிபுண - ஸாமர்த்யமுள்ள, ஹல முஸலா - கலப்பையையும் உலக்கையையும் கைகளில் வைத்துக்கொண்டிருப்பவளும், க்ரோடபதி - மஹத்தான வராஹத்தின், பீஷணமுகி - பயங்கரமான முகத்தையுடைவளுமான வாராஹி ரூபத்துடன், த்வமேவ - நீயே, ஜகதி க்ரீடஸி - உலகத்தில் விளங்குகிருய்.

1. இதில் அம்பிகையை வாராஹீ ரூபிணியாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. வாராஹியானவள் லலிதாம்பிகையின் சதுரங்க ஸைன்யங்களுக்கு யஜமானி. துஷ்டநிக்ரஹத்திற்கும் சிஷ்டானுக்ரஹத்திற்கும் பூர்ணமான அதிகாரம் கொடுக்கப்பட்டவள். வாராஹியின் பெயர்கள் பின்வருமாறு:—

'பஞ்சமீ தண்டநாதா ச ஸங்கேதா ஸமயேச்வரீ |
ததா ஸமயஸங்கேதா வாராஹீ போத்ரிணீ சிவா ||
வார்த்தாளீ ச மஹாஸேனுப்யாக்ஞா சக்ரேச்வரீ ததா |
அரிக்னீ சேதி ஸம்ப்ரோக்தம் நாமத்வாதசகம் முனே ||'
(லலிதோபாக்யானம்)

2. வாராஹீ தேவியின் அனுக்ரஹ சக்தியைப்பற்றியும் நிக்ரஹ சக்தியைப்பற்றியும் இரண்டு அஷ்டகங்கள் இருக்கின்றன.

91 **स्मरमथनवरणलोला मन्मथहेलाविलासमणिशाला ।
कनकरुचिशौर्यशीला त्वमम्ब बाला कराब्जधृतमाला ॥**

ஸ்மரமதன வரணலோலா
மன்மத ஹேலாவிலாஸ மணிசாலா |

கனகருசி சௌர்யசீலா
த்வமம்ப பாலா கராப்ஜ த்ருதமாலா ||

அம்ப - தாயே! ஸ்மாமதன - பரமசிவனை, வாண சீலா - பாணி க்ரஹம் செய்துகொள்வதில் பரபரப்புள்ளவளாயும், மன்மத - மன் மதனுடைய, ஹேலாவிலாஸ - ச்ருங்கார விலாஸங்களுக்கு இருப் பிடமான, மணிசாலா - ரத்னக்ருஹமாயிருப்பவளும், கனகருசி - சௌர்ய சீலா - ஸ்வர்ணத்தின் காந்தியை அபஹரிப்பதில் ஸாமர்த் தியமுள்ளவளாயும், கராப்ஜ த்ருத மாலா - தாமரஸ புஷ்பம் போ ன்ற கையில் மாலையை தரித்திருப்பவளுமான, பாலா த்வம் - குமாரீ நீதான்.

1. இதில் அம்பிகையை ஸ்வயம்வராவாக வர்ணிக்கப்பட்டி ருக்கிறது. இந்த ரூபத்திய த்யானம் பின்வருமாறு:—

பலார்க்காயுத ஸம்ப்ரபாம் கரதலே லோலம்பமாலாகுலாம்
மாலாம் ஸந்ததீம் மனோஹரதனும் மந்தஸ்மிதோத்யன்
[முகீம் |
மந்தம் மந்தமுபேயுஷீம் வரயிதும் சம்பும் ஜகன்மோஹினீம்
வந்தே தேவமுனீந்த்ர வந்திதபதாம் இஷ்டார்த்ததாம்
பார்வதீம் ||

92 विमलपटी कमलकुटी पुस्तकरुद्राक्षशस्तहस्तपुटी ।
कामाक्षि पक्ष्मलाक्षी कलितविपञ्ची विभासि वैरिञ्ची ॥

விமலபடீ கமலகுடீ
புஸ்தக ருத்ராக்ஷ சஸ்த ஹஸ்தபுடீ |
காமாக்ஷி பக்ஷ்மலாக்ஷீ
கலித விபஞ்சீ விபாஸி வைரஞ்சீ ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! விமலபடீ - வெண்மையான வஸ்த் ரத்தை யுடையவளும், கமலகுடீ - தாமரஸ புஷ்பத்தை வாஸஸ்தான மாக உடையவளும், புஸ்தக ருத்ராக்ஷ சஸ்த ஹஸ்தபுடீம்-புஸ்தகம்,

ருத்ராக்ஷமாலை இவைகளையுடைய அழகிய கைகளையுடையவ ளும், பக்ஷ்மளாக்ஷீ - அழகிய (இமைமயிர்களோடு கூடிய) கண்களை யுடையவளும், கலிதவிபஞ்சீ - வீணையை (கைகளில்) உடையவளு மான, வைரிஞ்சீ - (ப்ரம்ஹ பத்னியான) ஸரஸ்வதியாக, த்வமேவ - நீயே, விபாஸி - விளங்குகிறாய்.

1. இதிலும் இதனடுத்துவரும் இரண்டு ச்லோகங்களிலும் முறையே ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் ப்ரதானமாயிருக்கும் அம்பிகையின் மூன்று ரூபவிசேஷங்கள் வர்ணிக்கப்பட்டிருக் கின்றன. இந்த ச்லோகத்தில் அம்பிகையை சாரதா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டது.

93 कुङ्कुमरुचिपिङ्गमसृक्पङ्किलमुण्डालि माण्डितं मातः ।
जयति तवरुपधेयं जपपटपुस्तकवराभयाब्जकरम् ॥

குங்குமருசி பிங்கம் அஸ்ருக்-
பங்கில முண்டாலி மண்டிதம் மாத: |
ஜயதி தவரூபதேயம்
ஜபபட புஸ்தக வராபயாப்ஜகரம் ||

மாத: - தாயே! குங்குமருசிபிங்கம் - குங்குமம் போல் சிவந்த நிறத்தையுடையதும், அஸ்ருக் பங்கில - ரத்தம் வழிந்து அழுக்கானதுமான, முண்டாலி மண்டிதம் - (தலை) முண்டங்க ளின் வரிசையால் அலங்கரிக்கப்பட்டதும், ஜபபட புஸ்தகவரா பயாப்ஜகரம் - ஜபமாலை, புஸ்தகம், வரமுத்ரை, அபயமுத்ரை இவைகளையுடைய கராப்ஜங்களுடையதுமான, தவ ரூபதேயம் - உன்னுடைய ரூபமானது, ஜயதி - ஸர்வோத்கர்ஷமாக விளங்கு கிறது.

1. இதில் அம்பிகையின் த்ரிபுரா என்ற ரூபாவிசேஷமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபத்தைப் பற்றி 'ப்ரபஞ்ச ஸாரத்தில் சொல்லப்பட்டிருப்பது பின் வருமாறு:—

'ஆதாம்ராக்காயுதாபாம் கலித சசிகலா ரஞ்ஜிதப்ராம் த்ரிநேத்ராம்
தேவீம் பூர்ணேந்து வக்த்ராம் வித்ருத ஜபவட புஸ்தகாபீத்யபீஷ்டாம் |
பீனோத்துங்க ஸ்தனார்த்தாம் வலிலஸித விலக் ஷமஸ்ருக் பங்கராஜன்
முண்டஸ்ரங் மண்டதாங்கீம் அருணதா துகூலானுலேபாம் நமாமி ||

94 कनकमणि कलितभूषां कालायस कलहशीलकान्तिकलाम् ।
कामक्षि शीलये त्वां कपालशूलाभिरामकरकमलाम्॥

கனக மணி கலித பூஷாம்
காலாயஸ கலஹ ஸீல காந்திகலாம் |
காமாக்ஷி ஸீலயே த்வாம்
கபால ஸூலாபிராம கரகமலாம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! கனகமணி கலித பூஷாம் - தங்கம், ரத்னங்கள் இவையாலான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், காலாயஸ கலஹஸீல - எஃகுடன் சண்டை செய்யக்கூடிய (அதாவது, எஃகின் நிறத்தைத் தோற்கடிக்கும்), காந்திகலாம் - காந்தியை உடையவளும், கபால ஸூலாபிராம கரகமலாம்- கபாலம், ஸூலம் இவற்றுடனிருக்கும் கரகமலங்களையுடையவளுமாக த்வாம் ஸீலயே - உன்னை த்யானிக்கிறேன்.

1. இதில் அம்பிகையின் ப்ரத்யங்கிரா ரூபமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதர்வண வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் பத்ரகாளிக்கு ப்ரத்யங்கிரா என்று பெயர்.

95 लोहितिमपुञ्जमध्ये मोहितभुवनं मुदानिरीक्षन्ते ।
वदनं तव कुचयुगलं काञ्चीसिमां च केऽपि कामाक्षि ॥

லோஹிதிம புஞ்ஜ மத்யே
மோஹித புவ்னம் முதா நிரீக்ஷந்தே |
வதனம் தவ குசயுகளம்
காஞ்சீஸீமாம் ச கேடபி காமாக்ஷி! ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! லோஹிதிம புஞ்ஜ மத்யே - சிகப்பின் ராசிபோன்றதான அனுஹத சக்ரத்தில் (அதாவது, மனதில்) மோஹித புவனம் - உலகத்தை மோஹிக்கச் செய்யும், தவ - உன்னுடைய, வதனம் - முகத்தையும், குசயுகளம் - இரு ஸ்தனங்களேயும், காஞ்சீ ஸீமாம் ச - காஞ்சீ ப்ரதேசத்தையும், கேடபி - சில புண்யவான்கள் மட்டும், முதா - ஆனந்தத்துடன், நிரீக்ஷந்தே - பார்க்கிறார்கள்.

1. இதில் அம்பிகையின் காமகலாரூபம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் ரஹஸ்யமானதாய் இருந்தபோதிலும் சில விபரங்கள் கீழே சொல்லப்படும். அதிகமாகத் தெரிந்துகொள்வதானல் ஸேதுபந்தம், காமகலா விலாஸம், ஆர்தர் ஏவலனுடைய கிரந்தங்கள் இவற்றைப் பார்ப்பதோடு குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது அவச்யம்.

2. இந்த ரூபமானது துரீயஸ்வா ரூபமானது. அதில் முகத்தை ஒரு பிந்துவாகவும், இருஸ்தனங்களே இரண்டு பிந்துகளாகவும், அவற்றிற்குக் கீழாக குஹ்யப்ரதேசத்தையும் த்யானிக்க வேண்டும். அவற்றை இங்கு முறையே வதனம், குசயுகளம், காஞ்சீஸீமா என்று சொல்லப்பட்டது.

'பிந்துனு முகம், பிந்துத்வயேன குசௌ,
[ஸபரார்த்தேன யோனிம்
க்ருத்வா காமகலாம் இதி த்யாத்வா |
(பரசுராம கல்பஸூத்ரம்)

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தததோ
ஹரார்தம் த்யாயேத் யோ ஹரமஹிஷி தே மன்மதகலாம் |'
(ஸௌந்தர்ய லஹரீ)

3. காஞ்சீஸீமா என்றால் காஞ்சி (மேகலே, ஒட்டியாணம்) தரிக்குமிடம், அதாவது யோனி ப்ரதேசம் என்று அர்த்தம்

இதேமாதிரி யோனியை ரசனஸ்பதமென்று கீழே கண்ட காமகலா த்யானத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'அக்ரபிந்து பரிகல்பிதானனும்
அன்யபிந்து ரசிதஸ்தனத்வயீம் |
நாதபிந்து ரசனாசனஸ்பதாம்
ஸௌமிதே பரசிவே பராம் கலாம் ||

4. இம்மூன்று பிந்துக்களின் ஸமஷ்டியான காமகலா ரூபிணியாக அம்பிகையை த்யானிக்கும் பக்தனே லோகங்களை எல்லாம் மோஹிக்கச் செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ ஸத்ய: ஸங்க்ஷோபம் நயதி வனிதா இத்யதிலகு
த்ரிலோகீமப்யாசு ப்ரமயதி ரவீந்துஸ்தனயுகாம் ||"
(ஸௌந்தர்யலஹரீ)

ஆகவே அம்பிகையின் காமகலா ரூபத்தை 'மோஹித புவனம்' என்று இங்கு சொல்லப்பட்டதின் காரணம் சொல்லத்தேவையில்லை.

96 जलधिद्विगुणितहुतवहदशादिनेश्वरकलाश्विनेयदलैः ।
नलिनैर्महेशि गच्छसि सर्वोत्तरकरकमलदलममलम् ॥

ஜலதி த்விகுணித ஹுதவஹ
திசா திநேச்வர கலாச்விநேயதளை: |
நளினைர் மஹேசி கச்சஸி
ஸர்வோத்தர கர கமலதளம் அமலம் ||

மஹேசி - மஹேச்வரியாகிய ஹே காமாக்ஷி! ஜலதி, த்விகுணிதஹுதவஹ, திசா, திநேச்வர, கலா, (ஆ) ச்விநேய தளை: - முறையே 4, 6, 10, 12, 16, 2 தளங்களையுடைய, நளினை: - கமலங்கள் (சக்ரங்கள்) மூலமாக, அமலம் - பரிசுத்தமானதும், ஸர்வோத்தர - எல்லாவற்றிற்கும் மேல்பட்டதுமான, கரகமலதளம் - ஸஹஸ்ர தள கமலத்தை, கச்சஸி - அடைகிறாய்.

1. இங்கு குண்டலினீ ரூபிணியான அம்பிகையானவள் ஷட்சக்ர பேதனம் செய்து ஸஹஸ்ரார கமலத்திற்குப் போவதைச் சொல்லப்பட்டது. இதைப் பற்றி ஸ்ரீமதாசாரியாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில்

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதமாகாசமுபரி |
மனோऽபி ப்ருமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||'

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வரிசையை அனுஸரித்து ஷட் சக்ரங்களை (அவற்றின் தளங்களுடைய கணக்கைச் சொல்லி) இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

2. இந்த (ஷட்) சக்ரங்களை கமலங்களென்றும் சொல்லுவது வழக்கம். அப்படிச் சொல்லுகையில் மூலாதாரத்திற்கு நான்கும் மணிபூரகத்திற்கு ஆறும், ஸ்வாதிஷ்டானத்திற்குப் பத்தும், அனாஹதத்திற்கு பனிரண்டும், விசுத்திக்கு பதினாறும், ஆஞ்ஞாவுக்கு இரண்டும், தளங்களிருப்பதாகச் சொல்லப்படும்.

3. ஜலதியென்றால் ஸமுத்ரம் என்று அர்த்தம். ஸமுத்ரங்களை ஸாதாரணமாக (சதுஸ்ஸாகர, சதுஸ்ஸமுத்ர என்று, நான்கு என்று சொல்லப்படுவதால் ஜலதி என்பது நான்கைக் குறிக்கும். ஹுதவஹ - அக்னி. அக்னியானது கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, என்று மூன்றாகையால், ஹுதவஹம் என்பது மூன்றைக் குறிக்கும். அதை த்விகுணிதமாகச் செய்தால் (இரண்டால் பெருக்கினால்) ஆறு. திக்குகள் பத்து என்று சொல்லப்படுவதால் திசா என்ற பதமானது பத்தைக் குறிக்கும். தினேசர்கள் (ஸூர்யர்கள், ஆதித்யர்கள்) பனிரண்டு பெயர்களென்று சொல்லப்படுவதால் தினேச என்ற பதமானது பன்னிரண்டைக் குறிக்கும். அச்வினீ தேவர்கள் இருவர்களாகையால் ஆச்வினேய என்ற பதமானது இரண்டைக் குறிக்கும்.

97 सत्कृतदेशिकचरणाः सबीजनिर्बीजयोगनिश्रेण्या ।
अपवर्गसौधवलभिमारोहन्त्यम्ब केऽपि तव कृपया ॥

ஸத்க்ருத தேசிக சரணா:
ஸபீஜ நிர்பீஜ யோக நிச்ரேண்யா |
அபவர்க ஸௌத வலபிம்
ஆரோஹந்த்யம்ப கேऽபி தவக்ருபயா ||

அம்ப - ஜகன்மாதாவே! ஸத்க்ருத தேசிக சரணா:— குருநாதருடைய பாதங்களைப் பூஜித்தவர்களான, கேபி- சில பாக்யசாலிகள் ஸபீஜ நிர்பீஜ யோக நிச்ரேண்யா - ஸபீஜயோகம், நிரபீஜயோகம் என்ற மாடிப்படிகள் வழியாக, அபவர்க ஸௌத வலபீம் - மோக்ஷமென்ற மாளிகையின் உச்சிமாடிக்கு தவக்ருபயா - உன்னுடைய அனுக்ரஹத்தினல் ஆரோஹந்தி - ஏறுகிறார்கள்.

1. இதில் பக்தர்கள் யோகாப்யாஸத்தின் மூலமாக அம்பிகையை உபாஸித்து பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை யடைவதைச் சொல்லப்பட்டது. அதற்கு முக்யமான ஒத்தாசையானது குருவின் உபதேசமாதலால் அதை இங்கு 'ஸத்க்ருத தேசிக சரணா:' என்று சொல்லப்பட்டது.

2. ஸௌதமென்றால் பல மாடிகளையுடைய மாளிகை யென்றர்த்தம். வலபீ என்றால் அப்பேர்ப்பட்ட மாளிகையின் மாடிகளில் எல்லாவற்றிற்கும் மேலான மாடியென்றர்த்தம். மோக்ஷத்தைப் பல மாடிகளுடைய மாளிகையாக 'அபவர்கஸௌத' மென்று இங்கு சொல்லப்பட்டது. மோக்ஷமென்பது ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம், கைவல்யம் என்று மெம்மேலான ஐந்து மாடிகளில் எல்லாவற்றிற்கும் மேலானதான கைவல்ய மோக்ஷத்தை 'அபவர்கஸௌதவலபீ' என்று இங்கு சொல்லப்பட்டது.

3. இப்பேர்ப்பட்ட மாளிகையிலுள்ள மாடிகளை ஏறுவதற்காக ஏற்பட்ட (நிச்ரேணீ) மாடிப்படிகளாக யோகத்தைச் சொல்லப்பட்டது. யோகமானது ஸோபானக்ரமமானதாக (படிப்படியானதாக) சொல்லப்படும். அப்படி படிப்படியாக ஏற்வரும் போது முடிவாக ஸபீஜயோகமென்ற ஸம்ப்ரக்ஞாத ஸமாதியானது ஏற்படுகிறது. பீஜமென்பதினல் பூர்வ கர்மாக்களின் ஸம்ஸ்கார வசத்தால் ஏற்படும் வ்ருத்தியானது குறிப்பிடப்பட்டது. இது ஸம்ப்ரக்ஞாத ஸமாதிகாலத்திலுமிருப்பதால் அதை ஸபீஜயோகமென்று சொல்லப்பட்டது. அதற்கு மேலாக அவ்விதமான வ்ருத்தியும் அற்றுப்போல், கர்ம ஸம்ஸ்காரங்கள் இருந்தும் மனதானது நிராலம்பனமானமாகவும் நிர்விகல்பமாகவும் இருப்பதானது அஸம்

ப்ரக்ஞாத ஸமாதியென்றும் நிர்பீஜயோகமென்றும் சொல்லப்படும். இந்த நிலையில்தான் கைவல்ய முக்தி யேற்படுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. (இந்த விஷயங்களைப்பற்றி அறியவேண்டுமானல் பதஞ்ஜலிமஹர்ஷியின் யோகஸூத்ரங்களையும் ராஜயோகத்தைப்பற் றிய புஸ்தகங்களையும் பார்க்கவும்.)

4. இப்படி யோகாப்யாஸத்தினுல் எவ்வளவு முயன்ருலும் மோக்ஷம் கிடைப்பதானது அம்பிகையின் அனுக்ரஹத்தைப் பொரு த்ததாக இருப்பதால் அதையும் இங்கு ‘தவக்ருபயா’ என்று குறிக் கப்பட்டது.

98 अन्तरपि बहिरपि त्वं जन्तुततेरन्तकान्तकृदहंते ।
चिन्तित संतानवतां सन्ततमपि तन्तनीषि महिमानम् ॥

அந்தரபி பஹிரபித்வம்
ஜந்துததேரந்தகாந்த க்ருதஹந்தே |
சிந்தித ஸந்தானவதாம்
ஸந்ததமபி தந்தனீஷி மஹிமானம் ||

அந்தகாந்தக்ருத் - அந்தகனுக்கு (யமனுக்கு) அந்தத்தை (மரணத்தை) உண்டுபண்ணின (அதாவது, மார்க்கண்டேயருக்காக காலனை ஸம்ஹாரம் செய்த) பரமசிவனுடைய, அஹந்தே - அஹங் கார ரூபிணியாயிருக்கும், த்வம் - நீ, ஜந்துததே: - ஸகல ப்ராணிக ளுக்கும், அந்தரபி - உள்ளிலும், பஹிரபி - வெளியிலும் இருந்து கொண்டு, சிந்தித ஸந்தானவதாம் - இடைவிடாத த்யானத்தை யுடைய பக்தர்களுக்கு, ஸந்ததமபி - எப்போதும், மஹிமானம் - மேன்மையை, தந்தனீஷி - அதிகரிக்கச் செய்கிருய்.

1. நிருபாதிக ஸம்வித் ரூபமாயிருக்கும் பரப்ரம்ஹத்திற்கு அத்துடன் அபின்னமாயிருக்கும் சக்தியினுல்தான் அஹம் என்ற உணர்ச்சியானது ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ர காச ரூபமானது விமர்ச ரூபமான கண்ணுடியில் தன் ப்ரதிபிம்பத் தைப் பார்த்தவுடன் அது யாரென்ற ஸந்தேஹம்தோன்றிதான் தான் (அஹமஹம்) என்ற உணர்ச்சியானது ஏற்படுகிறது.

'பரசிவ ரவிகரநிகரே ப்ரதிபலதி விமர்சதர்பணே விசதே |'

(காமகலாவிலாஸம்)

இதிலிருந்துதான் ஜகத் ஸ்ருஷ்டி ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்
ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம
ததைக்ஷத, ஸேயம் தேவதைக்ஷத
ப்ரம்ஹ வா இதமக்ர ஆஸீத்
ததாத்மான மேவ வேதாஹம் ப்ரம்ஹாஸ்மீதி
ஸ ஈக்ஷத இமான் லோகான் ஸ்ருஜே' (ச்ருதி)

2. இப்படி ஸகல ஜகத் ஸ்ருஷ்டிக்கும் காரணமான பரமசிவனுடைய அஹம் பாவத்திற்கு அம்பிகை காரணமாயிருப்பதால் அம்பிகையை அவருடைய அஹந்தா ரூபிணியென்றும் அஹங்கார ரூபிணியென்று சொல்வது வழக்கம்.

'புரஸ்தாத் ஆஸ்தாம் ந: புரமதிதுராஹோ புருஷிகா |'

(ஸௌந்தர்யலஹரீ)

'அஹம்தாம் ஆலம்பே த்ருடதாம் அஹந்தாம் பசுபதே: |'

(நீலகண்டவிஜயம்)

99 कलमञ्जुलवागनुमितगलपञ्जरशुकग्रहौत्कण्ठयात् ।
अम्ब रदनाम्बरं ते बिम्बफलं शम्बरारिणा न्यस्तम् ॥

99 கலமஞ்ஜுள வாகனுமித-
கல பஞ்ஜர சுகக்ரஹௌத்கண்ட்யாத் |
அம்ப ரதனம்பரம் தே
பிம்ப பலம் சம்பராரிணா ந்யஸ்தம் ||

அம்ப - தாயே! கல மஞ்ஜுள - அத்யந்தம் இனிமையான, வாக் - குரலிலிருந்து, அனுமித - ஊஹிக்கப்பட்ட, கள பஞ்ஜர, கழுத்தாகிற கூட்டிலிருக்கும், சுக - கிளியை, க்ரஹௌத்கண்ட்யாத் - பிடிக்கவேண்டுமென்கிற ஆசையினால், சம்பராரிணா - மன்மதனால், ந்யஸ்தம் - வைக்கப்பட்ட, பிம்பபலம் - கோவைப்பழம் போல், தே - உன்னுடைய, ரதனம்பரம் - உதடு (தோன்றுகிறது).

1. அம்பிகையின் உதடானது கோவைப்பழம்போலிருப்பதை இதில் வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்பிகையின் குரலானது அவளுடைய கழுத்திலிருந்து வெளிவருவதைக் கேட்ட மன்மதனானவன் அந்தக் கழுத்தாகிற கூண்டிற்குள் ஒரு கிளி இருந்து பேசுவதாக நினைக்கலானான். அதன்பேரில் அதைப் பிடிக்கவேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. ஸாதாரணமாக கிளிகளைப் பிடிப்பதற்கு அவற்றிற்குப் பிரியமுள்ள ஒரு ஸாமானை அவற்றினெதிரில் வைத்து அதைத்தின்க அவை வரும்போது பிடிப்பது வழக்கம். கிளிகளுக்கு கோவைப்பழத்தில் ப்ரியமதிகமென்று மன்மதனுக்குத் தெரியுமாகையால் அம்பிகையின் உதடாகிற கோவைப்பழத்தை வைத்து அந்தக் கிளியைப் பிடிக்க மன்மதன் ஏற்பாடு செய்ததாக இங்கு வர்ணிக்கப்பட்டது. அம்பிகையின் கழுத்தை கிளிக்கூட்டுக்கும், குரலை கிளியின் குரலுக்கும், அதரத்தை கோவைக்கனிக்கும் உபமிக்கப்பட்டிருக்கிறது.

2. சம்பாஸுரன் என்ற மிகவும் மாயாவியான அஸுரனை ஸம்ஹாரம் செய்ததால் மன்மதனுக்கு சம்பராரியென்று பெயர். இப்படி எல்லாரையும் விட மாயாவியாயும் ஸகல ஜனங்களுடைய மனதையும் மயக்கிக் கலக்குகிறவனுமான மன்மதனே அம்பாளுடைய குரலின் இனிமையைப்பார்த்து மயக்கமடைந்தானென்றால் அதைப்பற்றி அதிகமாக வர்ணிக்கவேண்டியது அனாவச்யம். மேலும், அப்பேர்ப்பட்டவன் வைக்கும் கோவைப்பழமானது ஸாமான்யமானதாக இருக்கக்கூடியதல்லவாகையால் அம்பிகையின் அதரத்தினழகைப்பற்றியும் அதிகம் சொல்லத்தேவையில்லை.

3. ரதனம் என்றால் பல் அதற்கு ஆடையாக இருப்பது ரதனாம்பரம் - உதடு.

4. அம்பிகையின் கழுத்து, குரல், அதரம் இவற்றினழகைப் பற்றி ஸ்ரீமதாசார்யாளும் மிகவும் விசேஷமாக ‘ஸௌந்தர்யலஹரீ’யில் வர்ணித்திருப்பதையும் பார்க்கவும்.

100 जय जय जगदम्ब शिवे जय जय कामाक्षि जय जयाद्रिसुते।
जय जय महेशादयिते जय जय चिद्गगनकौमुदीधारे ॥

ஜய ஜய ஜகதம்ப சிவே
ஜய ஜய காமாக்ஷி ஜய ஜ்யாத்ரிஸுதே |
ஜய ஜய மஹேசதயிதே
ஜய ஜய சித்ககன கௌமுதீ தாரே ||

ஜகதம்ப - ஜகன் மாதாவே! சிவே - பரமசிவனுடைய பத்னியே ஜயஜய - ஸர்வோத்கர்ஷமாக (என்முன்) விளங்கிக்கொண்டிருக்கவும், காமாக்ஷி - ஹே காமாக்ஷி! அத்ரிஸுதே - பர்வதராஜன் பெண்ணே! (ஜயஜய), மஹேசதயிதே - பரமேச்வரனுடைய பத்னியானவளே! (ஜயஜய), சித்ககன கௌமுதீதாரே - சித் என்ற ஆகாசத்திலிருந்து பெருகும் நிலவின் தாரையாயிருப்பவளே! (ஜயஜய).

இதுவரையில் அம்பிகையைப்பற்றிப் பலவிதமாக வர்ணித்திருந்தும் த்ருப்தியடையாத கவியானவர் அம்பிகையைப் பல பெர்யகளாலழைத்துத் தன்னை அனுக்ரஹிக்கவேண்டி, எப்போதும் தம் முன்பாக ஜயத்துடன் விளங்கிக்கொண்டிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிருர். ['ஜயஜய'என்று அம்பிகையை ஜயத்தோடிருக்கவேண்டுமென்று ஆசீர்வதிப்பதானது ஸ்தோத்ரம் செய்வதில் ஒருவிதம்.]

இத்துடன் சதகம் முடிந்தது. அடுத்த ச்லோகமானது பலச்ருதியை (இதைச் சொல்வதினல் உண்டாகும் அம்பிகையின் அனுக்ரஹத்தை) சொல்லுகிறது.

101 आर्याशतकं भक्त्या पठतामार्याकटाक्षेण ।
निःसरति वदनकमलाद्वाणी पियूषधोरणि दिव्या ॥

ஆர்யா சதகம் பக்த்யா
படதாம் ஆர்யா கடாக்ஷேண |
நிஸ்ஸரதி வதனகமலாத்
வாணீ பீயூஷதோரணீ திவ்யா ||

பக்த்யா - பக்தியுடன், ஆர்யாசதகம் - இந்த ஆர்யா சதகத்தை, படதாம் - வாசிப்பவர்களுக்கு, ஆர்யா கடாக்ஷேண ஜகதம்பிகையின் கடாக்ஷத்தினல் (அனுக்ரஹத்தினல்), வதனகமலாத் - அவர்களுடைய முகாரவிந்தங்களிலிருந்து, திவ்யா வாணீ - திவ்யமான (மிகவும் உயர்ந்த) வாக்கானது, பீயூஷதோரணீ - அம்ருததாரை போல், நிஸ்ஸரதி - வெளிவருகிறது (ப்ரவஹிக்கிறது).

[library stamp]